புத்தம் புதிய தேன்சுவை நாவல்

# ரமணிசந்திரன்

ரூ.30/-

அழகிய மங்கையர் நாவல்



# அன்பு மனம் மாறியதேன்

உலகிலேயே மிக அதிகமானவர்கள் படிக்கும் தமிழ்நாவல்






**றொம்ப காலமாகவே, இருபத்து மூன்று வயது சௌமினியின் வாழ்வில், கடந்த சுமார் நாலு ஆண்டுகளாகவே மனதில் உற்சாகம் துள்ளுவது கிடையாது. என்றாலும், அன்றைய தினம் இன்னமும் மோசமாக விடிந்தது போல அவள் உணர்ந்தாள்.**

**ஏற்றாற்போல, போக்குவரத்து நெரிசலில் கம்ப்யூட்டர் வகுப்புக்குத் தாமதமாகப் போய், அங்கேயும் வாங்கி கட்டிக் கொண்டாள்.**

**ஒரு சமயத்தில் முதல் மூன்று பேரில் ஒருத்தியாக வந்து, நல்ல வேலையில் அமர்வாள் என்று எதிர்பார்த்தது மாறி, அந்த கோர்சை, அவள் முடிப்பாளா என்பதே சந்தேகமாக இருப்பதாகப் பாடம் நடத்தும் ஆசிரியர் அன்று கோபமாகக் கூறித் திட்டினார்.**

ஒரு கெட்டிக்காரி நல்ல எதிர்காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறாளே என்ற வருத்தம் அவருக்கு என்பதை அவளால் உணர முடிந்தது. எனவே வகுப்பில் அத்தனை பேர் நடுவே அவர் திட்டியது சௌமினியின் ஆத்திரத்தைத் தூண்டவில்லை. மாறாக, இந்த நிலையை மாற்ற என்ன செய்வது என்று யோசித்தாள்.

ஆனால் யோசித்த பிறகு, இன்னமும் மனம் டல்லடித்துப் போயிற்று.

ஏனெனில், இன்றைய நிலையில் இது பற்றி அவள் செய்வதற்கு ஒன்றுமே இல்லை! காலையில் எழுந்து, சில மிகவும் அத்தியாவசியமான உடல் பயிற்சிகளைச் செய்து முடித்து தாயாருக்குத் தேவையான உதவிகளைச் செய்வாள், குளித்துக் கிளம்பி, காலை உணவை வாயில் அள்ளிப் போட்டபடியே மதியத்துக்கும் எடுத்து வைத்துக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்படுவாள்.

அப்படி அவசரமாகக் கிளம்பியுமே இந்த வகுப்புக்குச் சரியான நேரத்துக்குத்தான் வந்து சேர முடியும். அன்று போலப் போக்குவரத்து நெரிசலில் மாட்டினால், அதுவும் இயலாது.

இந்த வகுப்பு முடிந்ததும் கையோடு கொண்டு வந்திருக்கும் மதிய உணவை அங்கேயே உண்டுவிட்டுக் கிளம்பினால், எழுத்தாளர்

ராஜகெம்பீரனின் வீட்டுக்குப் போய் சேர ஒரு மணியாகிவிடும்.

அங்கே அவளது வேலை தொடங்கும் நேரமும் அதுவேதான். எழுத்தாளரிடம் அவளுக்கு முழுநாள் வேலை கிடையாது. அவருக்கு அப்படி ஆள் தேவை இல்லை என்பார்.

அது மெய்யும் கூட. சில நாட்கள் வேலையில் முழி பிதுங்கினாலும், செய்வதற்கு எதுவுமின்றிச் சும்மா முழித்துக் கொண்டிருக்கும் நாட்களும் இருக்கவே, அது அரை நாள் வேலையாகவே இருந்து விட்டது.

ஆனால், முன்பு எப்போது வேண்டுமானாலும் வரச்சொல்லி, அவருக்குத் தேவையான வேலையை உடனே செய்து வாங்கியது மாறி, மதியம் ஒரு மணிக்குவேலை தொடங்கி, அரை நாள் பணியாக அவள் செய்யத் தொடங்கியது, அவளது படிப்பு முடிந்து, சுமார் இரண்டு ஆண்டுகளாகத்தான்.

அதுவே அவளுக்கும் வசதியாகி, முதல் பாதி நாளை என்ன செய்வது என்று யோசித்து, இந்தக் கம்ப்யூட்டர் கோர்சுக்குச் செல்லவும் முடிந்தது. இந்தப் பயிற்சி முடிந்ததும் பெரிய வருமானம் வரும் என்கிற நம்பிக்கை!

இன்னும் தம்பியின் கல்லூரிப் படிப்பு இருக்கிறது. அந்தச் செலவை இந்த வருமானம் சரிக்கட்டும் என்ற திட்டம்!

ஆனால், கொஞ்ச காலமாக, அந்த நம்பிக்கை ஜெயிக்கும் என்ற எண்ணம் மெல்ல மெல்லத் தேய்ந்து, வகுப்பில் அவளுக்குத் திட்டை வாங்கித் தந்ததோடு, அவளுள் ஒரு நிராசையையும் ஏற்படுத்திற்று.

இந்தக் கோர்சை அவள் நல்லபடியாக முடிக்கப் போவதும் இல்லை, அதற்கான வேலை கிடைத்துப் பெரிய வருமானத்தைப் பார்க்கப் போவதும் இல்லை.

தம்பியின் படிப்புச் செலவு பற்றியோ, நினைக்கவே நடுக்கமாக இருந்தது.

காரணம் எழுத்தாளரும் அவருடைய குடும்பமும்தான்! மதியம் ஆகிவிட்டால், அதற்கு மேல் அவளுக்கு என்று ஏதாவது வேலை இருக்கும். அதற்கு அவகாசம் தேவை என்ற எண்ணமே இல்லாமல் அது, இது என்று ஏதாவது செய்ய வைத்துக் கொண்டே இருந்ததால், அவளுக்கு வீடு வந்து சேர்ந்து, கம்ப்யூட்டர் கோர்ஸ் பற்றிய பயிற்சி எதையும் செய்ய முடியாமலே போயிற்று.



அந்த வகுப்பு பற்றி எழுத்தாளரிடம் எடுத்துக் கூறி நேரம் பற்றி ஏதாவது சலுகை கேட்கவோ, அவளுக்கு அச்சமாக இருந்தது. அந்த அளவுக்கு அங்கே வக்கரிப்பு இருந்தது அவளுக்குத் தெரியும்.

காலை நேரத்திலும் கூட. இதற்குப் பணம் கட்டிவிட்டுப் போ, இதெல்லாம் வாங்கி வா என்று வேறு சொல்லத் தொடங்கி இருந்தார்கள். அவளது நேரம், அவளது அல்ல என்பது போன்ற மனோபாவம்!

ஆனால், எழுத்தாளரிடம் இது போலப் பணி ஒன்று கிடைத்தது, அந்தச் சமயத்தில் அவளுடைய குடும்பத்துக்கே ஒரு வரமாகவே இருந்தது. அதற்கு அவர் கொடுத்த ஊதியமும் வரமேதான்.

நாலு ஆண்டுகளாக அதுவே தொடர்ந்ததும் அப்படித்தான்.

இப்போதும் கூட, பகுதி நேர வேலை, அதற்கான சம்பளம், எதிலும் அவள் குறைப்படவில்லை.

ஆனால் எப்படி நேர்ந்தது என்றே இல்லாமல், இந்த நேரக் குறுக்கீடுதான் இப்போது அவளுக்குப் பெரும் பிரச்சினையாக மாறிக் கொண்டிருந்தது.

கம்ப்யூட்டர் வகுப்பில் வாங்கிக் கட்டிக் கொண்டது போதாது என்று, எழுத்தாளரின் வீட்டை அடையும்போதே, எழுத்தாளரின் தோற்றம் அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது.

வெளேரென்ற வெண்ணிற ஜிப்பாவில் அவர் வெளியே செல்லத் தயாராக இருந்தார்.

வெளியே போகிறேன், சீக்கிரமாக வா என்று முன்னதாக ஒன்றும் சொல்லவில்லை, என்றாலும் இப்போது தாமதம் என்று திட்டப் போகிறாரோ என்று அவள் யோசிக்கும்போதே, ராஜகெம்பீரன் பேசினார்.

"இதோ பார், சில குறிப்புகளை எடுத்து வரிசைப்படுத்தி, கம்ப்யூட்டர் மேஜை மேல், வைத்திருக்கிறேன். அதை பயன்படுத்தும் விதமாக, உன்னால் ஏதேனும் ஒரு கதைக்களனை உருவாக்க முடிகிறதா என்று பார். ஆழ் மனதில் குறிப்புகளை உள்வாங்கிச் செய்ய வேண்டிய வேலை. சும்மா ஏனோ தானோ என்று இராமல் கவனத்தோடு செய். முயற்சிதானே செய்யச் சொன்னேன் என்று சோம்பேறியாய்ச் சும்மா இருந்து விடாதே. நான் செய்வதானால் நிமிஷத்தில் செய்து விடுவேன். எனக்கு அவகாசம் இல்லை. ஒரே பிசி. இப்போது பப்ளிஷரோடு கொஞ்சம் வேலை

இருக்கிறது. அப்புறம் அவரோடு வெளியே செல்ல வேண்டும். வர நேரமாகும். உனக்கும் அவ்வளவு நேரம் இருக்கிறது அல்லவா? நன்றாக யோசித்துச் செய்து வை" என்று ஏவிவிட்டு எழுத்தாளர் கிளம்பினார்.

அவரது புத்தகங்களைப் பிரசுரிக்கும் பதிப்பக உரிமையாளரிடம், எழுத்தாளர் ரேட் கூட்டிக் கேட்பதாக இருக்கிறார் என்பது அவள் அறிந்ததே. அவர் நினைத்தது நடக்கவில்லை என்றால், அருகில் இருக்கும் எல்லோரும் வாங்கிக் கட்ட நேரும். முக்கியமாக, அவரது வேலை அறையிலேயே இருக்கும் அவள்!

பெருமூச்சை அடக்கியபடி, மேஜையில் ராஜகெம்பீரன் எடுத்து வைத்திருந்த குறிப்புகளை எடுத்துப் பார்த்த சௌமினிக்கு மேலும் எரிச்சல் வந்தது. எல்லாமே அவள் ஆராய்ந்து, தேடி எடுத்து வைத்த குறிப்புகளே!

ஹோட்டல் தொழில் பற்றிய குறிப்புகள், உலகின் எந்தெந்த பகுதியில் வழிப் போக்கருக்கு பசி தீர்க்கும் வெறும் உணவுச் சத்திரங்களாக இருந்தவை, எப்படியெப்படி உணவு விடுதிகளாகி, இன்றைய பெரிய நட்சத்திர ஹோட்டல்களாக மாறின., எங்கெங்கே பெரிய ஹோட்டல்கள், என்னென்ன வசதிகளோடு இருக்கின்றன என்கிற புள்ளி விவரங்களை ஆராய்ந்து அவள் எடுத்து வைத்த குறிப்புகள்.

சரியாகச் சொல்வதானால் கம்ப்யூட்டர் மூலம் குறிப்பெடுக்கும் வேலை மட்டும்தான் அவளுடையது என்றிருந்தார் ராஜகெம்பீரன். அததின் மெய் பொய் ஆராய்ந்து தொகுத்து வைத்தது, அவளது இயல்பு, செய்வதைத் திருந்தச் செய்யாவிட்டால் அவளுக்குத் தூக்கம் வராது. அப்படி அவள் சரி பார்த்து வைத்த குறிப்புகள்தான் அவைகளும்.

இப்போது அதை வைத்துக் கதைக் களனை உருவாக்கு என்கிறாரே! அடுத்து கதையையே எழுதி வைக்கச் சொல்லுவாரோ? கதை தொடர்பான எல்லாமே அவரது வேலை அல்லவா?

எரிச்சல்பட்டபடி, சௌமினி வேலையைத் தொடங்கினாள்.

மனதில் எரிச்சல் மண்டியிருந்ததால், வேலை ஓட மறுத்தது.

அத்தோடு, எழுத்தாளர் எந்தக் காலக் கட்டத்துக் கதை எழுதுவதாக இருக்கிறார் என்பதோ, பொருளாதாரத்தில் எந்த வர்க்கத்தாரைப் பாத்திரங்களாகக் கொண்டு எழுதப் போகிறாரோ



என்று எதுவுமே தெரியாமல் அந்தக் கதைக்குரிய களத்தை எப்படி உருவாக்கி வைப்பது?

ஏழைகளைப் பற்றிக் கண்ணீர் சிந்த வைக்கும் சில பரிதாபப் பகுதிகள் அங்கங்கே ராஜகெம்பீரனின் கதைகளில் இருக்கும் என்றாலும், அதற்கு மேல் அவர்களைப் பற்றி அவர் எழுதியது இல்லை.

எனவே, மத்திய தரம், பணக்கார ரகம் இரண்டு வர்க்கமும் சென்று வரக்கூடிய விதமான ஹோட்டல்களை தரம் பிரித்துக் குறித்து வைத்தாள்.

ஆனால், ராஜகெம்பீரன் சார் கேட்ட கதைக்களன் இதுவல்ல.

இரண்டு தரத்தாரும் அடிக்கடிப் போய் வந்து இருக்கக்கூடிய ஹோட்டல்களின் அன்றாடச் செயல்பாடுகளைப் பற்றிய தெளிவான விவரங்கள். அவருடைய நாயகன், நாயகியர் அங்கே செல்லும்போது இயல்பாக என்னென்ன சம்பவங்கள் நடக்கக் கூடுமோ, அதற்கான ஹோட்டல் நடைமுறைகள்!

அவரது நாயகன், நாயகியின் இயல்பு தெரியாமல், இந்தக் குறிப்புகளை எடுப்பது, கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி, ஒரே திகைப்பாக இருந்தது.

கதையின் கரு தெரிந்தால் ஏதோ கொஞ்சம் பண்ணலாம், இப்போது...

ஆனால், இது அவள் செய்ய வேண்டிய வேலையே இல்லை எனும்போது, அந்த வேலையில் ஈடுபட சௌமினியின் மனம் சண்டித்தனம் செய்தது.

எப்படியும் எழுத்தாளர் இந்த வேலையை அவளிடம் செய்யச் சொன்னது நியாயமே கிடையாது. மறுக்கிற துணிவு அவளுக்கு வராது என்ற தைரியத்தில் இட்ட பணி!

என்ன அநியாயம்!

ராஜகெம்பீரன் சார் தரும் சம்பளப் பணத்துக்காக அவருக்குப் பணிந்து போக வேண்டிய நிலையில் இருந்து கொண்டு, இப்படியெல்லாம் யோசிப்பது கூட, மடத்தனம்! சொல்லப் போனால், இதுவும் அவர் கதை எழுதுவதற்கு உதவிதானே? அதுதானே அவளது பணியின் அடிப்படையும்? ஆனாலும்...

குரங்கை நினைக்காமல் மருந்து குடிக்க முயன்றவன் கதை போல, இந்த நியாய அநியாயம் பற்றிய நினைவே வேண்டாம் என்று

ஒதுக்கிவிட்டு, வேலையைத் தொடர முயன்றால், மனதுக்குள்ளே நடந்த போராட்டத்தில் சௌமினிக்குத் தலையை வலித்தது.

வேலையின் நடுவே, எழுத்தாளருடைய மருமகள் வாசந்தியின் குரல் கேட்டபோது, எப்போதும் போல வேலையில் இடையூறாக அவளுக்குத் தோன்றவில்லை. மாறாக தக்க சமயத்தில் கிடைத்த சின்ன 'பிரேக்' ஆகவே எண்ணினாள்.

"என்னக்கா?" என்று உதட்டில் சிறு புன்னகையோடு அவளை நோக்கி கேட்டாள்.

"வந்து... முக்கியமான பணி ஏதாவது இருக்கிறதா?" என்று வினவினாள் வீட்டு மருமகள் "இல்லை என்றால், வாயேன், பேசிக் கொண்டே காஃபி குடிக்கலாம்"

சுயலாபம் இல்லாமல் இவள் ஒரு விரலைக் கூட அசைக்க மாட்டாள்! காஃபி?

"சார் கொஞ்சம் வேலை செய்து வைக்கச் சொல்லியிருக்கிறார்" என்றாள் சௌமினி.

கதைக்களன் என்றெல்லாம் இவளிடம் சொல்வது சரியாகுமோ என்னவோ?

"ஓகோ! ஆனால், அந்த இடத்தில் பூஜை போட்டுத் திரும்பி வர மிகவும் கால தாமதம் ஆகுமாம். அதனால், கொஞ்ச நேரம் கழித்துக் கூட அதைச் செய்யலாம்..."

"பூஜையா? பதிப்பகத்தாரோடு பேசப் போவதாகச் சொன்னாரே!" என்று வியப்புடன் கேட்டாள் சின்னவள்.

"அது... ஆமாம், ஆமாம். பூஜைக்கு புத்தகம் போடுகிறவருக்கும் அழைப்பு உண்டு. அதனால் அங்கேயே அவருடனும் பேசுவார். எல்லாம் முடிந்து திரும்பி வர, ரொம்ப ரொம்பத் தாமதம் ஆகிவிடும், அதனால்..." என்று இழுத்தாள் வாசந்தி.

எழுத்தாளர் திரும்பி வரத் தாமதம் ஆகும் என்பதிலேயே சௌமினி சோர்ந்து போயிருந்தாள்.

எப்படியாவது வேலையை சீக்கிரமாக முடித்துவிட்டு வீட்டுக்குப் போய்க் கம்ப்யூட்டர் வகுப்புப் பாடத்தைப் பயிற்சி செய்ய வேண்டும் என்று எண்ணி வந்தவள்.

எழுத்தாளர் தாமதமாக வந்து, இந்த வேலையைச் சரிபார்த்து, நினைத்து நினைத்து அவர் சொல்லும் பணிகளை முடித்து... எப்போது வீட்டுக்குப் போவது?



சும்மாவே டல்லடித்தவளுக்கு, இப்போது தலை முணுமுணுவென்று வலிக்கத் தொடங்கியது.

ஹாலுக்குப் போய்க் காஃபியைக் குடித்துவிட்டு, அவள் சொல்லும் ஓரிரு வேலைகளை முடித்துவிட்டு வரலாம், இந்தக் காஃபி ஒன்றும் ஓசியாக வராது!

நெற்றிப் பொட்டை அழுத்தித் தேய்த்துவிட்டபடி சௌமினி எழுந்து போனாள்.

முகம் மலர, "இந்த சோஃபாவில் டீபாய் முன்னே உட்கார், சௌமினி. நான் கலந்து கொண்டு வருகிறேன். அதற்குள் தீபுக் குட்டிக்கு கொஞ்சம் கணக்குகள் போட்டுக் கொடும்மா. இது ஒன்றுமே தெரியவில்லையாம்!" என்றுவிட்டு சமையல் அறைக்குள் போனாள் எழுத்தாளருடைய மருமகள்.

தயாராக டீபாய் மேல் இருந்த புத்தங்களைப் பார்த்ததும், இதற்காகத்தானா இந்தக் காஃபி என்று உள்ளூர ஏளனமாக எண்ணிக் கொண்டாள் சௌமினி.

ஆனால் அவளுக்குக் கணக்குப் போட பிடிக்கும்.

வாசந்தி காஃபியைக் கொண்டு வருமுன், சிறு மாறுபாடுகளுடன் கூடிய மூன்று கணக்குகளை தீபிகாவுக்கு விளக்கிச் சொன்னவாறே போட்டுக் கொடுத்தாள்.

வாசந்தி கொண்டு வைத்த காஃபியைக் கையில் எடுத்தபடி, "பார்த்தாயா? எல்லாமே இதேபோல இலகு விதம்தான். இனி நீயே போட்டுக்கொள்" என்று விட்டு சூடான காஃபியை ஒரு மடக்கு அருந்தினாள்.

தலைக்குள் சம்மட்டியாய் அடித்த வலிக்கு, அந்தச் சூடான காஃபி பெரிதும் இதமாக இருந்தது.

அப்பாடி என்று கண்மூடி அதை அனுபவித்தவள், தாய்க்கும் மகளுக்கும் இடையே நடந்த பார்வைப் பரிமாற்றறத்தைக் கவனிக்கவில்லை.

அவள் கண்ணைத் திறந்து பார்த்தபோது, தீபிகா கையை உதறிக்கொண்டு எழுந்து நின்றிருந்தாள் "அய்யோ ஆன்ட்டி, என்னால் முடியாது. எனக்குக் காலையில் இருந்தே ஒரே கைவலி, எங்க டீச்சர் பாட்டுக்கு நாலு 'சாப்டர்' முழுதும் போட்டுக் கொண்டு வர வேண்டும் என்று வீட்டுப் பாடமாகக் கொடுத்து விட்டார்கள்! அதனாலே நீங்களே முழுதும் போட்டு விடுங்க. எங்க டீச்சர்

கையெழுத்தெல்லாம் பார்க்கவே மாட்டாங்க" என்றாள் சிறுமி.

"கொஞ்சம் போட்டுத்தான் கொடேன், சௌமினி. தேவைப்பட்டால், மாமாவிடம் நான் சொல்லிக் கொள்கிறேன்" என்றாள் மருமகள்.

தீபிகாவாவது சின்னப் பெண். படிப்பின் முக்கியத்துவம் தெரியாதவள். ஆனால், அவளுடைய தாய் அப்படியில்லையே! அவளும் சேர்ந்து, மகளான பள்ளி மாணவியின் வீட்டுப் பாடத்தை, மற்றவரைக் கொண்டு செய்ய முயற்சிக்கிறாளே! என்ன மடத்தனம்!

"இல்லை அக்கா. கணக்கு பாடம் என்றால், அதை அவளே செய்து பழகினால்தான், கணக்கு மனதில் நிற்கும். இந்திந்த கணக்கை இன்னின்ன மாதிரிச் செய்ய வேண்டும் என்பதே, இப்படி நிறையக் கணக்குகளைப் பலமுறை செய்யும்போதுதான் புரியும். அதனால் தீபிகாவே செய்யட்டும்" என்று சற்று அழுத்தமான குரலில் கூறிவிட்டு, மீதிக் காஃபியை வாயில் ஊற்றிக்கொண்டு சௌமினியும் எழுந்துவிட்டாள்.

"இல்லை சௌமினி. இந்த ஒரு தடவை செய்து கொடேன். தீபுவுக்கு கையை வலிப்பதால்தான் கேட்கிறேன். அதுபோக, மேப் குறித்து விளக்கமும் எழுத வேண்டுமாம். அவளுக்குக் கை வலிப்பதால், அதையும் செய்து கொடுத்துவிட்டுப் போ இன்று ஒருநாள் எப்படியாவது செய்து கொடு" என்றாள் வாசந்தி வற்புறுத்தலாக.

சௌமினிக்குள் சினம் எட்டிப் பார்த்தது.

ஒரு கப் காஃபியைக் கொடுத்துவிட்டால், மகளின் வீட்டுப் பாடம் முழுதையும் அவள் தலையில் கட்டி விடலாமா? மகளுக்குப் பதிலாகப் பரீட்சையிலும், சௌமினியையே எழுதச் சொல்லுவாளா? மாமனார் கதைக் களனை எழுதச் சொல்லுகிற மாதிரியா?

ஆனால், சம்பளம் தருகிறவர் தந்த வேலையை மறுப்பது கடினம்.

"இல்லை அக்கா, சாருக்கு அந்த வேலை முக்கியம். அதை முடித்தாக வேண்டும்" என்றுவிட்டுத் திரும்பிப் பாராமலே போய்விட்டாள்.

அலுவல் அறைக்குச் சென்று கம்ப்யூட்டரின் முன்னே உட்கார்ந்தவளுக்கு உடனே அந்த வேலையைத் தொடங்கும் மனநிலையும் வரவில்லைதான்.

ஆனால் இப்படி இருக்கக்கூடாது என்று தன்னைத்தானே தூண்டி



விட்டுக்கொண்டு 'லாகின்' செய்தால் அடுத்த வினாடியில் மின்சாரம் போய்விட்டது.

ஐயோடா, இது வேறேயா என்று அலுத்துக் கொண்டபோது, பக்கத்து வீட்டில் ஏதோ புதுப்படப் பாடல் முழங்குவது கேட்டது.

எதற்கும்... என்று வெளியே போய் எட்டிப் பார்த்தாள். பக்கத்து வீட்டில் இருந்து வெளியே வந்த பணியாளரிடம் விசாரித்தால் அங்கே மின்சாரம் போகவே இல்லை என்றான் அவன்.

உள்ளே சென்று, மின் விநியோக அலுவலகத்துக்கு ஃபோன் பண்ணலாம் என்று சொன்னால், ஏற்கனவே தானே புகார் பண்ணிவிட்டதாக எழுத்தாளருடைய மருமகள் வாசந்தி கூறினாள்.

"சரிக்கா ஒரு பத்து நிமிஷம் பார்ப்போம். பிறகும் பவர் வரவில்லை என்றால், மறுபடியும் கேட்கலாம், நான் வேண்டுமானால் பண்ணுகிறேன்" என்று அலுவல் அறைப் பக்கம் திரும்பினாள், அவசரமாக "வேண்டாம் வேண்டாம்" என்றாள் வீட்டு மருமகள்.

"தேவைப்பட்டால் நானே செய்கிறேன், சௌமினி. இந்த வீட்டுக்காகப் புகார் கொடுக்க நீ யார் என்பார்கள். ஆனால் சௌமினி, மின்சாரம் வரும்வரை, நீ மாமாவின் வேலையைச் செய்ய முடியாதுதானே? அந்த நேரத்தில் இவளுக்கு உதவி பண்ணேன். எப்போது மின்சாரம் வந்துவிட்டாலும், அந்த வினாடியே தீபு பாடத்தை விட்டுவிட்டு நீ போய் விடலாம். ப்ளீஸ் சௌமினி, தீபிகாவுக்குக் கைவலி என்பதால்தான் கேட்கிறேன்... வந்து... நானே பார்ப்பேன்... ஆனால் சுட்டுப் போட்டாலும் எனக்குக் கணக்கு வராது. என்ன செய்வது? ப்ளீஸ்யா!" என்று காலைப் பிடிக்காத குறையாகக் கெஞ்சினாள் வாசந்தி.

இதற்கு மேல் எப்படி மறுப்பது?

மகள் கைவலிப்பதால் படுத்துக்கொள்ளப் போவதாகச் சொல்லிப் போய்விட்டாள்.

கைவலிக்கப் படுப்பானேன் என்று பெற்றவளே கேட்கவில்லை. எங்கே வலி, என்ன மருந்து போடலாம் என்று யோசிக்கவுமில்லை.

செல்ஃபோனில் அன்னை ஏதோ சீரியலைப் பார்த்துக் கொண்டிருக்க, மகள் தீபிகாவின் வீட்டுப் பாடத்தை சௌமினி செய்யத் தொடங்கினாள்.

முதலில் எரிச்சலுடனேயே தொடங்கியபோதும், கணக்குப் பாடம் அவளுக்குப் பிடித்தமானது என்பதால், சின்னச் சின்ன மாறுபாடான

முடிச்சுகளுடன் கூடிய கணக்குகளைச் செய்ய செய்ய, அந்தச் சாப்டர் முடியும்வரை, சௌமினிக்கு வேறு நினைவு வரவில்லை.

அடுத்த அத்தியாயத்தை தொடங்கும்போது அவளுக்கு நடப்பு உறுத்த, வாசந்தியைத் தேடிப் போனாள். "அக்கா அரை மணி நேரத்துக்கு கூடவே ஆகிவிட்டதே! இன்னமும் மின்சாரம் வரவில்லையே! திரும்பவும் ஃபோன் பண்ணினீர்களா?" என்று வினவினாள்.

"இதோ! நானும் ஃபோனும் கையுமாகவேதான் இருக்கிறேன். நீ கேட்கவே தேவையில்லை, சௌமினி. சீரியலின் ஒவ்வொரு விளம்பர இடைவேளையின்போதும், இரண்டிரண்டு தரம் கூப்பிட்டுக் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறேன். அங்கே ஆள் இல்லையாம். வந்ததும் முதல் வேலையாக நம் வீட்டுக்கு அனுப்புகிறார்களாம். அதுவரை நீ தீபு பாடத்தை பாரேன். அடுத்த சாப்டரை அக்காவிடம் கொடு கண்ணு!" என்று படுக்கையறையை விட்டு வெளியே வந்து நின்ற மகளை வாசந்தி ஏவினாள்.

இடையிடையே மின் வாரித்துக்குப் ஃபோன் செய்யச் சொல்வதும், அது பற்றிய பேச்சும் வாதாடலுமாக, தீபிகாவின் கணக்குப் பாடம் முடியும்போது, வெளியே இருட்டவே தொடங்கியிருந்தது. 'எமர்ஜென்சி' விளக்கின் ஒளியில் கணக்கை முடித்தவள், வாசந்தி கொண்டு வந்து வைத்த கத்தை 'மேப்'கள் மற்றும் அது தொடர்பான புத்தகங்களை ஒதுக்கி வைத்துவிட்டு எழுந்தாள்.

இதையெல்லாம் செய்யத் தொடங்கினால், முடிவதற்கு ஏழு, ஏழுரை கூட ஆகலாம்! தலை இப்படி வலிக்கையில், அது போலெல்லாம் வேலை செய்வது முடியாத, இயலாத காரியம்!

"இன்னும் பவர் வரக் காணோம். இனி மின்சார வாரியத்திலிருந்து ஆள் வந்து ரிப்பேர் செய்து, அதன் பிறகு சார் கேட்ட வேலையைச் செய்வது ரொம்பக் கடினம் வாசந்தி அக்கா. அதனால் நான் வீட்டுக்குக் கிளம்புகிறேன். சார் வந்ததும், எதனால் அவர் சொல்லி சென்ற வேலையைச் செய்யவில்லை என்று சொல்லிவிடுங்கள்" என்று சௌமினி வீட்டுக்குக் கிளம்ப ஆயத்தம் செய்தாள்.

கையைப் பிடித்து நிறுத்தாத குறையாக, வழியை மறைத்து நின்று "தீபு பாடத்தில் இந்த மேப் மட்டும்தானே இருக்கிறது? அதையேனும் முடித்துக் கொடுத்துவிட்டுப் போயேன்" என்றாள் வாசந்தி.

'அதையேனுமா?' அப்படியானால் இவ்வளவு நேரம் சௌமினி செய்தது எல்லாம், அவளது சொந்த உல்லாசத்துக்குச் செய்ததாக எண்ணமா?

சுள்ளென்று ஆத்திரம் வந்தது சின்னவளுக்கு.

மகளின் வீட்டுப் பாடம் முடிவதுதான் வாசந்திக்கு முக்கியமாக இருக்கிறது, ஆனால், தான் செய்து கொடுத்திருப்பதே மிக அதிகமாக சௌமினிக்குத் தோன்றியது அரைநாளே வீணாகி இருக்கிறதே!

அது மட்டுமல்ல, தீபிகாவின் பாடத்தில் இந்தக் கத்தை 'மேப்'கள், தொடர்பான விளக்கம் என்று செய்கிற நேரத்தில் ராஜகெம்பீரன் சாரும், கூடவே மின்சாரமும் வந்துவிட்டால், அவரது வேலையையும் முடிக்கச் சொல்லுவார்.

அவரிடம் மறுப்பது ரொம்பக் கஷ்டம். அதையும் முடித்துக் கிளம்புவதானாலோ, எட்டு ஒன்பது மணிக்கு மேலே ஆகிவிடும். அதற்கு மேல், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும்.

ஒரு தெரு தள்ளித்தான் அவளது வீடு என்றாலும், எல்லாம் குடியிருப்பு பகுதி. ஏழரை எட்டுக்கொல்லாம் ஆள் நடமாட்டம் அடங்கிவிடும். தனிமையில் செல்லும்போது, அவளது இதயம் அடிக்கிற சத்தம் அவளுக்கே கேட்கும்!

கூடவே அவளது கம்ப்யூட்டர் பாடப் பயிற்சி வேறு பாக்கி இருக்கிறதே, இன்று செய்தே ஆக வேண்டும்! எப்படியும்!

எனவே, எழுத்தாளருடைய மருமகளிடம் பிடிவாதமாக மறுத்துவிட்டு அவள் முகத்தைச் சிணுங்குவதைக் கவனியாதவள் போல தன் பொருட்களை எடுத்துக் கொண்டு தீபிகாவிடம் 'பை' சொல்லிவிட்டு சௌமினி வீட்டுக்குக் கிளம்பிப் போனாள்.

அப்போதே மழைக்கால இருட்டும் தனிமையும் அவளை மருட்டின.

கண்ணனைத் துணைக்குக் கூப்பிடலாம் என்றால், அவன் படிக்கிறவேளை, பத்தில் நல்ல மதிப்பெண் எடுத்தால்தான் அடுத்த ஆண்டில் விருப்பப்பட்ட பாடம் எடுக்க முடியும்! அதனால் அவனைத் தொல்லை பண்ணக்கூடாது!

நடுக்கத்தை சமாளித்து, ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்த பிறகுதான் அவளுக்கு நல்ல மூச்சு வந்தது.

அப்பாடி என்று நன்றாக மூச்சு விட்டபடி, தன் சாவியைக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்றால், தாயார் சமையல் அறையில் ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

அரவம் கேட்டு, “இன்னும் பத்து நிமிஷங்களில் எல்லாம் தயாராகிவிடும்” என்று குரல் கொடுத்தாள் அன்னை.

“அவசரமில்லை அம்மா, இந்தக் கம்ப்யூட்டர் கோர்ஸ் பாடத்தை முடித்துவிட்டு நான் வரவும் சற்று நேரமாகும்” என்றுவிட்டுத் தன் அறையை நோக்கி சௌமினி நடந்தாள்.

கண்ணனின் அறையைத் தாண்டி நடக்கும்போது எதிர்பாராத ஓர் ஒலி அவளை நிற்க வைத்தது.

ஒருகணம் யோசித்துவிட்டு, தம்பியின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவளுக்கு ‘ஜிவ்’வென்று சினம் எகிறியது.

“என்னடா இது? படிக்காமல் என்ன விளையாட்டு?” என்று கோபமாகக் கேட்டாள்.

அவன் விளையாட்டிலேயே குறியாக இருக்கவும் “படித்து முடித்துவிட்டுத்தான் செல்லை எடுப்பேன் என்று நீ ப்ராமிஸ் பண்ணினாயே. அதை நம்பித்தானே இந்த செல் வாங்கித் தந்... தந்தோம்?” என்று விடாமல் கேட்டாள் தமக்கை.

பெருமளவு அவளது வருமானத்தில் வாங்கியதுதான். ஆனால், அப்பா இருந்து அவளைப் படிக்க வைத்தார். தான் செய்தது என்று சொன்னால் ரசக் குறைவாகத் தோன்ற மாற்றிச் சொன்னாள்.

ஆனால் “எல்லாம் படித்தாயிற்று” என்று தம்பியிடம் இருந்து அலட்சியமாக பதில் வந்தது.

“அளக்காதேடா. பத்தாம் வகுப்பு பாடம் எவ்வளவு இருக்கும் என்று எனக்கும் தெரியும், படிப்பை...” என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒரு வினாடிக் கவனக் குறைவில் அவனது போர்வீரன் அடிபட்டு விழுந்துவிட, ஆத்திரத்துடன் கத்தினான் கண்ணன்.

“ஏய், உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போடீ! “என் விஷயத்தில் தலையிடாதே!” என்றான் உதாசீனமாக அவன்.

தம்பியின் பேச்சு மனதை வருத்த, தாயிடம் ஓடினாள் பெண்.

நடந்ததைச் சொன்னால் பெற்றவள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை “எல்லாம் படிப்பான் சௌமி. உன்னைப் படிக்கச் சொன்னேனா? நீ படித்து நல்ல மார்க் வாங்கவில்லை? அதுபோல



அவனும் படிப்பான்” என்றாள் அமைதியாக.

“இல்லையம்மா... மதிப்பெண் குறைந்திருக்கிறது” என்றாள் மகள் விடாமல்.

அப்போதும் அமைதியாகவே “இருக்கட்டும்மா. புதுசெல்ஃபோன் மோகம், கொஞ்ச நாளில் புரிந்து கொண்டு அவனாகவே படிப்பான்” என்றாள் சுந்தரி.

“அம்மா, பையன் என்று அவனுக்கு செல்லம் கொடுக்காதீர்கள். நல்லதில்லை” என்று சௌமினி எச்சரிக்கவும், தாயின் அமைதிப் பூச்சு கொஞ்சம் கலைந்தது.

உணர்ச்சி காட்டாத குரலில், “நான் இரண்டு பேரையும் ஒரே மாதிரிதான் நினைக்கிறேன் நடத்துகிறேன். ஏன், நாலைந்து வரன்கள் வந்தன. அவர்களில் ஒருத்தனை மணந்துகொள் என்று உன்னிடம் சொன்னேனா? உன் மனநிலைக்கு மதிப்புக் கொடுத்து சும்மா இருக்கவில்லையா?” என்று தாயார் சொல்லவும், மகளுக்கு வாயடைத்துப் போயிற்று.

அன்றாட வாழ்வில் அம்மா எல்லாவற்றையும் மறந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தாள். அப்படியில்லை என்று காட்டியதோடு, மகளுக்கும் என்ன மாதிரி நினைவுபடுத்தி விட்டாள்.

ஆனால் சௌமினிக்கு அவனை, இன்னொருவர் நினைவுபடுத்த வேண்டுமா?

‘மூழ்குகிற கப்பலை விட்டு ஓடுகிற எலி’ என்றானே, அதுதான் என்றேனும் மறக்குமா?



## அன்பு மனம் மாறியதேன் 2

இயல்பாக இருப்பது போலக் காட்டி, ஒருவாறு இரவு வரை சமாளித்துவிட்டுப் படுக்கையில் விழுந்த சௌமினிக்கு முதலில் அழுகைதான் வந்தது.

என்ன மாதிரி வலியை மனதுள் புதைத்து வைத்துக்கொண்டு வாழ்க்கையை இயல்பாக நடத்திக் கொண்டு இருந்தாள்! எல்லாமே இந்த ஒரு வார்த்தையில் பொடிப்பொடியாகி விடுமா? பொடியாகித்தான் போயிற்று.

பழைய நினைவுகள் வருவதைத் தடுக்க முயன்று பார்த்தவள் அது முடியாது என்று கண்டதும் அந்த முயற்சியைக் கைவிட்டு, நினைவுகளை அவைகளின் போக்கிலேயே விட்டுவிட்டாள்.

வருத்தும் மொழிகள் பல கூறியிருந்தாலும், அவ்வப்போது கத்தியை விட்டுத் திருகுவது போன்ற வலியை எழுப்புவது, தனசீலனின் இந்த வார்த்தைகள்தான்!

மூழ்குகிற கப்பலை விட்டு ஓடுகிற எலி!

என்ன வெறுப்புடன் சொன்னான்!

"மூழ்குகிற கப்பலை விட்டு ஓடுகிற எலி என்று கேள்விப்பட்டிருக்கிறேன், அது யார் யாரைக் குறிப்பிடுவது என்று இப்போதுதான் தெளிவாகத் தெரிகிறது!" என்றான் தனசீலன், அன்று கசப்பும், வெறுப்புமாக.

அவன் யாரைச் சொல்லுகிறான் என்று, அவளுக்குத் தெரியாமல் இல்லை.

ஆனால், அவளைப் பார்த்து, ஒருவர் அதுவும் அவன், அப்படிச் சொல்லலாமா?

'நமக்கு இரு மனமே கிடையாது. ஒரே மனம்' என்றெல்லாம் வசனம் பேசிவிட்டு, அவனால் அப்படிப் பேச, எப்படி முடிந்தது?

அவனது பேச்சின் வலி தாளாமல் தவித்தவளுக்கு, ரோஷம் வந்தது. அன்று போலவே, நினைத்துப் பார்க்கும் இப்போதும்!

அவனுக்கு மட்டும்தான் பேசத் தெரியுமா? அல்லது, அவனுக்கு மட்டும்தான் பிரச்சினைகளா? அவளுக்கும்தான் ஆயிரம் இருக்கின்றன!

என்னமோ, அவள் உல்லாசப் பொய்கையில் நீந்திக் குளிக்கிற மாதிரியும் அதனால் அவனை, முக்கியமாக அவனது கஷ்டங்களை அலட்சியப்படுத்துகிற மாதிரியும் நோகப் பேசுவதா?

இன்றைக்கு அவளது பிரச்சினைகளைச் சொல்லத் தொடங்கினால், குறைந்த பட்சமாக அரைமணி நேரம் சொல்லலாம்.

அத்தனையும் ஒதுக்கிவிட்டு, ஒரு பத்து நிமிஷ நேரம் இவன் முகத்தைப் பார்த்தால், அவனோடு பேசினால் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளலாம் என்று ஓடி வந்தால், கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல், இப்படி நோகடிப்பதா?

இதற்கே அவள் எழுத்தாளரிடம் ஜாடைமாடையாக எவ்வளவோ வாங்கிக் கட்ட நேரும்! அதையெல்லாம் பொருட்படுத்தாமல்தானே



ஓடி வந்திருக்கிறாள்!

சில வினாடிகள் சௌமினி தனசீலனின் முகத்தை வெறித்துப் பார்த்தாள்.

கண்கள் பளபளக்க, வெண்ணிறப் பற்கள் பளீரிட, குறும்பும் கேலியுமாக அவனது பேச்சும் சிரிப்பும் நினைவு வர, அவளுக்குத் தொண்டை அடைத்தது.

தனம் போகலாம், வரலாம். ஆனால் சீலம் மறையலாமா? அதுவும் உற்றவர்களிடம்?

"என்ன தனா, இப்படிப் பேசுகிறீர்கள்?" என்று கம்மிய குரலில் கேட்டாள்

"வேறு எப்படிப் பேசுவது?" என்று சற்றும் இளக்கமற்ற குரலில் பதிலுக்குக் கேட்டான் அவன். "எத்தனை முறை? எத்தனை தடவை மகாராணி வருவாய் என்று இங்கே வந்து, மணிக்கணக்கில் காத்திருந்து விட்டுப் போவது? வரப்பிடிக்கவில்லை, என்னைப் பார்க்க பிடிக்கவில்லை என்றால், நேரடியாகச் சொல்வதுதானே? அப்படி நேரே சொல்லத் துணிவு வரவில்லை என்றால், ஒரு வரி எழுதிப் போடுவது! அது கூடச் சிரமம் என்றால், உச்சி மண்டையில் அறைந்த மாதிரி தெரிவிப்பதற்கு வழிகளா இல்லை?... ஓஹோஹோ... இப்போதைய இந்த உன் உத்திகூட, அப்படித்தான் போல! நான் புரிந்து கொள்ளாத முட்டாள்! வடி கட்டின மடையன்!"

அன்று பேசும்போது, தனசீலனின் நாக்கில் என்ன இருந்திருக்கக் கூடும்?

சனி? அல்லது சாத்தான்? அதுபோல ஒன்று இல்லாமல், தன்னம்பிக்கை உள்ள அவன் தன்னைத்தானே அவ்வளவு தாழ்த்திக் கொண்டிருக்க மாட்டான்.

அவளுக்கும் திகைப்பாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் வேறு பேசத் தோன்றாமல், பழைய கேள்வியைத்தான் அவள் மறுபடியும் கேட்டாள்.

ஆனால், தான் தீயைக் கொட்டியது பற்றிய எண்ணமே இல்லாமல், சின்ன வயதில் இருந்து சேர்ந்து வளர்ந்து, நெஞ்சிலே குடியேறி விட்டவளுக்கு தன்னை உணர்த்த முயன்றான், அவன்.

அவளது உணர்வுகளைப் பற்றிய யோசனையே இல்லாமல், தன் கோபத்தையும் அதன் காரணமான தாபத்தையும் கொட்டித் தீர்த்தான்.

2

"என்னைக் கேள்வி கேட்கிறாயே! கொஞ்சம் யோசித்துப் பார்த்தாயா? மருமகளே மருமகளே என்று, என் அம்மா ஆசையாக உன்னைக் கூப்பிடுவார்களே, அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று, உனக்குக் கொஞ்சமேனும் கவலை இருக்கிறதா? இறங்கிக் கொண்டே போகும் அப்பாவின் தொழில் பிரச்சினை ஒருபுறம், அதைச் சமாளித்து நிமிர்வதற்காக அப்பாவும் நானுமாகப் படும் பாடு பற்றி நினைத்தேனும் பார்த்திருக்கிறாயா?"

"நினைப்பேன், தனா. பக்கத்தில் பக்கத்தில் வீட்டை கட்டி, நம் இருவர் குடும்பங்களும் எவ்வளவு சந்தோஷமாக இருந்தோம் என்று..."

"அதையெல்லாம் நினைத்துப் பார்த்ததாகக் கதை கட்டப் போகிறாயாக்கும்..."

"கதையில்லை, தனா. நிஜம். அதையே நினைத்தபடி எத்தனையோ நாட்கள் தூங்காமல் கிடந்திருக்கிறேன்" என்று வருத்தத்துடன் தெரிவித்தாள் அவள்.

"கற்பனை பிரமாதம்!" என்றான் அவன் ஏளனமாக, "மேடம், எழுத்தாளரிடம் வேலை செய்கிறீர்கள். அல்லவா? என்னவோ 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடுமாமே!' அதுபோல உனக்கும் நன்றாகக் கற்பனை ஓடுகிறது!"

"கற்பனையுமில்லை, கதையுமில்லை. உண்மையாக நடந்ததைத்தான் சொன்னேன்!" என்றாள் அவள் லேசாக சுதி ஏற.

"நடந்ததையும் சொல்லலாம். நடக்காததை நடந்ததாகவும் சொல்லலாம்! இல்லையென்று யார் நிரூபிப்பது? யாரால் முடியும்?"

"அப்படியானால் நான் பொய் சொல்லுவதாகக் கூறுகிறீர்களா?" என்று ஆத்திரப்படும்போதே, அவளுக்கு வேறு நினைவு வந்தது.

கடற்கரையில் உட்கார்ந்து கொண்டு, கையில் மணலை அள்ளி இதிலே இத்தனை லட்சம் மணல் இருக்கிறது என்பான். அதெல்லாம் கிடையாது என்றால், இல்லை என்று நிரூபி பார்க்கலாம் என்பான். அவள் முந்திக் கொண்டால், நான் கணக்கிலே கொஞ்சம் வீக், அதனாலே நீயே நிரூபித்துவிடு என்பான். இப்படி ஏதாவது சொல்லிச் சிரிக்க வைப்பான்.

சிரிக்கச் சொன்ன அவன், இப்போது அழ வைக்கிறானே!

"ஹும். என்ன பேச்சையே காணோம்? உண்மை சுடுகிறது போல?"



"இல்லை தனா. உண்மை இல்லாததை, உண்மை என்று நீங்கள் சொல்வதுதான் வலிக்கிறது" என்றாள் அவள் பதிலுக்கு.

"என்ன உண்மை இல்லை? அம்மா, அப்பா அவ்வப்போது வரும் என் சித்தி கூட உன் மேல் எவ்வளவு பிரியமாக இருப்பார்கள்? எங்கள் வீட்டுக்கு வரும் வழி கூடத் தெரியாத மாதிரி அந்த வீட்டுக்குப் போய் இத்தனை மாதங்களாக நீ எங்களை எட்டிக் கூடப் பார்க்கவில்லையே! தொழிலில் நஷ்டமும், ஆசையாக கட்டிய வீட்டை விற்பது பற்றிய பேச்சுமாக மிகவும் சோர்ந்து போய், அம்மா படுத்தே கிடக்கிறார்கள். அவர்களை ஒரு தரமேனும் வந்து பார்க்கலாமில்லையா?" என்று குறை கூறுவது போல, அவள் மீது தான் சுமத்திய குற்றத்தை நிலை நாட்டினான் தனா.

ஆனால் அதை விடவும், ஆன்ட்டியின் உடம்பு சரியில்லை என்பதுதான் அவளுக்குக் கவலையாக இருந்தது.

"இப்போது ஆன்ட்டிக்குப் பரவாயில்லையா, தனா?" என்று கவலையோடு அவள் விசாரித்தாள்.

அவன் அலட்சியமாக உச்சுக் கொட்டினான். "இல்லை என்று சொன்னால், அப்படித்தான் பறந்தோடி வந்து பார்க்கப் போகிறாய் போல?" என்று தோளைக் குலுக்கிச் சொன்னான் "உனக்குத்தான் அதற்கெல்லாம் நேரமே கிடையாதே!"

செல்லவே இல்லாதது தப்புதான். ஆனால், எப்போது போவது?

கல்லூரிக்குப் போவது, வருவது, எழுத்தாளருக்கு உதவி பண்ணப் போவது... அவரது வேலை முடிந்து அவள் வீடு வந்து சேரவே குறைந்தது ஆறரை ஆகிவிடும்.

அதற்கு மேல் தனியே கிளம்பிப் போய் புறநகர் பகுதியில் இருந்த தனசீலனின் வீட்டுக்குப் போய்த் திரும்பி வீட்டுக்கு வந்து சேர்வது, இந்த நாளில் நினைக்க முடியாத பயங்கரம்.

இங்கேயும் தந்தைக்கு புதிய வேலை என்பதோடு, அவ்வளவாக ஆரோக்கியமும் சரியில்லாமல் இருப்பதால், இங்கிருந்து யாரையும் துணைக்கு அழைப்பது இயலாத காரியம்.

தன் தாய் தந்தை பற்றி இவ்வளவு பேசுகிறவன், இவ்வளவு தூரம் வந்து போவதை உடம்பு தாங்கவில்லை. ஆரோக்கியம் கெடுகிறது என்று நகருக்குள் ஃப்ளாட் வாங்கிப் போனார்களே, அப்பாவுக்கு உடம்பு பரவாயில்லையா என்று ஒரு கேள்வி கேட்டானா? அவளும் அதைப் பெரிதாக நினைக்கவில்லையே.

அவனுடைய தாயார் சரோஜாம்மாவுக்கு இம்மென்றால் நெஞ்சுப் படபடப்பு வந்துவிடும். இப்போதைய நிலைக்குக் கேட்கவே வேண்டாம். அவர்களது உடல்நிலை தெரிந்தும் போகாதது, நியாயமாகப் பார்த்தால் தப்புதான்.

ஆனால், அவளுக்கும்தான் பல பிரச்சினைகள்.

கல்லூரிப் படிப்பு, வேலைக்குப் போவது அம்மாவுக்கு உதவி என்று அவளுக்கும் ஓய்வே கிடையாதுதானே?

வேலையயை விட்டுவிட்டால், அவகாசம் கிடைக்கலாம்.

ஆனால், எழுத்தாளர் ராஜகம்பீரன் தரும் பணம் இப்போது அத்தியாவசியத் தேவையாக இருந்தது என்பதால், அந்த வேலையை விடவே முடியாத நிலை!

மறுபடியும் யோசித்துப் பார்த்துவிட்டு, "மெய்யாகவே, எனக்கு அவகாசமே இல்லை, தனா! ஏனென்றால்..." என்று தன் நிலைமையை அவனுக்கு விளக்க முயன்றாள் சௌமினி.

ஆனால், அதற்கு அவன் அனுமதித்தால்தானே?

அவளது பேச்சின் இடையே புகுந்து, "ஆமாமாம், ஒரு நாளைக்கு இருபத்திநாலு மணி நேரம்தானே இருக்கிறது? இதில், என்னை என் வீட்டாரைச் சந்தித்துப் பேச, உனக்கு எப்படிம்மா நேரம் கிடைக்கும்? கூடுதலாக ஓர் இருபத்தி நாலு மணி நேரமாவது இருந்தால், ஏதோ போனால் போகிறது என்று எட்டிப் பார்க்கலாம்!" என்றான் அவன் எகத்தாளமாக.

பொறுக்க மாட்டாமல், "இப்படிப் பேசினால் எப்படி, தனா?" வருத்தத்துடன் கேட்டாள் அவள்.

"வேறு எப்படி பேசுவது? நாங்கள் நிலை இறங்கி விட்டவர்கள், வீட்டை விற்றுச் சரிக்கட்டலாமோ என்று கணக்குப் போடுகிற நிலையில் இருப்பவர்கள்..."

தப்பான ஒரு வார்த்தையை சௌமினி அப்போது சொன்னாள்.

தப்பென்று எண்ணவில்லை. ஏனெனில், விற்றுவிட்ட வீட்டுக்காக அவள் மனம் பெரிதும் ஏங்கிக் கொண்டிருந்ததால் வந்த வார்த்தைகள்.

நினைவு தெரிந்ததில் இருந்து சிறியது என்றாலும் தனி வீட்டில் வசித்துவிட்டு, வசதியானது என்றாலும் இந்த ஃப்ளாட்டில் வசிப்பது அவளுக்குப் பிடிக்கவே இல்லை. பெரிதான தனித்தனி அறைகளே, எப்போதும் தடையற்ற தண்ணீர், மின்சார வசதிகள் வேறு!



என்றாலும் விளக்கை அணைத்துவிட்டு, சூழ்ந்திருக்கும் இருளில் வரும் அமைதியான தூக்கத்துக்கு இங்கே வழியிருக்கவில்லை. பாதுகாப்பு கருதி வெளிப்புறம் எப்போதும் எரியும் விளக்குகள், இரவு பன்னிரண்டு மணியானாலும் இயங்கும் லிஃப்ட்டுகளின் ஒலி.

எப்போதும் ஏதோ ஹோட்டலில் இருக்கும் உணர்வுதான் அவளுக்கு.

பழைய தனி வீட்டு ஏக்கத்தில் "நீங்களாவது வீட்டை விற்பது பற்றிப் பேசத்தான் செய்கிறீர்கள் நாங்கள் விற்றே விட்டோமே" என்று வேதனையோடு கூறினாள்.

மாற்ற முடியாதபடி இழந்துவிட்டோமே என்ற வருத்தத்தில்தான் அவள் சொன்னது!

ஆனால் தனசீலனுக்கு உள்ளம் கொதித்துவிட்டது.

புறநகர்ப் பகுதியில் இருந்து, நகரத்துக்குள் வசதியான இடத்தில் சொகுசாக வாழ்ந்து கொண்டு, நக்கல் செய்கிறாள் என்று தோன்றிவிட, ஆத்திரத்துடன் "எதற்கு விற்பது என்று ஒன்று இருக்கிறதல்லவா? புறநகர் பகுதியில் விற்றுவிட்டு, நகருக்குள் நல்லதாக வாங்கித்தானே இருக்கிறீர்கள்? எங்களைப் போல இறக்கம் இல்லை என்று பெருமையடிக்கிறாயா?" என்றான் கோபமாக.

தன்னோடு கூடச் சேர்ந்து வருத்தப்படாமல், தனசீலன் ஏன் கோபப்படுகிறான் என்று அவளுக்குப் புரியவே இல்லை.

அவர்கள் என்ன, ஆசைப்பட்டா வீட்டை விற்றுவிட்டு இங்கே வந்தார்கள்? அங்கிருந்து அலுவலகம் செல்வதற்கு, தந்தைக்கு இரண்டு மணி நேரம் ஆயிற்று. அதிகாலையிலேயே எழுந்து தயாராகி அலுவலகம் செல்லவோ, அப்பாவால் இயலவில்லை. முக்கியமாக அவ்வளவு அலைச்சலை அவரது உடம்பு தாங்கவில்லை.

இதையெல்லாம் யோசித்து வேறு வழியில்லாமல்தானே ஃப்ளாட் வாங்கி நகருக்குள் குடி வந்தது?

மற்றபடி, அங்கு வளர்த்த பூஞ்செடிகள், காய்கறித் தோட்டம், எதுவும் அவளுக்கு மறக்குமா?

வீட்டில் காய்க்கிறதே என்று தினமும் ஒரே வகைக் காய்களை உண்ணாமல், இரு வீட்டினரும் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கி... எவ்வளவு சந்தோஷமாக இருந்தார்கள்!

எல்லாம் தெரிந்திருந்தும் இப்படிப் பேசுகிறானே!

"உங்களுக்கு ஒன்றுமே தெரியாதது போல வாய்க்கு வந்ததைப் பேசாதீர்கள், தனா! அப்பா வேலைக்குப் போக வர இதுதான் வசதி என்று, வேறு வழியில்லாமல்தானே...." என்று அவள் பேச்சை முடிக்குமுன் அவன் பாய்ந்தான்.

"போதும் நிறுத்து. உன் அப்பாவுக்குப் பெரிய பதவி உயர்வு! அலுவலகம் போக வரக் கார் வசதி, நீங்கள் வானத்திலே பறக்கிறதைப் பற்றி என்னிடம் பெருமையடிக்க வேண்டுமாக்கும்! அப்படிப் பறக்கிறவர்களுக்கு எங்களைப் போலக் கடன்காரர்கள் தொல்லையால் வீட்டை விலை பேசுகிறவர்களின் நினைவு எப்படி இருக்கும்? கொஞ்சமேனும் பழகிய பாசம், ஈரம் இருக்கும் என்று எதிர்பார்த்தது என் தப்புதான். போ... போய் விடு. ஐயோ, உன்னைப் போகச் சொல்ல எனக்கு என்ன உரிமை... ஏன்? அருகதைதான் என்ன இருக்கிறது? நானே போகிறேன். இனி ஒரு போதும் உன்னைத் தொல்லை செய்யவே மாட்டேன்!" என்று நெருப்பு மழையாய்ப் பொழிந்தவன், அவள் கூப்பிடக் கூப்பிட நில்லாமல் வேகமாகச் சென்று பைக்கை எடுத்துக் கொண்டு, செவியற்றவன் போல் போயே விட்டான்!

தொண்டை அடைத்துக் கண்ணோரம் கரித்தது அவளுக்கு.

எல்லாவற்றையும் என்ன மாதிரி எடுத்துக் கொண்டான். சும்மாவே 'மூழ்குகிற கப்பலின் எலி' என்று ஓர் அனியாயமான குற்றச்சாட்டு!

அவள் என்ன சொல்கிறாள் என்று காது கொடுத்துக் கேட்கவே அவனுக்கு மனமில்லையே! கேட்டால்தானே, அவளது நியாயம் அவனுக்குப் புரியும்?

ஏதோ ஒரு நியாயம் அவளிடம் இருக்கலாம் என்று யோசிக்கக் கூட முடியாவிட்டால், இத்தனை காலம் அவர்கள் பழகியவதற்கு என்ன அர்த்தம்?

அல்லது, தன் பிரச்சினையிலேயே மூழ்கிவிட்ட தனசீலனுக்கு, அவளைப் பற்றிய எண்ணமோ... அன்போ, அக்கறையோ எதுவுமே இப்போது இல்லையோ?

ஒருவேளை, அவளை ஒரேடியாக வெறுத்துவிட்டானா? அதை அவளால் தாங்க முடியாதே!

இன்றைய நிலையில், பத்தொன்பதும், இருபத்து மூன்றும் திருமணத்துக்கு ரொம்ப சின்ன வயதாக இருக்கலாம்.

ஆனால் வளர வளர மனம் ஒன்றுபட்டு, எதிர்காலமே இருவரும்




நாளையபந்தம்
திருமண தகவல் மையம்
www.naalayabandhammatrimony.com

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து இனத்தவருக்கும்
ஆண்,பெண் வரன் தேடுபவர்கள் கவனிக்க!!

அனைத்து இனத்தவருக்கும் பல்லாயிரக்கணக்கில் வரன்கள் எங்களிடம் உள்ளன.

உங்களது திருமண தகவலை பதிவு செய்ய ஜாதக நகல், முழுவிவரம், புகைப்படம் ரூபாய் 500/- மட்டும் செலுத்தி online-ல் பதிவு செய்தவுடன் online-ல் உங்களுக்கு பொருத்தமான 25 வரன்கள் முழுவிவரம் தொலைபேசியுடன் இலவசமாக எடுத்துக் கொள்ளலாம்.
(தகவலை போட்டோவுடன் தபாலிலும் அனுப்பி வைக்கலாம்)

பணம் அனுப்ப வேண்டிய விபரம் } பெயர் - R.செல்வக்குமார்
வங்கி - State Bank of India
S/B.A/C No - 101282 99 273

113, மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி,
மதுரை ரயில்வே ஜங்சன் எதிரில்
ஸ்டேட் பேங்க் பின்புறம், மதுரை-1.
0452 - 4508123 / 98421-29740

எங்களிடம் இந்து,முஸ்லீம்,கிறிஸ்தவர் அனைத்து இனத்திலும் வரன்கள் உள்ளன. மற்றும் டாக்டர் வரன்களும் உள்ளன.

வாரத்தின் எல்லா நாட்களும் 9.00 am to 9.00 pm வரை

பெண்கள் மட்டும் இலவசமாக பதிவு செய்து கொள்ளலாம்

மறுமணத்தில் அனைத்து இனத்தவர்க்கும் வரன்கள் அதிகமாக உள்ளன.

சேர்ந்துதான் என்று பேசியதெல்லாம் பொய்யா?

அழித்து, மாற்றி எழுதுவதற்கு இதென்ன பென்சிலால் எழுதியதா? கல்லில் பொறித்த மாதிரி, அவள் இதயத்தில் செதுக்கி அல்லவா வைத்திருக்கிறாள்!

தனியே நின்று எவ்வளவு நேரம் கலங்குவது? அதுவும் இன்னும் அரை மணி நேரத்தில் எழுத்தாளரிடம் வேலைக்காக ரிப்போர்ட் பண்ண வேண்டும் என்கிற நிலையில்?

வேதனையுடன் திரும்பிப் போனால், ராஜகெம்பீரன் சார் செய்யச் சொன்ன வேலை சற்றும் ஓடவில்லை. மனதிலேயே பதியவில்லை.

யாருடனும் பேசவே சௌமினிக்கு அப்போது பிடிக்கவுமில்லை. அதை விடவும், எழுத்தாளருக்குத் தேவையான பணியைச் செய்யும் மனநிலை அவளுக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை.

ஆனால் ராஜகெம்பீரன் சார் பெரிய மனிதர். உதவியாகச் செய்வதுதான் என்றாலும் செய்யும் வேலைக்குப் பணமும் கொடுப்பார்.

அப்பாவுக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போகிற நிலையில், அந்தப் பணம் பல வகையில் வீட்டுக்கு உதவியாக இருந்தது.எனவே, அதை அலட்சியப்படுத்தவும் முடியாது.

ஆனால், எதையோ சொல்ல, எழுத்தாளர் ராஜகெம்பீரன் இரண்டாவது முறையாக அவளைக் கூப்பிட்டது, அவளது காதுகளில் விழவே இல்லை.

இரண்டு தரம் அவர் சொல்லுவதைச் சரியாகக் கவனிக்காமல், சௌமினி சோகமாக இருப்பதைக் கவனித்துவிட்டு, எழுத்தாளர் வேலையை நிறுத்தினார்.

"என்ன சௌமினி, உனக்கு உடம்பு சரியில்லையா?" என்று சற்று எரிச்சலாகக் கேட்டார்.

அவள் குனிந்து கண்ணைத் துடைக்கவும், அவரது குரல் மாறியது. "இருக்கட்டும் சௌமினி. இன்றைக்கு வேலையை இத்தோடு முடித்துவிடலாம். இன்றைக்குச் செய்ய முடியாவிட்டால் நாளைக்கும் செய்யலாம். ஒன்றும் கட்டாயம் முடித்தாக வேண்டிய வேலையில்லை. சொல்லும்மா. அப்பாவுக்கு உடனடியாகப் பிரச்சினை இல்லையே?" என்று குரலில் பரிவு காட்டி விசாரித்தார்.

அவளுக்கு மீண்டும் அழுகை வந்தது.

"இஇல்லை.." என்று குரல் நடுங்க கூறி முடிக்கையில், அவளுக்கு



மறுபடியும் கண்ணீர் பெருகியது.

இளம் பெண்ணின் கண்ணீர்! அதிலும் அழகான பெண் வேறு! அவருக்கு இதில் ஏதாவது கரு கிடைக்கலாமே!

ராஜகெம்பீரன் மறுபடியும் நோண்டினார்!

கொஞ்ச நாட்களாகவே, சொல்லப் போனால், சென்னைக்குள் இந்தப் புது ஃப்ளாட்டுக்கு வந்ததில் இருந்தே சௌமினிக்கு மனது சரியில்லை. முக்கியமான காரணம், பழைய பக்கத்து வீட்டுக் குடும்பத்தை பிரிய நேர்ந்தது.

இங்கே வந்ததில் இருந்து, அவளுடைய தாய் சுந்தரிக்குக் கணவரோடு மருத்துவர் தேடி அலைவதற்குத்தான் நேரம் சரியாக இருந்தது. புறநகர்ப் பகுதியில் கட்டியிருந்த சொந்த வீட்டை விட்டு, ரொம்ப முன்னதாகவே கிளம்பியிருந்தால், பிரச்சினை இவ்வளவு பெரிதாக உருவெடுத்திராதோ? ஆசையாகக் கட்டிய வீடு, நன்கு பழகிவிட்ட அக்கம் பக்கத்தார். விட்டுவிட்டு வர மனமில்லாமல் ஓராண்டு தயங்கியது, பெரிய தப்பாகிவிட்டதோ என்கிற ஐயம் அடிக்கடித் தோன்றி, குடும்பத்தில் எல்லோரையுமே கலங்கடித்துக் கொண்டிருந்தது.

அடுத்து, படிப்பு... மேலே என்ன பண்ணலாம் என்று அது ஒரு குழப்பம்.

பெரிய வேலையில் சேர்ந்ததுமே விடுப்பு எடுக்க மனம் இல்லாமல் அவ்வப்போது ஏதாவது மருந்துகளை விழுங்கி சமாளித்த தந்தையிடம் இதைப் பற்றி பேசவே அவளால் முடியாது போயிற்று.

மேல் படிப்பு என்றால், அதன் பொருள் பெரிய தொகை ஆயிற்றே!

ஏற்கனவே பணத்துக்கு பிரச்சினை! சும்மா சும்மா டாக்டரிடம் போவது பணமில்லாமல் நடக்காதே!

நல்லவேளையாகத் தற்செயலாக நேர்ந்த ஒரு சந்திப்பில், எழுத்தாளர் ராஜகெம்பீரனுக்கு ஒரு சிறு பணியைச் செய்யும் வாய்ப்பு சௌமினிக்கு கிடைத்தது. அது அவருக்குப் பிடித்துப் போய், அவ்வப்போது அதைப் போன்ற பணிகளோடு, அவற்றுக்கான ஊதியமாக ஒரு தொகையையும் எழுத்தாளர் தரவே, மென்னியைப் பிடித்த பணப் பிரச்சனை ஓரளவு தீர்ந்தது.

ஆனால், இந்த வேலையின் காரணமாக சௌமினியின் நடமாட்டம் அடியோடு குறுகிப் போயிற்று. அன்னையின் வீட்டுப் பொறுப்பில் கொஞ்சம், கல்லூரிப் படிப்பு, எழுத்தாளரிடம் வேலை!

இத்தனைக்கும் பிறகு, அவளுக்கு வேறு எதற்கு அவகாசம் இருந்தது?

எதையும் காது கொடுத்துக் கேளாமல் நெருப்பாய்க் காய்ந்த அவனிடமோ, நிற்க நேரமின்றி ஓடிய தாயிடமோ எதையும் சொல்லக் கூட முடியாமல் சௌமினியின் மனதில் சுமை ஏறிக்கொண்டே வந்திருந்தது!

ஒட்டகத் துரும்புபோல, தனசீலனின் அந்த 'மூழ்குகிற கப்பலின் எலி' என்கிற அநியாயக் குற்றச்சாட்டு, அன்று அவளை மனம் உடையச் செய்துவிட, பரிவோடு கேட்ட ராஜகெம்பீரனிடம் அவள் எதையும் மறையாமல் கொட்டித் தீர்த்தாள்!

அவரும் குறுக்கிடாமல் அவளது பேச்சைக் கவனமாகக் கேட்டார்.

'சென்னையை விட்டுத் தூரம்தான். ஆனால், தனி வீடு, தோட்டம், சுத்தமான காற்று என்று பல்வேறு ஆசைகளில், நண்பர்களான குருமூர்த்தியும், சபாபதியும், அங்கே இடம் வாங்கி வீடு கட்டி வாழ்ந்தார்கள்.

குருமூர்த்தி ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல வேலை பார்ப்பவர். அடுத்தவர் சிறு தொழில் செய்கிறவர்.

தொழில் செய்கிறவருக்கு ஒரே மகன், பெயர் தனசீலன், இருபத்து மூன்று வயது, மற்றவருடைய மகள்தான் சௌமினி. எட்டு ஆண்டு வித்தியாசத்தில் அவளுடைய தம்பி கண்ணன்.

அங்கேயே இன்னும் பல வீடுகள் இருந்ததால், ஒருவேன் வந்து பள்ளி, கல்லூரிக்கு அழைத்துப் போய்விடும்.

குருமூர்த்தி வீட்டு மல்லிகை சபாபதி வீட்டு பூஜையறையில் மணக்கும். சபாபதி வீட்டு ரோஜா சௌமினியின் கூந்தலை அலங்கரிக்கும்.

காய்கறிகளும் அப்படித்தான். கொடுத்து வாங்கி, ஏழெட்டு ஆண்டுகளாக சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

எல்லாம் நன்றாக இருந்த காலம் மாறி, தொழிலில் போட்டி பெருகி, சபாபதிக்கு வருமானம் குறைந்து, நஷ்டப்படுகிற நிலை வந்தது. பணத்தேவை அதிகம். வீட்டை விற்று நஷ்டத்தை சமப்படுத்துவதோடு மேற்கொண்டு முதலீட்டைப் பெருக்கி, தொழிலை மேம்படுத்தலாமே என்கிற யோசனை அவருக்கு உண்டாயிற்று.

அதேசமயத்தில் குருமூர்த்தி வேலை பார்த்த நிறுவனம் வளர்ந்து,



அவருக்கு பெரிய பதவி உயர்வு கிடைத்தது.

ஆனால், அலுவலகமும் சென்னையின் முக்கியமான இடத்துக்கு இன்னமும் தூரமாக மாற, போக்குவரத்து, அவருக்குப் பெரும் பிரச்சினை ஆயிற்று. அவரது பைக்கில் அவ்வளவு தூரம் போய் வந்தது, அவரது உடல் நலத்தைப் பெரிதும் பாதித்தது.

புறநகர் வீட்டை விற்றுவிட்டுச் சென்னைக்குள் அலுவலகத்துக்கு அதிக தூரம் இல்லாதபடி நல்ல வசதிகளுடன் கூடிய ஃப்ளாட் வாங்க முடிவு செய்தார் அவர்.

"ஃப்ளாட்டுக்கு முன்பணம் கொடுத்துவிட்டு, அப்படியே சற்று தூரம் நடந்து பார்க்கலாம் என்று வந்தபோதுதான், சார் அம்மாவும் நானும் உங்களைப் பார்த்தோம்" என்றாள் சௌமினி, சற்றே ஆறுதலான ஒரு பெருமூச்சுடன்.

எழுத்தாளர் ராஜகெம்பீரனைச் சந்தித்த அன்றைய தினமும் சௌமினிக்கு மிக நன்றாக நினைவு இருந்தது. அதற்கொரு முக்கியமான காரணமும் இருந்தது!

ஏனெனில், அவளது முதல் சம்பாத்தியமே அன்றுதானே கிடைத்தது! ஆணோ, பெண்ணோ, ஒருவரது வாழ்க்கையில் அது எவ்வளவு பெரிய விஷயம்!



## அன்பு மனம் மாறியதேன் 3

புது இடமாயிற்றே. இனி இங்கேதான் வசிக்கப் போகிறோம் என்பதால், சும்மா சுற்றுப் புறத்தைச் சற்று ஆராயலாம் என்று தாயும் மக்களுமாக நடக்கத் தொடங்கியதுதான்.

ஃப்ளாட்டைப் பேசி முடித்துக் கொடுத்த மனிதரோடு தந்தை பேசிக் கொண்டிருக்க, அதில் போரடித்துப் போன மற்ற மூவருக்கும், இப்படிச் சுற்றிப் பார்க்கும் ஐடியா வந்தது.

அப்படிக் காலாற நடந்து வந்தபோது, பக்கத்துத் தெருவில் ஒரு வீட்டின் முன்னே காரிலிருந்து எழுத்தாளர் ராஜகெம்பீரன் இறங்குவதைப் பார்த்தார்கள்.

சுந்தரி, அந்த எழுத்தாளருக்கு ஓரளவு விசிறி. பத்தொன்பது வயதை எட்டியிருந்த மகளும், பதினோரு வயது மகனும் சேர்ந்து

அம்மாவுக்காக எழுத்தாளரைப் பார்த்துப் பேச முடிவு செய்து, அவர் இறங்கிய வீட்டுக்கு அன்னையை அழைத்துப் போனார்கள்.

போய்ப் பார்த்தால், முதலில் அவர் அவர்களோடு சரியாகவே பேசவில்லை.

அதற்காக முகத்தைத் திருப்பினார் என்றும் சொல்ல முடியாது.

"வாருங்கள், வாருங்கள். நீங்கள் வந்தது மிக்க மகிழ்ச்சி..." என்று உரிய வார்த்தைகளை அவர் சொன்னார்தான். எனினும், அவரது கவனம் முழுவதும் எதிரில் இருந்த கம்ப்யூட்டர் திரையிலேயே ஒன்றியிருந்தது நன்றாகத் தெரிந்தது.

நெட்டில் ஏதோ ஒரு வேலைக்காக அவர் திணறிக் கொண்டு இருப்பது, சௌமினிக்குப் புரிந்தது. வந்தவர்களிடம் அரை குறையாகப் பேசியவாறு, அவர் கம்ப்யூட்டரிலேயேதான் கவனமாக இருந்தார்.

பிடித்த எழுத்தாளரைப் பார்த்துவிட்ட திருப்தி இருந்தாலும், அவர் சரியாகப் பேசாததால் கூச்சமடைந்த சுந்தரி, பிள்ளைகளைக் கிளப்ப முயன்றாள்.

ஆனால், எழுத்தாளரின் திணறலைக் கண்டுவிட்டுக் கம்யூட்டர் திரையில் பார்வையைப் பதித்த சௌமினிக்கு அவரது சிக்கலின் காரணம் சட்டெனப் புரிந்தது. ஒரெட்டு முன்னே சென்று "சார் இந்த வேலை நான் படித்திருக்கிறேன். சற்று நகர்ந்து கொள்ளுங்கள். நான் செய்து தருகிறேன்"என்று உரைத்தவாறு அருகில் சென்றாள்.

தானாகச் செய்ய முடியாமல், முகம் வியர்த்துப் போயிருந்தார் எழுத்தாளர் "எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்" என்கிற நிலை!

உன்னால் முடியுமா என்று கேட்கக் கூடத் தோன்றாமல், சட்டென எழுந்து கம்ப்யூட்டர் முன் சௌமினி உட்கார இடம் கொடுத்தார்.

அவர் தேடிய விவரங்களைக் கண்டுபிடித்ததோடு "எத்தனை பக்கங்கள்?" என்று மட்டும் கேட்டுவிட்டு, அவை அனைத்தையும் பிரின்ட் அவுட் எடுத்து அவள் கொடுக்கவும் ராஜகெம்பீரனுக்கு வாயெல்லாம் பல்லாகிவிட்டது.

கையோடு, இன்னொரு தலைப்பில் அங்கங்கே அவர் குறித்து வைத்திருந்த எண்களின்படி பாராக்களை வரிசைப்படுத்திக் கொடுக்குமாறு அவர் கூற, சௌமினி அதையும் சில நிமிஷங்களில் செய்து முடித்தாள்.

பார்த்துவிட்டு அவருக்கு ஒரே சந்தோஷம்.



அதற்கு மேல் வந்தவர்கள் மூவரையும் உட்கார வைத்துக் கலகலப்பாக பேசினார்.

இந்தப் பகுதியில்தான் வசிக்கப் போகிறார்கள் என்று அறியவும், அவ்வப்போது... முடிந்தால் தினசரியே வந்து போகும்படி அழைப்பும் விடுத்தார்.

சுந்தரிக்கு அதிலேயே மட்டற்ற மகிழ்ச்சி! ஒரு பெரிய எழுத்தாளருக்கு அவளுடைய அருமை மகளால் உதவி செய்ய முடிகிறதே!

அவளது மகிழ்ச்சி இன்னமும் அதிகரிக்கும் விதமாக, அப்படி வரும்போது, அந்தப் புத்திசாலித்தேவதை அவரது கம்ப்யூட்டரில் சில அற்புதங்கள் நிகழ்த்தித் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதோடு, ஒரு கவரில் மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களை போட்டு சௌமினியிடம் கொடுத்தார்.

"வேண்டாம் சார்" என்று தாயும் மகளும் மிகவும் மறுத்தும் அவர் கட்டாயப்படுத்தி வாங்கிக் கொள்ளச் செய்தார்.

"இந்த வேலைக்கு நான் என் கம்ப்யூட்டர் ஆளைக் கூப்பிட்டிருந்தால், எவ்வளவு பில் போட்டிருப்பானோ, தெரியாது. வேலையும் மூன்று நாள் தடைப்பட்டிருக்கும் இதையாவது தராவிட்டால் எனக்கு மனசே ஆறாது. வாங்கிக் கொள்ளம்மா" என்று மிகவும் வற்புறுத்திக் கொடுத்தார்.

தாயும் மக்களும் மிகுந்த மனமகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றார்கள்.

ராஜகெம்பீரனுக்கும் அந்த நாள் மிகவும் நன்றாக நினைவு இருந்தது. அன்றுதானே, இந்தக் கெட்டிக்கார வேலைக்காரி அவருக்குக் கிடைத்தாள்!

அந்தப் பகுதியில்தான் வசிக்கப் போகிறாள் என்று தெரிந்ததுமே, அவரது மூளை வேகமாக வேலை செய்தது.

கம்ப்யூட்டரில் எழுதப் பயின்றிருந்தாரே தவிர, அதன் நுண்ணிய செயல்பாடுகள் பற்றி எதுவும் அறியாதவர் அவர்.

சில சமயம் திணறித் திண்டாடுவதில், அவருக்கு மண்டை காய்ந்து போகும்!

ஒரு பையன் வந்து அவ்வப்போது உதவி செய்வான். ஆனால் அவன் வேறு நிறுவனத்தில் ரெகுலர் வேலை செய்கிறவன் என்பதால், கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரமாட்டான். அந்த

நிறுவனத்து வேலைக்கு இடையூறு நேராதபடிதான் வருவான்.

அப்படி வந்து அவன் செய்கிற வேலைக்கு அவன் கேட்கும் தொகையும் மிக அதிகம் என்பது ராஜகெம்பீரனின் அபிப்பிராயம்.

சௌமினியின் மெல்லிய விரல்கள் கம்ப்யூட்டர் கீ போர்டில் நடமாடிய வேகம் அவருக்கு வியப்பைத் தந்தது.

அந்தப் பக்கத்தில் உள்ள வீட்டில் ஒரு விசிறி இருப்பது பயங்கர லாபம்!

எனவே கஞ்சத்தனம் காட்டாமல் காசு கொடுத்ததோடு "அடிக்கடி வந்து உதவி செய்யம்மா" என்றார் கனிவான குரலில்.

"சரி சார்!" என்றாள் சௌமினியும், மிகவும் சந்தோஷமாக.

அடிமைத்தனத்தின் தொடக்கம் அது என்று அறியாமல்!

கெட்டிக்காரராக, அவர் ஓசி வேலை வாங்குவதில்லை. செய்த வேலைக்குக் கையில் உடனேயே காசு கொடுத்தார்.

தந்தை வேறு மிகவும் நோயாளியாகிவிட, எழுத்தாளர் அவ்வப்போது பணம் கொடுக்கவும், அவரை ஒரு கடவுளாகவே, சௌமினி கருதலானாள்.

செய்த வேலைக்குக் கூலி என்ற எண்ணமே தோன்றவில்லை. தேவையறிந்து உதவும் தெய்வப் பிறவியாகவே எண்ணினாள்!

இப்போதும், அதே எண்ணத்தில்தான், மனதில் இருந்த கலக்கம் முழுவதையும் ராஜகெம்பீரனிடம் அவள் கொட்டித் தீர்த்திருந்தாள்.

வேதனை, வருத்தம் எல்லாம் சொல்லித் தீர்த்துவிட்டு "எப்படியும் ஒருநாள், இருவரும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம், சார் அந்த அளவுக்கு பழகி, இரு வீட்டுப் பெரியவர்களும் கூடச் சம்மதித்து விட்டார்கள். இதற்குப் பிறகும், இவ்வளவு சொல்லியும் நம்பிக்கை இல்லாமல் பேசினால், எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது" என்றவளுக்குத் தன்னை மீறிக் கண்ணீர் பொங்கிக் கொட்டியது.

சற்றுப் பொறுத்து, அவள் தானாகவே சமாளித்துக்கொண்டு, நிமிர்ந்து பார்த்தபோது, ராஜகெம்பீரன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

இதேபோலச் சுளித்த புருவங்களோடு அவர் குறுக்கும் நெடுக்குமாக நடப்பதை, சௌமினி சில சமயம் பார்த்திருக்கிறாள்.

அப்போது அவரைக் கூப்பிட்டால், உதட்டின் மேல் கை வைத்து சைகை செய்து "கதையில் முக்கியமான கட்டத்தைத் திட்டமிட்டுக்



கொண்டிருக்கிறார். ஏதாவது பேசி அவரது மூடைக் கெடுத்து விடாதே. அப்புறம் நினைத்து நினைத்துத் திட்டித் திட்டி, ஏண்டா பிறந்தோம் என்று எண்ண வைத்து விடுவார். அதனால், அவராகக் கூப்பிடும்வரை, எதுவும் பேசாதே" என்று எழுத்தாளருடைய மருமகள் வாசந்தி அவளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறாள்.

ஆனால் இப்போதுதான் அவளது பிரச்சினை பற்றி, அவ்வளவு பரிவாகக் கேட்டவர், அதற்குள் கதை உருவாக்கும் மனநிலைக்கு எப்படிப் போனார் என்று சௌமினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

எழுத்தாளரின் 'மூடு' என்று கூறுவது இதைத்தான் போலும்! வினாடிக்குள், அவளை அடியோடு மறந்து, மாறிவிட்டாரே!

ஆனால், எப்படியும் அவளது பிரச்சினைக்கு அவர் என்ன தீர்வு சொல்ல முடியும்?

அவளேதான் யோசித்து ஏதாவது செய்ய வேண்டும் என்று சௌமினி எண்ணமிடும்போதே, ராஜகெம்பீரன் பேசினார்.

"இப்போதைக்கு இதை இப்படியே விட்டுவிடுவது மேல், என்று எனக்குத் தோன்றுகிறது, சௌமினி. நீயாகப் போய்ப் பேசினால், உன் கௌரவம் கொஞ்சம் கீழே இறங்கிவிட்டது போலத் தோன்றும். தோன்றுவதென்ன? அப்படியேதான். எதற்கும், ஓர் இரண்டு வாரங்கள், பிரச்சினையை ஆறப்போடுவோம். அப்புறமாக நீயே பேசினாலும், ரொம்பவும் இறக்கமாகத் தோன்றாது. என்ன சொல்லுகிறாய்?" என்று எழுத்தாளர் கேட்கவும், சௌமினிக்கு மறுபடியும் கண்ணீர் கசிந்தது.

பாவம்! இவ்வளவு நேரம், அவர் அவளுக்காகவேதான் யோசித்தாரா? அவள் வேறு மாதிரி எண்ணினாளே! அவள் முட்டாளேதான்!

இரண்டு வாரங்கள் கழித்து விடுப்புக் கொடுத்து, தனசீலனைப் போய் சந்தித்துப் பேசி வருமாறு, ராஜகெம்பீரன் அவராகவே, சௌமினியை அனுப்பி வைத்தார்.

அதற்கு மறுநாள், தனசீலன் என்ன சொன்னான்? எப்படிப் பேசினான் என்று உற்சாகமாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார் அவர்.

ஆனால் அவள் முகம் வாடிப் போயிற்று. அவள் வெகு நேரம் காத்திருந்தும், அவர்கள் வழக்கமாகச் சந்திக்கும் இடத்துக்குத் தனசீலன் வரவே இல்லை என்ற உண்மையை அவள் வருத்தத்துடன் சொல்ல நேர்ந்தது.

"நீ ரொம்ப நேரம் காத்திருந்து பார்த்தாய்தானே?" என்று விவரம் கேட்டார் அவர்.

"ஆமாம் சார், நாங்கள் வழக்கமாக சந்திக்கும் இடத்துக்குப் போய், இருட்டும்வரை உட்கார்ந்திருந்தேன். இருட்டிய பிறகு அந்தப் பூங்காப் பகுதி அவ்வளவு பாதுகாப்பானது அல்ல என்று, நானும் தனாவும் சேர்ந்தே செல்லும்போதுகூட, தனா சொல்வார். அதனால் இருள் பரவுமுன் கிளம்பியும் விடுவோம்! அதேபோலத்தான், அதே நேரம் வரையிலும் காத்திருந்தேன் சார், ஆனால்...." என்று வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினாள் சௌமினி.

"ஊர் உலகம் இருக்கிற தினுசுக்குப் பட்டப் பகலில் ஒரு பெண் ஒரு மெல்லிசான நகையை அணிந்து சென்றாலே ஆபத்தாக இருக்கிறதே! எச்சரிக்கை அவசியம்தான். ஆனால், அந்த அளவு கெட்டிக்காரன், உன்னை நம்புவதில் மட்டும் அசடாக இருக்கிறானே!" என்று உச்சுக் கொட்டி வருத்தினார் ராஜகெம்பீரன்.

சிறு அமைதியின் பின் "ஐயோ!... ஐயோ, உன் கௌரவத்தைப் பெரிதாக நினைத்தேன், சௌமினி. அதற்காகக் காத்திருந்த அந்த இரண்டு வாரங்கள் தப்போ என்று இப்போது தோன்றுகிறதே! என்னம்மா சொல்கிறாய்? உனக்கும் அதே எண்ணமே என்றால், தயவு பண்ணி என்னை மன்னித்துவிடு" என்று வருத்தமாகக் கூறினார், எழுத்தாளர்.

அவ்வளவு பெரிய மனிதர் அவளிடம் மன்னிப்புக் கேட்கிறாரே!

கடைசியாக "எதற்கும், இன்னொரு தரம் போய்ப் பார்க்கிறாயா?" என்று பரிவுடன் வினவினார்.

"தேவையில்லை சார்!"என்று அவள் மறுத்தாள் "நான் இருக்குமிடம் அவருக்குத் தெரியும், அப்புறமென்ன?" என்றாள் ரோஷத்தோடு.

உச்சுக் கொட்டினார் எழுத்தாளர் "என்னவோ மணக்கப் போகிறேன் என்றாயே! அதனால் சொன்னேன்" என்றார் இரக்கமாக நோக்கி.

"கல்யாணத்துக்கு இரண்டு பேர் வேண்டும் சார்" என்று கைப்புடன் உரைத்துவிட்டு, கம்ப்யூட்டர் மேஜை முன் அமர்ந்தாள் அவள்.

ராஜகெம்பீரனிடம் அவ்வளவு வீராப்பாகப் பேசியபோதும், அன்று மாலைக்குள்ளாகவே அவளது மனம் பேதலிக்கத் தொடங்கியது.



ஆனால் மறுபடியும் பூங்காவுக்குச் செல்லவோ, அவனிடம் தானே முதலில் பேசவோ அவளுக்கு மனம் வரவில்லை. யோசித்துவிட்டு, விரைவில் தொடர்பு கொள்ளுமாறு தனசீலனுக்கு ஒரு மெஸேஜ் அனுப்பி வைத்தாள்.

தகவலை அனுப்பிவிட்டு, அடிக்கொரு தரம் செல்லைப் பார்த்துப் பார்த்து, அவள் நொந்து போனாள். ஏனெனில் அவனிடம் இருந்து பதில் வரவே இல்லை.

அப்படி அடியோடு உறவை முறித்து விடுவதற்கு, அப்படி அவள் என்ன அனியாயம் செய்திருக்கக்கூடும்?

யோசித்து யோசித்து மூளை குழம்பியதே தவிர, உருப்படியாக ஒரு விவரமும் தெரியாமல் சௌமினிக்கு மனம் தவித்தது.

எதற்கும் பார்க்கலாம் என்று மேலும் செல்ஃபோனில் பலமுறை சௌமினி முயன்று பார்த்தாள். ஆனால் கொஞ்சமும் பயன் இருக்கவில்லை.

அப்படி என்ன பெரிய மாபாதகத்தை அவள் செய்து விட்டாளா? இப்படி அவளை ஒதுக்கும்படி? -

திடுமென, அவனது செல்தான் ஏதோ ஆகிவிட்டதோ என்று சௌமினிக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

அதில்லை எனும்போது, அவளது எண்தான் பிரச்சினையா?

வெகுவாக யோசித்துவிட்டு, தயக்கத்துடனே இன்னோர் எண்ணிலிருந்து அவனது செல்ஃபோனுடன் தொடர்பு கொண்டாள். இப்போது எடுத்து "ஹலோ" சொன்ன தனசீலன், அவளது குரலைக் கேட்டதும் முகத்தில் அடித்தது மாதிரி சட்டென்று கட் பண்ணி விட்டான்.

அப்படியானால், அவனுக்குப் பிரச்சினை அவள்தான்! ஆனால் ஏன்?

பார்த்தாளா, அவனோடு பேசினாளா என்று அவ்வப்போது பரிவோடு கேட்ட எழுத்தாளரிடம் பதில் சொல்லுமுன் கண்ணீர் துருத்திக்கொண்டு வந்தது.

ஆனால், ராஜகெம்பீரனும் பரிவாக ஏதேதோ காரணங்களை எடுத்துக் கூறவே, மேலும் சில முறை சௌமினி முயற்சி செய்து பார்த்தாள்.

ஆனால் தனசீலன் கட் பண்ணிக்கொண்டே இருக்கவும், அவளுக்கும் ஆத்திரம் வந்தது.

என்ன இது அநாகரீகம்? பிரச்சினை எதுவானாலும் வாய் விட்டுச் சொல்வதுதானே? நாம் என்ன பேச்சு மொழி அறியாத காலத்திலா வசிக்கிறோம்?

எதுவானாலும் என்ன என்று அவளிடம் விளக்கம் கேட்பது! அவளது பதிலைக் கேட்ட பிறகும் ஒப்பவில்லை என்றால், அப்புறம் விலகிக் கொள்வது!

அப்படி ஒரு வாய்ப்பே கொடுக்காமல், பழைய காலத்து 'நாடு கடத்தல்' மாதிரி அடியோடு ஒதுக்குகிறானே! பொறுமை தீர்ந்து, அவளுக்கு ஆத்திரம் வந்தது.

தனசீலன் மேல் வந்த கோபத்தில், அவனுடைய தந்தை சபாபதியிடம் புகார் பண்ண முயன்றால், அவரும் அவளோடு பேச விரும்பவில்லை என்று, மகனின் வழியிலேயே சென்று காட்டி அவளைத் திகைக்க வைத்தார். அவரும் சரோஜா ஆன்ட்டியும், அவர்கள் வீட்டுக்குப் போனாலே 'வாம்மா மருமகளே' என்று அவளை ஆசையாக அழைப்பார்கள், எத்தனையோ ஆண்டுகளாக!

கடைசி கடைசியாக வேறு வழியின்றி, நெஞ்சுப் படபடப்பு வருகிறவளான சரோஜா ஆன்ட்டியின் எண்ணுக்கு முயன்றால், அப்படிப்பட்ட எண்ணே இல்லை என்று சொன்னார்கள்.

கடைசியாகப் பொறுக்க மாட்டாமல், ஒரு நாள் காலையிலேயே கிளம்பி, அந்த விட்டுக்கே போய்ப் பார்த்தாள். அவளுக்கே அது விருப்பம் இல்லைதான். ஆனால், இந்த முயற்சி செய்து பார்த்தோம் இல்லையே என்று பின்னொரு காலத்தில் ஏங்கும்படி ஆகிவிடக் கூடாதே என்றுதான் அங்கே போனாள்.

சின்ன வயதில் இருந்து உற்சாகத்துடன் ஓடியாடி விளையாடி தங்கள் வீட்டில் அன்னியர்களைப் பார்க்கும்போது மனம் தளர்ந்து அழுது விடக்கூடாது என்று எவ்வளவோ மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அதன் பிறகே சௌமினி அந்த வீட்டுப் பக்கம் சென்றது.

ஆனால், அவர்கள் வீட்டில் மட்டுமின்றிப் பக்கத்து வீட்டிலும் அன்னியர்களைக் காணவும், அவளுக்குப் பகீரென்றது.

அப்படியானால், தனா குடும்பமும் வீட்டை விற்றுவிட்டு அங்கிருந்து போய்விட்டார்கள்! ஆனால் எங்கே போனார்கள்?

ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே!

கடனுக்காக வீட்டை விற்றதைச் சொல்ல தனசீலனுக்குத்தான் ரோஷம் என்றாலும், அவனுடைய பெற்றோரேனும் அவளுடைய



பெற்றோரிடம் தகவல் தெரிவித்திருக்கலாமே!

ஒருவேளை, வீட்டை விற்றுவிட்ட தாழ்வு மனப்பான்மையில் தான், அவர்கள் யாருக்குமே அவளோடு பேசப் பிடிக்கவில்லையோ? முதலிலேயே நிலைமை இறக்கம் அப்படி இப்படி, அதனால் கப்பல் எலியாகி அவனை விட்டு ஓடுகிறாள் என்று கண்டபடி தனசீலன் பேசவில்லை?

வீட்டை விற்றே விட்டார்கள் என்றால், தாழ்வுணர்ச்சி மேலும்தான் அதிக அளவில் பெருகிப் போயிருக்கும்!

மேலும் வீட்டை இழந்த வேதனை வேறு!

தந்தை வீட்டை விற்றபோது, அவள் எவ்வளவு கஷ்டப்பட்டாள்? அதே துன்பம் இப்போது அவனையும் அரித்துக் கொண்டுதானே இருக்கும்?

அதுவும், தோட்டமும் வீடுமாக அருமையான சொத்தை தொழில் நஷ்டத்தில் வேறு வழியின்றி இழந்திருக்கும்போது, இன்னும் அதிகமாக அல்லவா வாட்டும்!

மனம் பாகாய் உருகிப் போய், தனசீலனைப் பார்க்க வேண்டும் என்று சௌமினியின் பேதை உள்ளம் துடியாய்த் துடித்தது.

அவனை நேரில் பார்த்து ஆறுதல் கூற வேண்டும், தேற்ற வேண்டும்.

இது வெறும் சிறு சறுக்கல். இன்னும் காலம் நிறைய இருக்கிறது. உழைப்பதற்கு அஞ்சாத அவன் அதற்குள் எவ்வளவோ சாதிப்பான்! இந்த சிறு பின்னடைவுக்காக அவன் சிறிதளவும் வருந்த வேண்டியது இல்லை!

இன்னும் தனாவின் அடுத்த போராட்டத்தில், சௌமினியும் அவனோடு துணை நின்று போராடுவாள்.

என்னென்னவோ சொல்லி, வருங்கால நாயகனுக்குத் தென்பளித்துத் தேற்ற துடித்த சௌமினி சட்டெனச் சோர்ந்தாள்.

தனசீலனை மட்டுமல்ல, அவனுடைய குடும்பத்தையே தேற்ற அவள் வெகுவாகத் துடித்தாள்தான். ஆனால், ஒருதலையாக அவள் மட்டும் துடித்து என்ன பிரயோசனம்? அதை ஏற்க அவர்கள் யாருக்கும் மனமில்லையே!

தனாவோ, அவனுடைய குடும்பமோ எங்கே இருக்கிறார்கள் என்பது தெரிந்தால் அல்லவா, அவர்களுக்கு ஆறுதல் சொல்ல முடியும்?

அதற்கு இடம் தராமல், அவர்கள் போன இடமும் தெரியாது, இந்த வினாடியில் ஒப்பற்றது என்று சொல்லக்கூடிய ஒரே தொடர்பான செல்ஃபோனில் அவளோடு அவர்கள் யாருமே பேசுவதும் கிடையாது!

இன்னமும் அந்த குடும்பத்தின் இப்போதைய இருப்பிடம் அறிய ஒரு கடைசி முயற்சியாக, அந்த வீட்டில் அப்போது குடியிருந்த புதியவர்களைப் போய்ப் பார்த்தாள்.

சபாபதி குடும்பம் வீட்டைப் பத்திரப் பதிவு செய்ததோடு சரி, அதன்பின் அவர்களோடு சேர்ந்து உணவருந்தக் கூட வரமுடியாது என்று சொல்லிக் கிளம்பிப் போய்விட்டார்கள். பிறகு, அவர்களைப் பற்றிய தகவல் எதுவும் தெரியாது என்றார்கள் அந்தப் புதியவர்கள்!

இன்னமும் யோசித்து, அந்தப் பகுதி தபால் நிலையத்தில் போய் விசாரித்துப் பார்த்தாள்.

ஆனால், அந்தப் புறநகர்ப் பகுதியின் சிறிய அஞ்சல் அலுவலகத்தில் பணி புரிந்த மூன்று பேருக்குமே எந்த விவரமும் தெரியவில்லை. சபாபதி குடும்பத்துக்கு தபால் வந்தால் திருப்பி அனுப்புவதற்கான முகவரி எதையும் அவர்கள் தரவில்லை என்றார்கள்.

வேறே என்ன... என்று யோசித்துவிட்டு, சபாபதியின் தொழில் இடத்துக்குப் போனால், அதுவும் 'டு லெட்' போர்டோடு பூட்டிக் கிடந்தது. அக்கம் பக்கத்தில் ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லை.

அது வாடகை இடம் எனவே, இடத்துச் சொந்தக்காரரைப் போய்ப் பார்த்தாள்.

முன்பணம் தந்ததையுமே கேட்டு வாங்கிப் போனதாகச் சொன்னார்கள். மேலே என்ன செய்யப் போகிறார்கள் என்று எந்த விவரமுமே சொல்லவில்லை என்றார் அவர்.

"நஷ்டப்பட்டு ஓடுகிறார். வேறே எதுவும் கடன் கிடன் இருக்கிறதோ என்னவோ? எங்கே இருக்கிறார் என்று கேட்டு, அது நம் மூலமாக யாருக்கும் தெரிந்து... பாவம், நம்மால் எதற்கம்மா, ஒரு நல்ல மனிதருக்குக் கஷ்டம்? அதனால்தான் வற்புறுத்திக் கேட்கவில்லை" என்றார் இடத்துச் சொந்தக்காரர்.

இங்கே ஒருத்தி உயிராய் எண்ணித் தேடுகிறாள், அவளைப் பற்றி நினைக்கக்கூட, இல்லாமல் குடும்பமே கண் மறைவாகப் போய் விட்டார்கள்!



இதற்கு மேல் அவர்களோடு பேசுவதானால், பத்திரிகைகளில் 'காணவில்லை' விளம்பரம் போட்டு கண்டு பிடித்துதான் பேச வேண்டும்! ஊர் உலகத்துக்கெல்லாம் தெரியும்படி! மகாக் கேவலம்!

அது மட்டும் இல்லாமல், தொழில் இடத்துச் சொந்தக்காரர் சொன்னது போல, அந்தக் குடும்பத்துக்கு வேறு மாதிரித் துன்பம் நேர்ந்தாலும் நேரலாம்.

அல்லது ஒருவேளை... என்று எண்ணும்போதே, ஒருகணம் 'கப்'பென்று வயிறு காலியாகிப் போன உணர்வு அவளுக்கு! முகம் உடம்பு எல்லாம் வியர்த்துவிட்டது.

ஒருவேளை இந்தத் தோல்வி பொறுக்காமல் குடும்பமே தப்பான முடிவை எடுத்துவிட்டார்களோ?

அதிர்ந்து கலங்கிப் போனவள், மெல்ல மெல்ல அமைதியை இழுத்துப் பிடித்துக் கொண்டு யோசித்தாள்.

அப்படித் தப்பு முடிவுக்கு போகிறவர்கள், வீட்டை விற்றுப் பணத்தை வாங்கிக்கொண்டா அப்படிச் செய்வார்கள்? வீட்டை விற்பது தவிர வேறு வழியில்லை என்று தெரிந்ததுமே, அந்த முடிவுக்கு வந்திருப்பார்களே! தொழில் இடத்து முன்பணத்தையும் வாங்கிக் கொண்டுதானே போயிருக்கிறார்கள்! அதனால் கெடுதல் ஏதும் நேர்ந்திராது.

ஆனால் இதற்கு மேல் எங்கே போய்த் தேடுவது?

செய்வதற்கு எதுவும் இல்லாதபோது, எரிச்சல்தானே ஏற்படும். அதுபோலவே சௌமினிக்கும் ஆத்திரம் வந்தது.

இருக்கட்டும், மனதில் கொஞ்சமாவது அன்பிருந்தால் அவர்களாக வரட்டும் என்று விட்டுவிட்டு, முடிந்த அளவு வேலையிலும் படிப்பிலும் சௌமினி முழு மூச்சோடு ஈடுபட்டாள்.

ஆனால், அந்த இரண்டுக்குமே இடையூறு நேரும் விதமாக, சௌமினியுடைய தந்தை தீவிரமாக நோய்வாய்ப்பட்டார்.

என்ன முயன்றும் தேறாமல், அவரது உயிரையே விதியிடம் பறிகொடுக்கவும் நேர்ந்தது.

தந்தையின் இழப்பைப் பற்றிப் பெரும் வேதனையோடு சொல்ல முயன்றால், அப்போதும் தனசீலன் குடும்பத்தினர் யாரும் அதைக் கண்டுகொள்ளவில்லை.

அப்போதுதான் சௌமினியின் மனம் கொதித்தது. தந்தை பற்றிய செய்தி, அவள் மூலமாக அவர்களுக்குச் செல்ல வாய்ப்பில்லைதான்.

அவளோடு தொடர்பையே வெட்டுகிற மனிதர்களிடம் அவள் மூலமாகச் செய்தி போகாதுதான்.

ஆனால் இரு குடும்பங்களையும் அறிந்த யார் மூலமேனும் விவரம் தெரியாமலா இருக்கும்? நேரில் வந்து அன்னையிடம் ஒரு வார்த்தை வருத்தம் தெரிவிக்கக்கூடவா முடியாது?

ஏன்? அவளைப் பார்க்க பிடிக்கவில்லை என்றால், நேரில்கூட வரவேண்டாம். ஒரு ஃபோன் கால்? ஒரு மெஸேஜ்?

அந்த அளவு நாகரீகமும் இல்லை, அன்பிலா நெஞ்சில் ஈரமும் இல்லை! இன்னும் இவர்களைப் பற்றி நினைப்பது போன்ற மடத்தனமும் வேறு எதுவுமே இல்லை!

இந்த முடிவோடுதான் சௌமினி அன்றிலிருந்து தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு வாழத் தொடங்கினாள், வாழ்ந்தாள்.

மனம் ஒரு குரங்கல்லவா? அவ்வப்போது முரண்டு பிடித்து, வேண்டாத பக்கம் ஓடும்தான். வலிக்கவும் செய்யும். ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், இயல்பாக இருக்கவும், சௌமினி பழகியிருந்தாள்.

நன்கு பழகிவிட்டதாகத்தான் அவள் எண்ணியிருந்தாள். ஆனால், தாயார் வேறு சொன்னது, அவளை அதிரச் செய்தது, தாய் அறியாத சூலா என்பது இதைத்தானோ?

எப்படி இருந்தாலும், எதிர்காலம் அற்ற இந்த எண்ணங்களுக்கு இடமே கொடுக்கக்கூடாது என்பதில் சௌமினி உறுதியாக இருந்தாள்.

ஆனால் வழிகாட்டத் தந்தையும் இல்லாத நிலையில், அவளுடைய தம்பி என்ன ஆவான்?



## அன்பு மனம் மாறியதேன் 4

முன்தினம் நேர்ந்த இந்த ஒரு சலனம் தவிர, சௌமினியின் அக வாழ்க்கையில் பெரிதாக வேறுபாடு எதுவும் இதுவரை நேர்ந்தது இல்லை.

காலம் எப்படிப் போயிற்று என்பதே தெரியாமல், அன்றோடு நாலு ஆண்டுகளும் கடந்திருந்தன.



ஆனால் இந்த நாலு ஆண்டுகளில் சௌமினியின் புற வாழ்வில் மாற்றங்கள் நேர்ந்திருந்தன.

அவளது கல்லூரிப் படிப்பு முடிந்திருந்தது.

தந்தையின் மறைவின் பின் கிராஜுவிடி, பிராவிடண்ட் ஃபண்ட் பணத்தின் மூலம் வீட்டின் மேல் இருந்த கடன் முழுவதையும் கட்டி, அந்த ஃப்ளாட்டை முழுதாக சுந்தரி பெயருக்கு மாற்றினார்கள். அந்தத் தாய்க்கு வந்த பென்ஷனும், சௌமினியின் வருமானமுமாக, வீட்டுச் சக்கரம் நல்லபடியாகச் சுழன்றது.

முன்பு எழுத்தாளர் ராஜகெம்பீரனுக்கு அடிக்கடி போய் உதவியாகச் செய்தது மாறி, தினமும் மதியத்திலிருந்து அவரிடம் மாத ஊதியத்துக்கே சௌமினி வேலை செய்தாள்.

மாதாமாதம் ஒழுங்கான வருமானம். அப்படி ஒரு வருமானம் அவளுக்கு வந்த புண்ணியம், எழுத்தாளர் ராஜகெம்பீரனுக்குத்தான்.

ஏனெனில், படிப்பு முடிந்ததும் தனசீலனை மணந்து, அவனது தொழிலில் உதவி செய்வது என்று திட்டமிட்டிருந்ததால், சௌமினி பொறிஇயல் போன்ற உடனடி வேலை வாய்ப்பு தரும் பாட வகுப்புகளில் சேரவில்லை.

ஏற்கனவே விருப்பம் இருந்ததால் வரலாறை எடுத்துப் படித்திருந்தாள். கூடவே ஆர்வமும் இருந்ததால், 'நெட்'டை நோண்டுவது, அவளது பிரியமான பொழுதுபோக்கு.

இரண்டுமே, இப்போது எழுத்தாளருக்குப் பயன்பட, நிறுவன வேலைகள் போல, ராஜகெம்பீரன் அவளுக்கு மாத ஊதியமே கொடுக்கலானார். அரை நாள் வேலை என்பதால் சற்று குறைவாக இருந்தது. அரை நாளே என்பதாலேயே சௌமினியும் அது பற்றி குறைப்படவில்லை.

கம்ப்யூட்டர் கோர்ஸ் பயில்வதற்கு அரை நாள் அவகாசம் கிடைத்ததே, அவளுக்குப் பெரிதாக தோன்றியது.

இடையிடையே சில பல சங்கடங்கள் நேர்ந்தாலும், அதனால் சஞ்சலப்பட்டாலும், ஒழுங்கான வேலை தந்து ஊதியம் கொடுத்ததில் அவளுக்கு ராஜகெம்பீரனிடம் மிகுந்த நன்றி இருந்தது.

எழுத்தாளரின் கதைகளில், கதை நடக்கும் களங்கள் பல வகைகளாக இருக்கும். பயிர்தொழிலில் இருந்து, விண்வெளி ஆராய்ச்சி வரை எத்தனையோ விதம். அந்தக் களங்களைப் பற்றி

'நெட்'டில் ஆராய்ந்து, அவருக்குத் தேவைப்பட்டதைத் தொகுத்துக் கொடுப்பதுதான், முதலில் அவளது பணியாக இருந்தது.

கூடவே வீட்டில் எல்லோரும், எழுத்தாளருடைய மருமகள் வாசந்தியும், பேத்தி தீபிகாவும் அவளோடு நன்கு பழகினார்கள்.

எழுத்தாளருடைய மகன் மத்தியக் கிழக்கில் பணி புரிந்ததால், ஒன்றரை ஆண்டுகளுக்கு ஒரு தரம் அவன் வரும் நாட்கள் தவிர, எழுத்தாளர், வாசந்தி, தீபிகா ஆகிய மூவர் மட்டும்தான் வீட்டில்.

அவ்வப்போது "அக்கா அம்மாவுக்கு இந்தக் கணக்கு தெரியலை, பள்ளிக்கூடத்திலே சொன்னது எனக்குப் புரியலை, இதை நீங்கள் கொஞ்சம் போட்டுத் தாருங்களேன்! ப்ளீஸ்க்கா!"என்று அந்தச் சின்னப் பெண் தீபிகா கெஞ்சிக் கேட்கையில் சௌமினிக்கு பாவமாக இருக்கும்.

மற்ற பாடங்கள் என்றால் புரியாவிட்டாலும் மனதில் உருப்போட்டு ஓரளவு சமாளிக்கலாம். கணக்கை அப்படி செய்ய முடியாதல்லவா?

அத்தோடு, கணக்குப் பாடம் சில பேருக்குத்தான் பிடிக்கும். கணக்கில் கொடுத்திருக்கும் சின்னச் சின்னக் குறிப்புகளைக் கண்டுபிடித்து, உரிய விதமாகப் பயன்படுத்தி விடைகாணும் ஆர்வமும், விடை கிடைத்ததும் அதில் மகிழ்ச்சி அடையும் தன்மையும் சௌமினிக்கு இருந்தது.

கல்லூரியிலேயே கணக்கை முக்கிய பாடமாக எடுக்கலாமா என்று கூட, அவள் யோசித்தது உண்டு. ஆனால், கணக்கு இயல்பாகவே வருவது, சரித்திரம் ஆசைக்குப் படிப்பது என்று பின்னதையே எடுத்துப் படித்தாள்.

எனவே, அவ்வப்போது தீபிகா வந்து கேட்கும்போது செய்து கொடுப்பாள் செய்யும்போதே, சிறுமிக்குக் கற்றும் கொடுப்பாள்.

இப்படித் தொடங்கியது, தீபிகாவுக்கு ப்ராஜக்ட் செய்வதில் உதவுவது, மேப்பில் குறிப்பது, அவசரத்துக்கு மற்ற வீட்டுப் பாடங்களில் உதவுவது என்று மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டே போய், கிட்டத்தட்ட ஒரு தனி ட்யூசன் டீச்சரின் வேலையையும் பார்த்தாள் எனலாம்!

ஒருநாள் செய்தால் உதவி. மறுநாளும் செய்தால் அது கடமை என்றாகிவிடும் என்பதாக மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டு என்று கேரள சிநேகிதி ஒருத்தி அவளிடம் சொன்னதுண்டு.



இங்கேயும், உதவுவது மாறிப் பெரும்பாலும் சௌமினியே செய்வதாயிற்று.

எழுத்தாளரும், பேத்திக்கு பாடத்தில் சௌமினி உதவுகிறாள் என்றால், அவரது வேலையில் அவசரம் காட்ட மாட்டார்.

"பரவாயில்லைம்மா. பேத்தி குட்டிக்கு முதலில் உதவியைப் பண்ணி முடி, நம்மதை நாளைக்கு சற்று முன்னதாக வந்து முடித்துவிடு" என்று அவரது வேலையை மறுநாள் செய்வதற்கு பெரிய மனதாக அனுமதி கொடுப்பார்.

என்னவோ அவளுக்கு சலுகை கொடுப்பது போல முதலில் தோன்றினாலும், உண்மையில் பயன் பெறுவது அவருடைய பேத்திதானே என்று அவ்வப்போது சௌமினிக்குத் தோன்றும். ஏனெனில் மனதில் எவ்வளவோ நன்றி உணர்வு இருந்தாலும், அவளும் முட்டாள் அல்லவே! அன்றோ மறுநாளோ, எழுத்தாளரின் வேலை எப்படியும் நடந்து விடுவதால், அவருக்கு நஷ்டமில்லை. அதிக வேலை செய்கிற கஷ்டம் சௌமினிக்கு மட்டும்தானே?

ஆனால், பென்ஷன் போக, அவளுடைய குடும்பத்துக்குத் தேவையான அதிகப்படியான பணத்தைத் தருவது இதே ராஜகெம்பீரன் சார்தான்! எனவே, இந்த சின்ன விஷயத்தைப் பெரிதாக நினைக்கக் கூடாது என்று சௌமினி தன்னையே சமாதானப்படுத்திக் கொள்வாள்.

ஆனால், இது மெல்ல மெல்ல விரிவடைந்து, தீபிகாவின் பாடத்தில் உதவி செய்வதும் அவளுக்கு அன்றாட வேலைகளில் ஒன்று என்பது போல ஆயிற்று.

வருகிறபோது, இந்த ஈபி பில்லைக் கட்டிவிடுகிறாயா என்று ஒரு தரம் மெதுவாகத் தொடங்கியதுதான். இப்போதெல்லாம் மின்சாரக் கட்டணம், தண்ணீர் வரி, சொத்து வரி கட்டுவது எல்லாமே அவள்தான் பால்கார்டு மாற்றுவது, சமீபத்தில் அவளது வேலைகளுள் ஒன்றாகச் சேர்ந்தது.

இதெல்லாமா அவளது பணியோடு சேர்ந்தது என்று ஒரொரு சமயம் மனது முரண்டினாலும், "என்னடாம்மா, நம் வீட்டுக்குக் கட்டும்போது சேர்த்துச் செய்கிறாய். அவ்வளவுதானே? இதற்காகத் தனியாகவா அலைகிறாய்?" என்று அவளுடைய தாயார் சுந்தரியே எடுத்துச் சொல்வதுண்டு.

உடனே ஆமாம்தானே என்று மகளுக்கும் தோன்றிவிடும்.

ஆனால், இரண்டு தரம், ஈபி கார்டை வாசந்தி எங்கேயோ வைத்துவிட்டு, அவளை மறுபடி மறுபடி அலைய வைத்தபோது, சௌமினிக்கு உள்ளூர ரொம்பவே கொதிப்பாக வந்தது.

முக்கியமான காரணம், மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கு அன்றுதான் கடைசி நாள். எனவே, பெரிய நீண்ட வரிசையில் நின்று கட்டாயமாகக் கட்ட நேர்ந்ததில், அவள் காலை நேரத்தில் பயின்று கொண்டிருந்த கம்ப்யூட்டர் வகுப்புக்குச் செல்ல முடியாமல் போனதுதான்.

சம்பளம் தரும் எழுத்தாளருடைய மருமகளை ஒன்றும் சொல்ல முடியாமல், உள்ளேயே குமைந்தாள் அவள்.

கம்ப்யூட்டர் வகுப்பு 'மிஸ்' ஆனது பற்றி எழுத்தாளரிடம், வெறுமனே பேச்சில் குறிப்பிடுவதும் அவளுக்கு உசிதமாகப் படவில்லை. ஏனெனில், இது போல ஏதாவது கோர்ஸ் பயின்றால் பிற்காலத்துக்கு நல்லது என்று அவள் சும்மாப் பேச்சுவாக்கில் குறிப்பிட்டபோதே, அந்தப் பேச்சு பிடிக்கவில்லை என்று அவர் தெளிவாகக் காட்டியிருந்தார்.

"வெறும் திருட்டுப் பயல்கள். சும்மாப் பேரை மாற்றி மாற்றிப் போட்டு, அந்தக் கோர்ஸ், இந்தக் கோர்ஸ் என்று பணம் தின்னுகிறான்கள். அவற்றால் பயனே கிடையாது. அங்கே நடக்கிற தில்லுமுல்லுகளைக் களனாக வைத்துக் கூட ஒரு கதை எழுதலாம். எழுதி அவனுகளைக் கிழிக்க வேண்டும்" என்று ராஜகெம்பீரன் அவளிடம் அப்போது அடித்துப் பேசியிருந்தார்.

அவரைப் பொறுத்தவரை, கம்ப்யூட்டர் என்பது ஒரு மெஷின். அதில் சில பல எளிய வேலைகளைச் செய்து கொள்ளலாம். அவருக்காகச் சௌமினி செய்வது போல, அவ்வளவே.

இவரிடம் போய், அவள் காலை வேளைகளில் கம்ப்யூட்டர் கோர்ஸ் கற்பது பற்றி சொன்னால், அது பிரச்சினையாகி விடாதா?

எனவே அது பற்றி அவள் வாயே திறப்பது இல்லை!

ஆனால், பள்ளிக்குச் செல்லும் மகளின் படிப்பைப் பாராமல், எந்த வேலையையும் உருப்படியாகச் செய்யாமல் சீரியல் பார்ப்பதே தலையாய கடமை என்பது போல டீவியின் முன்னே சோஃபாவில் விழுந்து கிடக்கும் வாசந்தியைப் பார்க்கும்போது, எப்போதும் சௌமினிக்கு உள்ளூர வெறுப்பாக இருக்கும்.

ஒருவிதமான உழைப்பும் இல்லாமல், அசையாமல் கிடந்து டீவி



பார்த்தால், தன் உடம்பு ஊதிப் பெருப்பது கூடவா அந்த வாசந்தியை உறுத்தாது.

பெற்ற மகளுக்குக் கணக்குப் பாடம் கற்றுக் கொடுக்காதது கூடப் பரவாயில்லை. சுட்டுப் போட்டாலும் கணக்கு வராத விதம் என்று விட்டு விடலாம்.

ஆனால், எல்லா பாடங்களிலும் உள்ள வீட்டுப் பாடம் முழுவதையும் அல்லவா, இப்போது சௌமினி மேலேயே கட்டுகிறாள்?

அந்த வாசந்தியின் சோம்பேறித்தனத்துக்கு சௌமினி பலியாவதா?

பலி... என்பது ரொம்பப் பெரிய வார்த்தையாக இருந்தாலும், சௌமினியின் நேரம் வீணாவது உண்மைதானே?

ஊகூம். இது சரியில்லை. முக்கியமாக, அவளது கம்ப்யூட்டர் வகுப்புகள் வீணாவது கூடவே கூடாது. அந்தப் பயிற்சி, நல்லபடியாக முடிந்து டிப்ளமோ வாங்கிவிட்டால், அதை வைத்துப் பெரிய வேலை கூடக் கிடைக்கலாம். கிடைக்கும்!

இதைப்போலப் பகுதி நேர வேலையாகக் கிடைத்தால், இரண்டு வருமானங்களாகப் பணம் கொட்டாதா?

சௌமினிக்கு கற்பனை சுகமாக இருந்தது. ஆனால், அது நனவுக்கு வர, இன்னமும் காலம் பிடிக்கும்!

கம்ப்யூட்டர் வகுப்புகள் முடிவடையவே, இன்னும் ஆறு மாதங்கள் ஆகும்!

அதுவுமே இந்த ரீதியில் போனால், இன்னும் எவ்வளவு நாள் இழுக்குமோ? அடுத்தது, அதற்கான உயர்வான வேலை கிடைப்பது!

அதன் பிறகும் தேவையான தருணத்தில் பணம் கொடுத்து, வேலை கொடுத்து உதவிய, இப்போதும் உதவிக் கொண்டிருக்கும் ராஜகெம்பீரன் சாரை, அலட்சியமாக நட்டாற்றில் விட்டுவிட்டு அவளால் போக முடியாது.

போக மாட்டாள். சௌமினி நன்றி கெட்டவள் இல்லை!

இன்றைக்கே என்றாலும், ராஜகெம்பீரன் சாருக்கு அவளைப் போல, அவளை விட மேம்பட்டவர்களாகவே எத்தனையோ பேர் இந்தப் பணி செய்யக் கிடைப்பார்கள். அவளுக்குத்தான், அவர் தரும் ஊதியம் இல்லாவிட்டால் குடும்பம் கஷ்டப்பட்டு போகும்.

பலவாறு யோசித்து, இன்றைய நிலையே மேல் என்று மனதை

அமைதிப்படுத்திக் கொண்ட போதும், மனதில் சலிப்பு பரவுவதை, அவளால் தவிர்க்க முடியவில்லை.

என்ன காரணமோ, எழுத்தாளர் ராஜகெம்பீரனும் 'சுள் சுள்'ளென்று எரிந்து விழுந்து கொண்டே இருந்தார். கண்ணில் பட்ட எல்லோரிடமும்தான்.

மருமகள் பேத்தி கூட விதி விலக்கல்ல.

எப்போதும் தேன் தடவிப் பேசுவதை வழமையாகக் கொண்டிருந்தது மாறி, அவருடைய புத்தக பதிப்பாளரிடம் கூட இனிமையற்ற குரலில் அவர் பேசியதைக் கேட்கையில், சௌமினிக்கு பிரமிப்பாக இருக்கும்.

அவளிடமும் வாம்மா, போம்மா என்கிற கனிவான குரல் மறைந்து பல காலம் ஆகிவிட்டிருந்தது.

எதனால் இப்படி?

ஏதேனும் தட்ப வெப்ப நிலை பாதிப்பால், அவளைப் போல எல்லோருக்குமே மனநிலையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ?

சற்றுக் கவலையுடனேயே சௌமினி எழுத்தாளரின் வீட்டை அடையும்போது, அங்கே அவர் சும்மாவே ருத்திர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தார்.

நல்லவேளையாக, அவளைப் பார்த்தும், அவரது கோபம் அவளிடம் பாயவில்லை.

அன்று மாட்டியவன் பத்திரிகை போடும் பையன். மாதம் முழுதும் காலையில் செய்திப் பத்திரிகையைப் போடுகிறவன், அன்று பணம் வாங்க வந்திருப்பான் போலும்.

காலையில் ஐந்தரை மணிக்குப் பத்திரிகை வரவில்லை என்று அவனிடம் ராஜகெம்பீரன் கத்திக் கொண்டிருந்தார்.

குறிப்பிட்ட நேரத்துக்குப் பத்திரிகை தினமும் வருவதில்லையாம். முன்னாலோ, பின்னாலோதான் வருகிறதாம். 'டாண்' என்று ஐந்தரை மணிக்குப் பத்திரிகையைக் கொண்டு வராமல், அப்படி என்ன கும்பகர்ணன் போலத் தூக்கம்? பத்து நிமிஷம் லேட்! நாலாம் வீட்டுக்காரருக்குப் பதினைந்து நிமிஷம் தாமதம்! இப்படியே போனால், கடைசி வீட்டு மனிதர் காலைச் செய்தியை மாலையில் படிக்கிற மாதிரி ஆகிவிடுமாம். அதனால், அந்தப் பகுதியில் வாழ்கிற எல்லோரையும் கூட்டிப் போய் பத்திரிகை அலுவலகத்தில் புகார் பண்ணப் போகிறாராம்! அப்புறம், அவன் இந்த ஏரியாப் பக்கமே



தலை காட்ட முடியாதாம்!

இதே ரீதியில் மிரட்டலும், வசை மழையுமாகப் பொழிந்து கொண்டே இருந்தார்.

"ஐயா, ஐந்து மணிக்கு பத்திரிகை போடத் தொடங்குகிறோம். வரிசையாகப் போட்டு வரும்போது, இங்கே வந்து சேர, இந்த நேரம் ஆகிவிடுகிறது." என்று பத்திரிகைப் பையன் சொன்னதை எழுத்தாளர் காதிலேயே வாங்காமல், அவர் சொன்ன அதே ஐந்தரையிலேயே நின்றார்.

"ஒரே நேரத்தில் அத்தனை வீடுகளுக்கும் போட முடியுமா? ஒவ்வொரு வீடாக போட்டு வரும்போது..." என்று விளக்க முயன்றுவிட்டு, இவரிடம் பேசிப் பயன் இல்லை என்று கண்டு, பையன் வாயை மூடிக் கொண்டான்.

செல்லில், லாப்டாப்பில் ஒரே வினாடியிலேயே பல பேருக்கு செய்தி அனுப்பிவிடலாம். ஆனால் பத்திரிகையை வீடு வீடாக நேரில் போய் அல்லவா கொடுக்க வேண்டும்! அதைப் பற்றி யோசிக்காமல், என்ன காட்டுக் கத்தல் என்றுதான் சௌமினியும் நினைத்தாள்.

ஆனால் அவளும் வாய் திறக்கவில்லை. ராஜகெம்பீரனின் கோபம் அவள் மீது பாயாது என்று என்ன நிச்சயம்? பத்திரிகை போடும் பையன் நியாயத்தைச் சொன்னால், அதைக் கேட்க கூடாது என்கிற பிடிவாதத்தில் பேசுகிற இவரிடம் அவள் மட்டும் என்ன நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

நரி இடமாகவோ, வலமாகவோ எப்படியோ போகட்டும். மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி என்கிற மனோபாவத்துடன் அவள் சும்மா வாயை மூடிக் கொண்டபோதும், மனம் துணுக்குற்றது.

தேவையான சமயத்தில் உதவினார் என்று தெய்வத்துக்கு அடுத்த இடத்தில் எழுத்தாளரை வைத்திருந்தது அவளுக்கு நினைவு வந்தது. இப்போதும் அவர் தரும் ஊதியம் தேவைதான். ஆனால் சட்டென்று நரி என்று எண்ணத் தோன்றுகிறதே!

அந்த அளவுக்கு எழுத்தாளர் இறங்கிப் போனாரே! முதலில் சொன்னதற்கு மேலாக வேலைச் சுமையை ஏற்றிக்கொண்டே போனால், இப்படித்தான் நினைக்கத் தோன்றுமா?

சும்மாவே வேலையில் திருப்தி இல்லாதிருந்த சௌமினிக்கு மேலும் சலிப்பூட்டும் விதமாக அன்றைய நிகழ்வுகள் தொடர்ந்தன.

அவள் அஞ்சியது போலவே, பத்திரிகை பையன் போனதும்,

ராஜகெம்பீரன் சௌமினியை வறுத்தெடுக்கத் தொடங்கினார்.

தப்பு அவளது இல்லைதான். மின்சாரம் தடைப்பட்டது, அவளது பிழையில்லை. என்றாலும், அவரைப் பொறுத்தவரை அவர் சொன்ன வேலை நடப்பதுதான் நியாயம். நடக்காவிட்டால், அதுதான் அநியாயம்!

பயங்கரக் கோபத்துடன் எழுத்தாளர் பாடத் தொடங்கிவிட்டார். கர்ண கடூரமாக.

அவர் ஒன்று சொல்லிவிட்டுப் போனால், அதைச் செய்து முடித்திருக்க வேண்டும். அதற்காகத்தானே அவர் சம்பளம் கொடுக்கிறார். சும்மா வம்பளந்து, வாய் பார்ப்பதற்கோ, உட்கார்ந்து தூங்குவதற்கோ அல்ல!

அவள் வேலையைத் தொடங்கும்போது போன மின்சாரம், மாலையில் அவள் கிளம்பும்வரை வரவே இல்லை என்றால், அதையே ராஜகெம்பீரன் நம்ப மறுத்தார்.

அதெப்படிப் பவர் போகும்? மின்வெட்டு கூட இல்லாத நேரத்தில்?

சொன்ன வேலையைச் செய்யாமல் இருந்ததோடு பொய்ச் சாக்கு வேறு சொல்லி சமாளிப்பதா? அந்தத் தெருவில் ஒரு முக்கியப் பிரமுகர் வசிப்பதால், அவர் தயவில் தெருவில் எல்லோருக்குமே மின்சாரம் தண்ணீர் இரண்டுமே தடையற்றுக் கிடைப்பது அவருக்குத் தெரியுமாம்.

சௌமினி திகைத்தாள்.

அதெப்படி முடியும்? வாசந்தி எத்தனையோ தடவை புகார் செய்தாளே!

"சார், நான் சொல்வது உண்மை. உங்கள் மருமகளைக் கூப்பிடுகிறேன், கேட்டுப் பாருங்கள். அக்கா வந்து சாரிடம் சொல்லுங்கள்" என்று வாசந்தியைக் கூப்பிட்டாள்.

அவ்வளவு நேரம் அவர்கள் கண்ணில் படும்படியாகவே ஹாலில் ஏதோ செய்து கொண்டிருந்த வாசந்தி, மற்றவள் அழைத்ததும் அவசரமாகப் பின் பக்கம் சென்றவள் மறுபடி அந்தப் பக்கம் வரவே இல்லை.

"சொல்வது முழுப்பொய். இதிலே வேலிக்கு ஓணான் சாட்சி வேறாம். இரண்டும் நொறுக்குத் தீனியோடு உட்கார்ந்து டிவி சீரியல் பார்த்திருக்குங்கள்" என்று ராஜகெம்பீரன் உரக்கவே முணுமுணுக்க,



சௌமினியின் கண்களில் நீர் மல்கியது.

வேலிக்கு ஓணான் சாட்சியா? தன்னைத் திட்டுகிறாரே என்ற பயத்தில் சமயம் பார்த்து வாசந்தி ஒதுங்கிக் கொண்டாளே! அநியாயமாய்க் குற்றம் சாட்டும் இவரிடம் எப்படி நிரூபிப்பது?

சௌமினி திகைத்துக் கலங்கும்போது, வாயிலில் ரிக்ஷா வந்து நின்று தீபிகா அதிலிருந்து இறங்கி வந்தாள்.

இதோ இன்னொரு சாட்சி!

"தீபு, இங்கே வாம்மா" என்று அழைத்து "நீங்கள் வேணுமானால், உங்கள் பேத்தியிடமே விசாரியுங்கள், சார். மின்சாரம் இல்லாததால் கம்ப்யூட்டரில் வேலை செய்ய முடியாமல் போய், மின்சாரம் வருவதற்காகக் காத்திருந்த நேரத்தில், தீபிகாவுக்கு நிறையக் கணக்குப் போட்டுக் கொடுத்தேன். தாத்தாவிடம் சொல்லு தீபிகா" என்றாள் சௌமினி.

ஒருகணம் மிரண்டு விழித்த சிறுமிக்கு உடனேயே தாயார் சொல்லிக் கொடுத்தது நினைவு வந்தது.

"நேநேற்றைக்கா, தாத்தா? எனக்குச் சிக்கன்குனியா மாதிரிக் கையை வலித்ததா? படுத்து, அப்படியே நன்றாகத் தூங்கிவிட்டேன். எனக்கு... எனக்கு ஒன்றுமே தெரியாது தாத்தா. ஆனால், அக்கா கொஞ்சம் கணக்குப் போட்டு வைத்ததாக அம்மா சொன்னா... எனக்குப் பசிக்குது தாத்தா! நான் சாப்பிடப் போறேன்" என்று உள்ளே ஓடினாள் சிறுமி.

சௌமினிக்கு இப்போது எல்லாமே புரிந்தது.

முழுதும்பொய்! ஏமாற்றுவேலை! அம்மாவும் மகளும் சேர்ந்து செய்த திட்டம். வீட்டிலேயே மெயினை அணைத்துவிட்டு தீபிகாவுக்கு கணக்கு ஹோம் வொர்க்கை, அவளைச் செய்ய வைத்திருக்கிறார்கள்.

திட்டம் வாசந்தியதாக இருக்கலாம். ஆனால் மகளும் ஒத்துழைத்திருக்கிறாள்!

ஆனால், இதை எப்படி நிரூபிப்பது? ஏதாவது தொடர்பு விட்டுப் போயிருக்கலாம் என்று எளிதாகச் சமாதானம் சொல்லிவிடலாம்.

முதலில் மின்சாரம் தடைப்பட்டதையே, மாமனாரிடம் வாசந்தி ஒப்புவதாக இல்லையே! மகளும் ஓடிவிட்டாள் எழுத்தாளரோ வீட்டினர் பேச்சைத்தான் ஒப்புவார்.

கணக்குகள் நிறையத்தான் இருந்தன. ஆனாலும் வீட்டுப்

பாடத்தை அடுத்தவர் தலையில் கட்டுவதற்காக, இப்படிப் புளுகுவார்களா? இன்னொரு தரம், இந்த உதவி, அவள் எப்படிச் செய்வாள் என்று யோசிக்க வேண்டாமா?

அல்லது, எழுத்தாளரிடம் சொல்லிக் காரியத்தை சாதித்துக் கொள்ளலாம் என்ற திமிரா? அனியாயமாகத் திட்டு வாங்குகிறாளே என்பதே இல்லாமல், ஓரப் பார்வையோடு வெளியே வேறு போயாயிற்று.

எப்படியோ, அன்று ராஜகெம்பீரனிடம் நன்றாக ஏச்சுக் கேட்டபடியே, வேலை செய்தபோது, சௌமினியின் மனம் ரொம்பவும் கசந்து விட்டிருந்தது.

மேல்தட்டைச் சேர்ந்த இரண்டு வர்க்க மக்களுக்கும் ஏற்ற விதமான உணவு விடுதிகள், அவற்றில் கிடைக்கும் வசதிகள், பதார்த்தங்கள் பற்றிய தெளிவான குறிப்புகளை அவள் தொகுக்க வேண்டியிருந்தது. ரொம்பக் கவனத்துடன் சேகரிக்க வேண்டிய விவரங்கள்.

ஆனால் ஒரு மனிதர், நினைத்து நினைத்தா, திட்டிக் கொண்டே இருப்பார்? வரிக்கு வரி திட்டிக் கொண்டிருந்தால் வேலைதான் ஓடுமா?

ராஜகெம்பீரன் சார் கேட்ட வேலையை அன்று செய்து முடிக்க முடியுமா என்றே, சௌமினிக்கு சந்தேகம் வந்தது. அந்த அளவுக்கு அவரது ஏச்சும் பேச்சும் அவளுக்கு வேலையில் இடையூறு செய்தன.

ஆனால் நல்லவேளையாக, ராஜகெம்பீரன் சாருடைய புத்தகங்களைப் பிரசுரம் செய்யும் பதிப்பக உரிமையாளர் பரசுராமன், அந்த நேரத்தில் அங்கே வந்து சேரவே, எழுத்தாளரின் வசைமழை ஒருவாறு நின்றது.

வந்தவரை ராஜகெம்பீரன் வீட்டின் உள்ளே அழைத்துப் போய்ப் பேசினார்.

வார்த்தை தடித்து உரத்துக் கேட்டு மறுபடியும் சௌமினியின் கவனம் கலைந்தது.

இப்போதெல்லாம் இதுவும் அடிக்கடி நடக்கிறது!

கஷ்டப்பட்டு மனதை ஒருமுகப்படுத்திக் கொண்டு அவள் வேலையில் முனையும்போது, எழுத்தாளர், பதிப்பாளர் இருவரும் வெளியே வந்தனர்.

"நான் வெளியே போக வேண்டும். எதுவும் வேண்டும் என்றால்,



இவளிடம் கேட்டுக் கொள்ளலாம்" என்று முசுட்டுக் குரலில் கூறிவிட்டு, ராஜகெம்பீரன் மடமடவென்று நடந்து காரில் ஏறிக்கொள்ள காரும் கிளம்பிப் போய்விட்டது.

அவமதிப்பதே நோக்கமாகச் செய்தது. இனி, இவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று உள்ளூரக் கலக்கத்தோடு பார்த்தால், பரசுராமனின் பேச்சு சௌமினியைப் பெரு வியப்பில் ஆழ்த்தியது. வாழ்வில் ஒரு புது நம்பிக்கையையும் தந்தது!



## அன்பு மனம் மாறியதேன் 5

சௌமினியின் பார்வையில் புத்தக வெளியீட்டாளர் என்ன கண்டாரோ? அவரது முகத்தில் இருந்த சிறு சுளிப்பு மறைய, அவளைப் பார்த்து முறுவலித்தார்.

கம்ப்யூட்டர் திரையைப் பார்வையால் கூர்ந்தபடி "என்னம்மா ராஜா சாருக்கு என்னென்ன வேலை செய்கிறாய், செகரட்டரி என்றாரே?" என்று வினவினார்.

உட்காருமாறு கோரி ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு அவள் சொன்னாள் "முக்கியமாக கதைக் களனுக்கான ஆராய்ச்சிதான், சார். தேவையான தகவல்களைத் திரட்டி தப்பு சரி பார்த்து, வேண்டியபடி தொகுத்துக் கொடுப்பது" என்றாள் சுருக்கமாக.

லேசாக விழியகல "ஓ அடிப்படை முழுதுமே உன்னதுதானா? அப்புறம்?" என்று மேலும் விசாரித்தார் பரசுராமன். "செகரட்டரியின் வேலை இது மட்டும்தானா?"

எத்தனையோ வேலைகள்! ஆனால் அதையெல்லாம் சொல்லலாமோ, என்னவோ? "பிரின்ட்டவுட் எடுத்து வைப்பேன்"

"ப்ரூஃப் பார்ப்பது? கருத்துப் பிழை, சொற்பிழை கண்டுபிடித்து திருத்துவது?"

திருத்துவதா? வெறும் எழுத்துப் பிழைகளை எடுத்துச் சொன்னால் கூட ராஜகெம்பீரனுக்குப் பிடிக்காது. அவர் எழுதுவதுதான் எழுத்து, அதைத் திருத்த எந்தக் கொம்பனுக்கும் அறிவு கிடையாது என்பார்.

அதனாலேயே முதலில் சௌமினியை ப்ரூஃப் பார்க்கச்

சொன்னவர். பிறகு அது தேவையில்லை என்று நிறுத்திவிட்டார். ஆனால், அதை ஈடுகட்டச் சரியாக வேறு வேலைகள் தருவார். அலமாரியைக் கலைத்துப் போட்டுவிட்டு அடுக்கவேனும் சொல்வார்.

"அது... முதலில் செய்தேன் அப்புறம்... வெறுமனே பிரிண்ட் அவுட் மட்டும் எடுப்பதுதான்"

"போன கதை?"

"அதுவும் அப்படித்தான் சார். எழுத்துக்குத் தேவையானதை தானே பார்த்துக் கொள்வதாகச் சொல்லுவார். ஏன் சார் கேட்கிறீர்கள்?" என்று இந்த விசாரணையின் காரணம் கேட்டாள் சௌமினி.

எழுத்துப் பிழைகள் போல ஏதேனும் சிறு பிரச்சினை என்றால், பிரிண்ட் அவுட் எடுக்கும்போது, எழுத்தாளரிடம் சொல்லாமல் அவளே கவனித்துக் கொள்ளலாமே என்று எண்ணித்தான் அவள் விவரம் கேட்டாள்.

பொதுவாகப் பரசுராமன் வரும் சமயங்களில், அலுவல் அறைக்குள்ளும் வந்து ஓரிரு வார்த்தைகள் பேசுவார்தான். ராஜகெம்பீரன் சாரே கூட்டி வருவார்.

முதல் தடவை பார்த்தபோது "இப்படிப்பட்ட எழுத்தாளருக்கு உதவி செய்ய வாய்ப்பு கிடைத்தது, உன் அதிருஷ்டம்" என்றே சொன்னவர்தான்.

அப்போதெல்லாம் பாராட்டுதலான பேச்சுத்தான் எப்போதும் இருக்கும். ராஜகெம்பீரன் சாரும் இவரும் சிரித்துச் சிரித்துப் பேசுவார்கள். கேலியும் கிண்டலும் கேட்கவே நன்றாக இருக்கும்.

ஆனால் இரண்டு ஆண்டுகளாகவே பதிப்பாளரின் வரவு குறைந்தது மட்டுமின்றி, அப்படி வரும் வேளைகளில் இருவரும் உரத்துப் பேசுவதும் அதிகமாகியிருந்தது காரணம் எதுவோ? தன்னால் திருத்தக்கூடிய தப்பாக இருந்தால், அதையும் செய்யலாமே என்று நினைத்தாள் சௌமினி.

ஆனால், பதிப்பாளர் வேறு சொன்னார் "அந்தக் கதையின் தொடக்கத்திலேயே பெரிய தப்பு இருக்கிறதம்மா. கதாநாயகனுடைய பெற்றோர் திருமண சில்வர் ஜூப்ளி கொண்டாடுவதாகத் தொடங்குகிறார். இருபத்தைந்தாம் ஆண்டு மணவிழா! ஆனால் அன்றைக்கே மகனின் வயது இருபத்தியேழு என்று கதையில் வருகிறது. இத்தனை வயதுக்குக் கல்யாணம்



செய்து, ஒரு பேரப் பிள்ளையைப் பெற்றுத் தந்திருக்க வேண்டாமா என்று அவனுடைய தாயாரே கேட்கிறாள். இப்போதெல்லாம் இப்படி பல தவறுகள்! மறுபடி ஒருதரம் படித்துப் பார்த்து பிழை திருத்துவதே இல்லை என்று தெரிகிறது! நிறைய பேர் இந்தக் குறைகளை எடுத்துக்காட்டி எழுதி விட்டார்கள். இன்னும் ஒரு படி மேலே போய், பிள்ளையைப் பெற்று வைத்துக் கொண்டு மணம் புரியும் மேல்நாட்டுக் கலாச்சாரத்தை வளர்க்கிறாரா என்று கூடச் சிலர் கிண்டல் பண்ணியிருக்கிறார்கள். இது போன்ற தப்புத் தவறுகளைப் படிக்க யாருக்கு விருப்பம் இருக்கும்? இதனால் விற்பனை குறைகிறது என்று சொன்னால், ஒத்துக்கொள்ள மறுக்கிறார்.

"நான் கொடுப்பது குறைந்த 'ரேட்'டாம் கூட்டிக் கேட்டு விடுவாரோ என்று பயந்து, இப்படி இட்டுக்கட்டிப் பேசுகிறேனாம்! என்னிடம் பாய்கிறார். புத்தகம் விற்றால் பெரிய லாபம் எனக்குத்தானே? நானாகக் கொடுக்க மாட்டேனா? அவரது எழுத்தில் மயங்கி, இந்தச் சில்லறை விஷயங்களை யாரும் கவனிக்க மாட்டார்கள் என்கிறார். இதுவா, சில்லறை விஷயம்?"

"அவருக்கு 'தான்' என்கிற கர்வம் வந்துவிட்டது. எந்தத் தொழிலிலுமே, தான் பெரிதாகச் சாதித்து இருப்பதாகத் திமிர் வரக் கூடாதும்மா. வந்தால் கட்டாயம் விழ நேரும். இப்போது என்னையே எடுத்துக்கொள். எத்தனையோ வெற்றிப் புத்தகங்களை, நான் வெளியிட்டிருக்கிறேன். அதனால் நான் வெளியிடும் புத்தகங்கள் எல்லாமே வெற்றி பெறும் என்று சொல்லி, எதை வேண்டுமானாலும் வெளியிட முடியுமா? ராஜாசாரின் திமிர் எழுத்திலும் தெளிவாகத் தெரிகிறது! நம் வாசகர்களுக்கு திமிர் என்றாலே அலர்ஜி. ஏற்றாற்போல் விற்பனையும் வெகுவாகக் குறைந்துவிட்டது. இனி அதிக காலம் தாங்காது" என்று மடமடவென்று பொரிந்து கொட்டி விட்டார் அவர்!

பல நாட்களாக... சில பல காலமாகவே மனதில் குமுறிக்கொண்டு இருந்திருப்பார் போல! எழுத்தாளரிடம் எடுத்துச் சொல்வாள் என்று எண்ணியோ, என்னவோ அவளிடம் எல்லாக் குறைகளையும் மறையாது தெரிவித்தார்.

சௌமினி திகைத்துப் போனாள். அவளுக்குச் சட்டென தன் நிலை உறைத்தது.

இந்த வேலையின் வருமானமும், அப்பாவின் பென்ஷன்

தொகையும் எப்போதும் சாசுவதம் என்று நினைத்தாளே! இவரானால், அதிக நாள் ஓடாது என்கிறாரே! இன்னும் தம்பியின் கல்லூரிப் படிப்பு வேறு இருக்கிறது! அவளாகப் பணம் கட்டி எடுத்த கோர்ஸைக் கூடச் சரிவரப் படிக்க முடியவில்லை! கடவுளே!

அவளது முகத்திலேயே மனதைப் படித்து "உனக்கு என்னம்மா? நீ செய்கிற வேலைக்கு, வெளியே எவ்வளவோ மதிப்பு இருக்கிறது. இது பயன்படும் துறைகளும் நிறைய இருக்கின்றன. கை நிறைய வருமானமும் கிடைக்கும், விசாரித்துப் பார்" என்று பரிவாகக் கூறினார் அந்தப் பதிப்பாளர்.

சௌமினிக்கு மனம் குழம்பியது.

இதை விட்டால் வேறு நாதியில்லை என்று நினைத்து, எடுபிடி மாதிரி இங்கே ஏவுகிற வேலையெல்லாம் செய்தால், இந்த மனிதர் இப்படிச் சொல்கிறாரே என்று திகைத்தாள்!

அவளது முகத்தைப் பார்த்த பரசுராமன் ஒரு கணம் யோசித்துவிட்டு சொன்னார் "இதோ பாரம்மா, நீ சொன்னவை தவிர, ராஜா சார் உன்னிடம் என்னென்ன மாதிரி, எவ்வளவு வேலை வாங்குகிறார் என்று எனக்குத் தெரியும். பேச்சுவாக்கில், அவ்வப்போது அவரே வாயை விட்டதில் அறிந்ததுதான். உன் திறமைக்கு, இப்படி நீ அடிமையாகக் கிடக்க வேண்டிய அவசியம் இல்லை"

"இந்தக் காலத்தில் எந்த ஒரு திறமைக்கும் மதிப்பு உண்டு. உன் திறமையும் அப்படித்தான். சிறப்பானதே. இந்தத் திறமைக்கு வெளியே நல்ல விலை கிடைக்கும். முயன்று பார். ஏனென்றால்..." என்று நிறுத்தினார்.

சௌமினியின் அகன்ற விழிகளின் பின்னே ஏதேதோ எண்ணங்கள் வேக வேகமாக ஓடின.

பதிப்பாளர் சொல்வது எல்லாம் மெய்தானா? அல்லது எழுத்தாளர் மேல் உள்ள கோபத்தில் அவளைக் கிளப்பி விடுகிறாரா?

ஆனால், பதிப்பாளர் என்ன நினைத்துச் சொன்னபோதும், ராஜகெம்பீரன் சார் கொடுக்கிற பணத்துக்கு அவளிடம் அதிக வேலை வாங்குவது உண்மைதானே?

அவரது கதைக் களனுக்காக ஒவ்வொரு விதமான குறிப்புகளை நுணுக்கமான சிறு விவரங்கள் கூட விடாமல் எடுத்துத் தொகுத்து, மெய் பொய் ஆராய்ந்து வரிசையாகக் கோத்து கொடுப்பது மட்டுமே



அவளது பொறுப்பு என்றுதான் முதலில் கூறினார். ஆனால் அதை மட்டுமா, அவள் செய்கிறாள்?

ஆனால், ராஜகெம்பீரனிடம் மட்டும்தான் அவளது நெட் ஆராய்ச்சி வேலைகளுக்கு விலை கிடைக்கும் என்று எண்ணியிருந்தால், இவர் வேறு சொல்கிறாரே!

கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்ததுதான். அதிலும் முனதினமும் இன்றுமாக, மூச்சு முட்டும் அளவுக்கு நெஞ்சை நிறைத்து விட்டிருந்த கசப்பு உந்த "ஏஏனென்றால் என்ன சார்?" என்று சௌமினி கேட்டாள்.

அவளது கண்களை நேராகப் பார்த்துப் பரசுராமன் சொன்னார். "ஏனென்றால் இனி இங்கே உனக்கு எதிர்காலம் கிடையாது. என்ன சொன்னாலும் கேளாமல் மூழ்கியே தீருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார் ராஜகெம்பீரன். மிதப்புக் கட்டையாக ஓரளவு அவரைத் தாங்கிப் பிடிப்பதே, நீ ஆராய்ந்து கொடுக்கும் நுணுக்கமான விவரங்கள்தான். அவரது அகம்பாவம் அதையும் மீறிக் கீழே இழுத்துப் போய்க்கொண்டு இருக்கிறது. கூடச் சேர்ந்து மூழ்கி விடாமல் உன்னைக் காப்பாற்றிக் கொள்!" என்றவர் திரும்பி நடந்து அங்கிருந்து விரைந்து வெளியேறிப் போய்விட்டார்.

இனி இங்கே திரும்பி வரப் போவதில்லை என்று சொல்லாமல் சொல்வது போல!

சௌமினிக்கு சற்று நேரம் ஒன்றுமே ஓடவில்லை. கம்ப்யூட்டர் முன்னால் சற்று நேரம் அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

முன்தினம் போலவே, தனசீலனின் நினைவு வலுவாக அவளைத் தாக்கியது.

'மூழ்குகிற கப்பலை விட்டு ஓடுகிற எலி' என்று தப்பாக அவளைக் குற்றம் சாட்டினான் தனா.

'கூடச் சேர்ந்து மூழ்கி விடாமல் உன்னைக் காத்துக்கொள்' என்று அறிவுரை கூறுகிறார் ஒருவர்!

இந்த நிலையில் விலகினால் கூட, அந்த 'எலி' பட்டத்தை தனசீலன் அவளுக்குக் கொடுப்பானா?

என்னவோ, அவனைப் பார்க்க வேண்டும் போல, சௌமினியின் நெஞ்சு துடியாய்த் துடித்தது.

பார்க்க வேண்டும் போல, இது பற்றி அவனிடம் பேச வேண்டும் போல, அபிப்பிராயம் கேட்க வேண்டும் போலத் தவியாய்த்

தவித்தது!

ஆனால், அவன் எங்கே எப்படி இருக்கிறானோ? ஏதேனும் நல்லபடியாக செய்து கொண்டுதான் இருப்பான். ஏனெனில் சும்மா சோம்பிக் கிடக்கிறவன் அவன் அல்ல!

தனசீலனைப் பற்றி நினைப்பதே ஒரு விதமான ஆறுதலைத் தர, சௌமினி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

ஆனால் அதிக நேரம் அப்படி அமர்ந்திருக்க வழியின்றி, வெளியே சென்றிருந்த வாசந்தி, மகளோடு திரும்பி வந்துவிட்டது, அவர்களது பேச்சொலியில் தெரிந்தது.

அடுத்து வாசந்தியே சௌமினியைத் தேடி வந்து சேர்ந்தாள்.

வரும்போதே ஒரு நூறுரூபாய் தாளை நீட்டியபடி "சௌமினி, அயர்ன்காரன் இன்னும் துணியைக் கொண்டு வரவில்லை. நீ போய், அவனிடம் அயர்ன் செய்த துணிகளை வாங்கி வந்துவிடு. அவசரமாக வேண்டும், உடனே போ" என்று வேக வேகமாகச் சொன்னாள்.

அந்த வேகத்துக்கு, அவளது அவசரம் புரிந்து, இவளும் ஓடிப்போய் பணத்தைக் கொடுத்துத் துணிகளை வாங்கித் தூக்கிக் கொண்டு வர வேண்டும் என்று எதிர்பார்த்தாள் போலும்.

முன்தினம் அவள் செய்த திருட்டுத்தனத்துக்குத் தண்டனை கிடைக்காத திமிர்! ராஜகெம்பீரனும், கை நீட்டிச் சம்பளம் வாங்கும் சௌமினியைத்தானே திட்டினார்? அது, இவளுக்கு இன்னமும் தைரியத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

திட்டுவதைக் கேட்டபடியே வெளியே சென்றவள், இதை எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று திட்டமிட்டபடியே திரும்பி வந்தாள் போல!

முதுகெலும்பு இருப்பதைக் காட்டிக் கொள்ளும் நேரம் வந்துவிட்டதாக சௌமினிக்குத் தோன்றியது.

இருந்த இடத்தை விட்டு அசையாமலே "எனக்கு வேலை இருக்கிறதுக்கா. நீங்களே போய் துணிகளை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றபடி, கம்ப்யூட்டரில் கர்சரை அங்குமிங்கும் நகர்த்தலானாள்.

பெரிதாக வேலை செய்வது போன்ற பாவனைதான். அவள் தேடியதற்கும், அங்கே அவள் செய்யும் பணிக்கும் சம்பந்தமே கிடையாது!

ஆனால் அதைக் கவனிக்காமல் "என்னையா தெருவில் நடந்து



போய் துணிகளை வாங்கி வரச் சொல்லுகிறாய்?" என்று என்னவோ சௌமினி பத்துக் கட்டளைகளில் ஒன்றை அவமதித்துவிட்ட மாதிரி அதிர்ந்தாள் வாசந்தி.

பார்வையைக் கம்ப்யூட்டர் திரையில் இருந்து சௌமினி உயர்த்தவே இல்லை.

"ஆமாம், வாசந்தியக்கா அதே தெருவில் நடந்துதானே நீங்களும் தீபிகாவும் இப்போது வந்தீர்கள். அதேபோலப் போகலாமே!" என்றாள் சர்வ சாதாரணமாக.

"நானா? நாநானா துணிகளைத் தூதூ..க்கி வருவது" என்று திக்கித் திணறிய பெரியவளுக்கு மேலே என்ன சொல்வது என்று தெரியவில்லை.

சொன்னதுமே செய்யாவிட்டாலும், கொஞ்சம் குழையடித்தால், அயர்ன் செய்த துணிகள் வீட்டுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்தாள் அவள்.

அதுவும், அன்று மாமனார் காய்ந்து கொட்டியதற்கு, சௌமினி சலாம் போட்டுக்கொண்டு சொன்னதை செய்வாள் என்று நினைத்தால், அவள் மறுக்கிறாளே!

"மாமாவிடம் சொன்னால் என்ன நடக்கும் தெரியுமா?" என்று மிரட்டும்போதே வாசந்தியின் குரல் இறங்கிவிட்டது.

தன் வேலையை முடித்து வைக்காததால் இப்போது சௌமினி மீது கோபம் காட்டும் மாமனார், மூடு மாறினால், நீயும்தானே காரணம் என்று அவளையும் காயலாம்.

சௌமினியின் அலட்சியம் வேறு புதிதாக இருக்கவே, மேலே செய்வதறியாது மடமடவென்று வீட்டினுள்ளே போய்விட்டாள் மற்றவள்.

இது சிறு வெற்றியே. ஆனாலும் அதிலேயே உள்ளம் மகிழ்ந்தபடி, மனம் மிகவும் விரும்பியதை துணிந்து செய்ய முனைந்தாள் சௌமினி.

விரும்பியபடி தனசீலன் பற்றிய விவரங்களை சேகரித்த சௌமினி சற்று நேரம் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தாள். எதில் எதிலோ தலைவர், உதவித் தலைவர், பொறுப்பாளர் என்று அவனது பெயர் போட்டிருந்தது.

எதற்கும் என்று அவனது தொழில் பற்றித் தேடினால், இந்த நாலு ஆண்டுகளில் அவன் உயரத்தில் எங்கேயோ போய்விட்டிருந்தான்!

வீட்டை விற்றுத்தான் கடன்களைச் சமாளிக்க முடியும்... மிச்சம் மீதி பார்த்து முதலீட்டுக்குப் பயன்படுத்த வேண்டும் என்கிற அளவுக்கு நஷ்டப்பட்டிருந்த தொழில்! அதைக்கூடத் தொடர்ந்து செய்யாமல், தொழில் இடத்தில் முன்பணத்தை வாங்கிக்கொண்டு, விலாசம் இல்லாமல் வெளியேறியவர்கள்...

அவர்களது பெயரில், இப்போது நாலு இடங்களில் தொழில் நடந்து கொண்டிருந்தது. நிர்வாக டைரக்டராக தனசீலனின் பெயரும், சேர்மனாக சபாபதி அங்கிளின் பெயரும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எப்படியோ தனசீலன் தொழிலில் வெற்றி பெற்றுவிட்டது. சௌமினிக்கு பெரு மகிழ்ச்சியைத் தந்தது. தாழ்வு மனப்பான்மை தானே, அப்போது அவனை மிகுதியாய் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது.

இப்போது வெற்றி பெற்றுவிட்ட நிலையில் பழைய மாதிரி இனிமையாகப் பேசுவான் அல்லவா?

அவனோடு பேச எண்ணி, செல்ஃபோனை எடுத்தவள், பேசாமலே அதை வைத்தாள்.

இங்கிருந்து பேசினால், வாசந்தி அதை என்ன மாதிரி ஒட்டுக் கேட்டு, மாமனாரிடம் எப்படியெப்படி வத்தி வைப்பாளோ?

தனாவைத் தேடியது, கண்டுபிடித்தது தொடர்பான அனைத்தையும் கவனமாகக் கம்ப்யூட்டரிலிருந்து முழுமையாக அழித்துவிட்டு, அதன் பிறகே சௌமினி, ராஜகெம்பீரன் கொடுத்த வேலையை வேகமாகச் செய்யத் தொடங்கினாள்.

ஏற்கனவே அவள் எடுத்த குறிப்புகள்தான். இரு வகையாகப் பிரிக்க வேண்டும், அவ்வளவுதானே?

மனதில் உற்சாகம் மிகுந்திருந்ததால்,வேலை விரைந்து முடிந்துவிட்டது போலும்.

அலமாரிகளை மூடி, நாற்காலிகளை நகர்த்திப் போட்டு, சௌமினி கிளம்புகிற ஓசை கேட்டதும், வாசந்தி திரும்பவும் வந்து தலையை நீட்டினாள்.

"தீபிகாவுக்கு கொஞ்சம் பாடத்தில் உதவி செய்துவிட்டுப் போ, சௌமினி. மாமாவிடம் கூடக் கேட்டுவிட்டேன். அவர் வேலை முடிந்ததும் வந்து செய்யச் சொன்னார்" என்றாள் சற்று அடங்கிய குரலில், ஆனால் வழியை அடைத்து நின்றபடி.



இது வாசந்தியின் கதையாகவும் இருக்கலாம், அன்றி மெய்யாகவும் இருக்கலாம். ஆனால் எதற்காகவும் தான் செய்ய நினைத்ததைத் தள்ளிப் போட, சௌமினிக்கு மனமில்லை.

"இல்லை அக்கா. எனக்கு வேறே வேலை இருக்கிறது. விலகுங்கள்" என்றவள், பெரியவள் முறைத்துப் பார்த்தபடி, அசையாமல் நிற்கவும், அவளைத் தொட்டு நகர்த்திவிட்டு, அங்கிருந்து வெளியேறினாள்.

பல்லாண்டு காலம் சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலையாகி வெளிக்காற்றை சுவாசிப்பவனுக்கு இப்படித்தான் இருந்திருக்குமோ என்று தோன்றியது அவளுக்கு.

சிறை, விடுதலை, வெளிக்காற்று என்கிற உவமைகள் எல்லாம் சற்று அதிகப்படியாக அவளுக்கே தோன்றியது. ஆனால், வெகு காலத்துக்கு பிறகு, சௌமினி சுதந்திரமாக உணர்ந்தாள் என்பது உண்மையே!

நாலு கிளைகள்!

தலைமைக் காரியாலயம் என்று குறிப்பிட்டிருந்த இடம் நோக்கிப் போனாள்.

போய்ப் பார்த்தால், பெரிய நிறுவனம்! ஒரு தளம் முழுவம் குழல் விளக்குகளால் தகதகத்தது. செல்ஃபோன், நோட்பாட், லாப்டாப் என்று அழகான முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன காலத்துக்கு ஏற்ற வியாபாரம்!

சீலன் எக்யூப்மென்ட்ஸ் இவ்வளவு சீக்கிரமாக இந்த அளவுக்கு எப்படி வளர்ந்தது என்று சௌமினிக்கு இப்போது புரிந்தது.

இந்த நிறுவனத்துக்குள் போய், நிர்வாக டைரக்டரைப் பார்க்க வேண்டும் என்று கேட்பதே ஒரு மாதிரித் தோன்றாதா?

அவர்களைப் பற்றி அறியாதவர்கள், என்ன எண்ணக் கூடும்?

அத்தோடு காலையில் கம்ப்யூட்டர் வகுப்புக்குப் போய், மதியத்தில் வேலைக்குப் போய், இவ்வளவு நேரத்தில் நலுங்கியிருந்த உடையும் அவள் மனதை உறுத்தியது.

கைப்பையில் இருந்த செல்ஃபோனைத் தடவிப் பார்த்தவளுக்கு அதை பயன்படுத்தவும், அப்போது பிடிக்கவில்லை. அதன் மூலமாக எத்தனையோ முறை தோற்றதுதான் நினைவு வந்தது. இன்னுமொரு தோல்வி வராது என்று என்ன நிச்சயம்?

தனசீலனோடு எப்படித் தொடர்பு கொள்வது என்று

யோசிக்கும்போதே, கட்டிடத்துக்குள்ளிருந்து சபாபதி வெளியே வந்தார்.

அலுவலகத்தில் சந்திப்பதை விட, வீட்டுக்குப் போய் பார்ப்பது மேல்! தனாவின் கோபதாபம் இன்னும் தீரவில்லை என்றால் கூட, சரோஜா ஆன்ட்டி அவளுக்காகப் பரிந்து பேசுவார்கள்.

சென்னையின் போக்குவரத்து நெரிசலில் கார்களை தொடர்வது எளிது. சட்டென்று கண் பார்வையை விட்டு மறைந்துவிடுமோ என்று பயப்படவே தேவையில்லை!

சபாபதியைத் தொடர்ந்து சென்று அவர்களது வீட்டைக் கண்டுபிடித்த சௌமினிக்கு, அதுவும் அதிர்ச்சியைத் தந்தது. இன்ப அதிர்ச்சி!

லக்ஜுரி ஃப்ளாட்...!

உயரமான சுற்று மதில், செக்யூரிடி, தோட்டம், தூரத்தே தெரிந்த நீச்சல்குளம்... எல்லாம் காசுக் கணக்கை எடுத்துரைத்தன.

நாலே ஆண்டுகளில் இத்தனை மாற்றம் சாத்தியமா? சாத்தியமாகி இருக்கிறதே!

தனாவோ, சபாபதி அங்கிளோ, பணத்துக்காக தப்பு வழி செல்லக் கூடியவர்கள் அல்ல! இருவரின் அயாராத உழைப்புடன், புத்திசாலித்தனமான முதலீடும் சேரும்போது, எல்லாமே வெற்றி பெற்று விடும் போலும்!

சந்தோஷப்படும்போதே, மனம் சற்றுக் குழம்பியது.

இவ்வளவு நல்ல நிலை வந்திருக்கும்போது, அவளிடம் ஒரு வார்த்தை தெரிவித்திருக்கலாமே!

அவளைத்தான், நாக்கில் நரம்பில்லாமல் 'கப்பல் எலி' என்று சொன்ன கூச்சமாக இருக்கக்கூடும். ஆனால், அவளுடைய தாயாரிடம் என்ன தயக்கம்?

தந்தையின் இறப்புக்கு வருத்தம் தெரிவிக்காத குன்றலாக இருக்குமோ?

எதுவானாலும், இப்படியோ அப்படியோ என்று அவளே தனியாக யோசிப்பதில் ஒரு பயனும் இல்லை. மறுநாள் நேரிலே பார்த்துப் பேசித் தெரிந்து கொள்வது மேல்.

உள்ளூர இருந்த சிறு தயக்கம் காரணமாகத் தாயிடமும் சௌமினி, தனசீலன் குடும்பம் பற்றிப் பேசாமலே விடுத்தாள்.

மறுநாளும் காலையில் தனசீலன் தொழிலிடம் செல்லும் நேரம்



தெரியாததால், மதியத்துக்கு மேலேயே அவனது வீட்டை நாடிச் சென்றாள்.

வேலையில் விடுப்பு எடுத்தது, எழுத்தாளர் குடும்பத்துக்குப் பிடிக்கவில்லை என்றாலும், அவள் விடுப்பு கேட்ட விதத்தில், 'போய்த்தொலை' என்பது போல, ராஜகெம்பீரன் அவளுக்கு அனுமதி கொடுத்தார்.

ஒருவாறு கிளம்பிச் சென்று, தனசீலனுடைய குடும்பம் வசித்த 'இந்திரபுரி' குடியிருப்பை அடைந்தாள்.

வாயிலிலேயே நிறுத்தி, யார் என்று பெயர் கேட்டு, யாரைப் பார்க்க வேண்டும் என்றும் விசாரித்துவிட்டு, வாயில் காவலன், அந்த குடியிருப்புப் பகுதியின் உள்ளே செல்ல, சௌமினியை அனுமதித்தான்.

தனசீலனின் ஃப்ளாட் அடையாளம் காட்டிப் போகச் சொன்னான்.

வாயில் காவலன் சொன்ன எண்ணைப் பார்வையால் அனுமானித்தபடி, சௌமினி மெல்ல நடக்கலானாள்.

திடுமெனப் பக்கவாட்டில் இருந்து யாரோ வேகமாக வரவும் திரும்பிப் பார்த்தால், தனசீலனுடைய தந்தை சபாபதி.!

நின்று "அங்கிள்!" என்று அவள் ஆவலாக முறுவல் புரிந்தால், அதன் எதிரொலி அவர் முகத்தில் தெரியவில்லை.

மாறாக, ஏதோ பேய் பிசாசை நேரில் கண்ட மாதிரிப் பதறி "ஐயோ! நீதானா? உன்னைப் போல இருக்கிறதே என்று ஓடி வந்து பார்த்தால் நீயேதானா? தயவு செய்து போய்விடு, உடனே ஓடிப் போய்விடு!" என்று பதறினார் சபாபதி.

புரியாத திகைப்புடன் "என்ன அங்கிள்..." என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு "சொன்னால் கேள் என்ன ஏது என்று ஒன்றும் கேளாமல், மரியாதையாக உடனே ஓடிப் போய்விடு. உன்னால் ஏதேனும் பெரிய விபரீதம் நேர்வதற்கு முன், இங்கிருந்து ஓடிவிடு. போ! போய்த் தொலையேன்! உடனே போய்விடு.. போ... போ!" பதட்டத்துடன் கூறி, அவளை விரட்டினார்.

கலக்கத்துடன் சௌமினி மலங்க விழித்தாள்.



# அன்பு மனம் மாறியதேன் 6

சபாபதியின் பேச்சு, சௌமினிக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆவலுடன் அவர்களைப் பார்க்க வந்தால், போ போ என்று விரட்டுகிறாரே!

அதுவும் அவளால் விபரீதம், பெரிய விபரீதம் நேருமுன் போக வேண்டுமாமே! என்ன உளறல் இது? அப்படி என்ன விபரீதம் நேர்ந்துவிடும்?

அவளிடம் மன்னிப்புக் கேட்க நேருமோ என்றா?

நியாயமாகப் பார்த்தால் ஆத்திரப்பட வேண்டியவள், அவள்தான். அவ்வளவு பழகிவிட்டு, அவளுடைய தந்தையின் மறைவைக் கூட அலட்சியப்படுத்தியவர்கள் அவர்களே.

அதையே ஒதுக்கிவிட்டுப் பார்க்க வந்தால், இப்படி விரட்டுகிறாரே!

ஆனால், அவள் ஆசையாகப் பார்க்க வந்தது, இவரை அல்ல!

"உங்கள் பேச்சு எனக்கு எதுவும் புரியவில்லை, அங்கிள். உங்கள் 'விபரீத'மும் புரியவில்லை. ஆனால்..." என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு அவர் படபடத்தார்.

"உனக்கு எதுவும் புரிய வேண்டியது இல்லை. முதலில் இடத்தைக் காலி செய். நீ வந்தது மட்டும் என் மகனுக்குத் தெரிந்தால், உன்னைஅடித்தே விரட்டி விடுவான். ஆனால் அதைவிடக் கொடுமை, உன்னைப் பார்த்தால் என் மனைவி செத்தே போவாள். தயவு செய்து போய்விடு" என்று அவளை அங்கிருந்து அகற்ற, அவர் அவசரப்பட்டார்.

சௌமினி இன்னமும் அதிகமாகக் குழம்பினாள்.

மகன் அவளை அடிப்பானாம்! மனைவி இறந்தே போவாளாம்!

ஏன் என்ன கூத்து இது?

இவரது பேச்சுக்கு அர்த்தம் காண்பதை விடுத்துக் கேட்டு விடையறிவது நல்லது.

"என்ன அங்கிள், இப்படிப் பேசுகிறீர்கள்? இங்கே என்ன பிரச்சினை? நான் ஃபோன் செய்தால் ஏன் யாரும் எடுப்பதில்லை?"

அவள் கேட்க கேட்க, சபாபதியின் முகம் கன்றிக் கறுத்தது.

கண்கள் சிவக்க, "ஏய்...! இப்போது எனக்கே உன்னை அடிக்க



வேண்டும் போல வருகிறது" என்று ஆத்திரத்துடன் கத்தியவர். உடனே குரலைத் தணித்து, "இதோ பார், நாங்கள் ஒரு விசேஷத்துக்காக வெளியே போக வேண்டும். கதவைப் பூட்டிக்கொண்டு சீக்கிரமே என் மனைவி கீழே இறங்கி வந்து விடுவாள். உன்னைப் பார்த்து, அவள் நெஞ்சடைத்து சாக வேண்டாம் என்றால், தயவு பண்ணி உடனே ஓடிப் போய்விடு ப்ளீஸ்!" என்று வெறுத்த குரலில் கேட்டுக் கொண்டார்.

அவரது குரலிலோ, முகத்திலோ பொய்மை இல்லை! முழுக்க முழுக்க மனதில் உணர்ந்து, அதையேதான் வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறார்.!

ஆனால் ஏன் என்ற அவளது கேள்விக்கு பதிலே இல்லையே! என்னவோ அவள் ஒரு கொடூரக் கொலைகாரி மாதிரியல்லவா சித்தரிக்கிறார்!

காரணம் புரியாவிட்டாலும், அவர் சொல்வது போல ஆன்ட்டிக்கு ஏதாவது நேர்ந்துவிடக் கூடாதே என்ற அச்சத்தில் அவரை திரும்பித் திரும்பி பார்த்தவாறே, சௌமினி மெல்ல சுற்று மதிலில் வாயிலை நோக்கி நடக்கலானாள்.

வாயிலை நோக்கி அவள் செல்ல "ஹூம்!" என்ற உறுமலுடன் தனசீலனுடைய தந்தை திரும்பிப் போனார்.

பார்வை வட்டத்திலிருந்து அவர் மறையவும், சௌமினியின் மனம் மேலும் சோர்ந்தது.

அவளை இவ்வளவு வெறுத்து ஒதுக்கும்படி என்ன நேர்ந்திருக்கும்?

புது ஃப்ளாட்டுக்குப் போன பிறகு, அவள் வந்து யாரையும் பார்க்கவில்லை, உண்மைதான். ஒருவேளை, அதனாலேயே ஆன்ட்டிக்கு ரொம்பவும் உடம்பு... உயிருக்கே அபாயம் போல ஆகியிருக்குமா?

யோசிக்கும்போதே மகா அபத்தமாக தோன்றியது.

என்னதான் 'மருமகளே, மருமகளே' என்று அழைத்தபோதும், அவளுக்கும் தனசீலனுக்கும் அப்போது திருமணம் நிச்சயம் கூட ஆகியிருக்கவில்லை.

அன்றைக்கு அவள் வெறும் பக்கத்து வீட்டுப் பெண்தான்.

இவள் போய்ப் பார்க்கவில்லை என்றால், அவர்களும்தான், அவளது குடும்பத்தை வந்து பார்க்கவே இல்லை. அதிலும்,

அவளுடைய தந்தை மறைந்தபோது கூட, எட்டிப் பார்க்கவில்லை!

அவளால் தகவல் சொல்ல முடியவில்லை என்றால், காரணம் யார்? ஃபோன் செய்தால், எடுத்துப் பேசினால்தானே, என்ன விஷயம் என்று சொல்ல முடியும்?

பொதுவான யார் மூலமாவது விவரம் தெரியாமல் இராது. ஒரு மரணத்தைக் கூட அலட்சியம் செய்தவர்கள் அவர்கள்! ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்களது குற்றம் மிகவும் பெரியது.

அப்படியிருக்க, அவளை அல்லவா அனியாயக்கார அரக்கி மாதிரி விரட்டுகிறார்கள்?

ஆத்திரப்பட்டுத் திரும்பிப் போய்விடலாம். நியாயம் அவள் பக்கம் என்கிற நிமிர்வோடு, இத்தோடு போகட்டும் என்று திரும்பிப் பாராமலே போய் விடலாம்.

ஆனால், இடிப்பது என்னவென்றால், அவர்கள் யாருமே அப்படி மனச்சாட்சியைத் துடைத்துப் போட்டவர்கள் கிடையாது. அன்பே உருவான ஆன்ட்டி, பொறுப்பான அங்கிள், உற்சாகத் துள்ளலுடன் தனசீலன்.

கடைசியான சில சந்திப்புகள் தவிர குணத்தில் அவனும் சீலனேதான்.

இவர்கள் எல்லோரும் சேர்ந்து எப்படிக் குணம் மாறுவார்கள்? செய்யாத தப்புக்கு அவளைப் பொறுப்பாளி ஆக்குகிற அளவு, அவர்களில் யாருமே கெட்டவர்கள் கிடையாது.

பின்னே, இதற்கு என்னதான் விளக்கம்?

திரும்பிப் போய் விளக்கத்தை கேட்டுவிடலாம் என்றால், ஆன்ட்டியின் உடல்நிலை பற்றிய எச்சரிக்கை அவளைத் தடுத்தது.

கலக்கமும் செய்வது அறியாத திகைப்புமாகத் தளர்ந்த நடையுடன் அவள் மெல்லத் திரும்பிச் செல்லுகையில், "ஐய்யோ, ஐய்யோ நீதானா? அடிப்பாவி நீயேதானா?" என்று பதறிய குரலில், சௌமினி நிமிர்ந்து பார்த்தாள்.

வெளியே ஆட்டோ சத்தம் தேய, சற்று மதில் வாயிலைத் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்தவள், தனாவுடைய சித்தி கோகிலா!

எப்போதும், சௌமினியிடம் பிரியமாகவே இருப்பாள். தனாவையும் அவளையும் சேர்த்துப் பேசிக்கேலி செய்து சிரிக்கிறவள்!

விழி மலர சௌமினி அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து



வைக்கும்போதே, "அடிப்பாவி! இப்போதுதானே, என் அக்கா கொஞ்சம் தேறி வந்திருக்கிறாள்! அவள் அரை உயிராக வாழ்வது கூட உனக்குப் பொறுக்கவில்லையா? அடியோடு ஒழித்துவிட வந்தாயா? மரியாதையாக இங்கிருந்து உடனே போய்விடு!" என்று அவளும் சீறவே சௌமினியால் தாங்க முடியவில்லை.

யாரைப் பார்த்தாலும், போ, போ என்று என்ன பேச்சு இது?

எப்படியும் ஆன்ட்டிக்குத்தானே உடம்பு நலிந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்? அதுவும் அவளால்?

வேண்டாம். ஆன்ட்டியைச் சந்திக்க வேண்டாம். சந்தித்து அவளை இன்னமும் பலவீனப்படுத்தவும் வேண்டாம்.

இந்தச் சித்தி கோகிலாவுக்கு உடம்பில் வியாதி ஒன்றுமில்லையே! முன்போலவே 'திண்'ணென்றுதான் இருக்கிறாள்! இவளிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுவிடலாம்!

"ஆன்ட்டி. என்னை உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் அப்படி என்ன தப்பு செய்தேன் என்று நீங்களாவது சொல்லுங்களேன்? ஏன் என்ன என்று சொல்லாமலே, எல்லோரும் போ போ என்றால், நான் என்ன பண்ணட்டும்? தயவு பண்ணி..." என்று அவள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, "ஐயோ..." என்று நெஞ்சின் மீது கை வைத்து, அந்தப் பெண்மணி முனகவும், தன்னையறியாது சௌமினி திரும்பிப் பார்த்தாள்.

நிற்க இயலாமல் சபாபதி அங்கிள் மேல் சாய்ந்து, சரிந்து கொண்டிருந்தவள் சரோஜா ஆன்ட்டியேதான். ஆனால் முகம் வெளுத்து... காரணம் தன்னைப் பார்த்துதான்?

அப்படியானால் அங்கிளும், கோகிலா ஆன்ட்டியும் சொன்னது உண்மைதானா?

சௌமினியைப் பார்த்துதான், சரோஜா ஆன்ட்டி இப்படித் தொய்கிறாளா?

நம்ப மாட்டாமல் திகைத்தபோதும் சரோஜா சோர்ந்து சரிவதைக் கண்டதும், தன்னையறியாமல் "ஆன்ட்டீ..." என்று அவள் அருகே சௌமினி ஓடிப் போனாள்.

ஆனால் அவள் அருகில் செல்லுமுன் மனைவியைத் தாங்கிப் பிடித்தபடி சபாபதி "ஏய், கிட்டே வராதே! இங்கிருந்து உடனே வெளியே போ! போ என்றால் போய்விடு. இல்லாவிட்டால் வாட்ச்மேனைக் கூப்பிட்டுக் கழுத்தை பிடித்து வெளியே தள்ளச்

சொல்லுவேன்" ஆங்காரமாகச் சீறினார்.

பேச்சுக் கேட்காத தூரம் என்றாலும், சற்று மதில் வாயில் அருகே நின்ற காவலாள், கூப்பிட்டால் வருவதற்குத் தயாராக இங்கே கவனித்தபடி நிற்பது தெரிந்தது.

எனவே, சபாபதி சொன்னது வெறும் மிரட்டல் அல்ல! ஆனால் சும்மா ஒருவரை வருத்திப் பார்த்து மகிழும் வக்கிரம் அங்கே யாருக்கும் கிடையாது என்பது, சௌமினிக்கு நிச்சயம்.

இவ்வளவு கேவலமாக தன்னை நடத்த வேண்டுமானால், பெரிய காரணம் எதுவோ இருக்க வேண்டும் என்பது தெளிவு. ஆனால், அது என்ன என்று சொன்னால்தானே அவளுக்கும் தெரியும்?

ரத்தப் பசையே இல்லாமல் முகம் வெளுக்க, நிற்க இயலாதவளாக கணவன் மேல் சரோஜா சாய்ந்து கிடந்த நிலையில், மேற்கொண்டு எதையும் பிடிவாதமாகக் கேட்கவும், சௌமினியால் முடியவில்லை.

அதற்குள் முன்னே வந்து தமக்கையை தாங்குவதில் உதவிய கோகிலாவும் "ஏம்மா, போ என்றால் போக மாட்டாயா? என் அக்காவின் உயிரை எடுத்தால்தான் உனக்கு நிம்மதியா? தயவு பண்ணிப் போய்த்தொலையேன்!" என்று அதட்டவும், வேறு வழியின்றி சௌமினி மறுபடியும் வெளியே செல்லத் தொடங்கினாள்.

ஆனால், "எல்லோரும் சற்றுப் பொறுங்கள்" என்று சரோஜாவின் தீனக்குரல் கூறுவது கேட்கவும், சட்டென நின்று, திரும்பிப் பார்த்தாள்.

ஆனால் அந்தப் பெண்மணியின் முகத்தில் தெரிந்த கசப்பு!

எதற்காகப் பொறுக்கச் சொன்னாள்? என்ன சொல்லப் போகிறாள்? எதையும் சொல்லும் அளவுக்கு அவளது உடம்பில் சக்தி இருக்கிறதா என்று சௌமினி குழம்பும்போதே, சரோஜா பேசத் தொடங்கினாள்.

மிக மெல்லிய குரலில்.

"கவனி சௌமி.... வந்து... சௌமினி. இந்த நாலு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நீ ஏன் வந்தாய் என்று எனக்குத் தெரியாது. அதை தெரிந்து கொள்ள விருப்பமும் எனக்குக் கொஞ்சமும் கூட இல்லை. ஆனால் தயவு பண்ணி இனிமேல் இந்த வீட்டுக்கு... இந்த வீட்டுப் பக்கம் கூட வராதே. அதிலும் என் பையன் கண்ணில் ஒருபோதும் பட்டுவிடாதே!" என்றவள் பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு மேலும் பேசினாள்.



"பாரம்மா, பணம் பெரிய விஷயம் அல்ல. ஆனால் மனதளவிலும் நாங்கள் ஏதோ கொஞ்சம் மீளத் தொடங்கி இருக்கிறோம். எதற்காகவும், எங்களது இந்த நிலையையும் கெடுத்துவிடாதே. தயவு செய்து எங்கள் வாழ்வை விட்டுப் போய்விடு. இது நாள் வரை இருந்தது போலவே, இனியும் விலகியே இருந்துவிடு.... போம்மா" என்று மூச்சு வாங்கப் பேச முடியாமல் பேசி அவள் கூறவும், அதற்கு மேல் நின்று விளக்கம் கேட்கும் தைரியம் சௌமினிக்கு இருக்கவில்லை.

இவ்வளவு நேரம் பேசியதே பெரும் பிரயத்தனம் போலச் சோர்வுற்று அரைக் கண் மூடிக் கொண்டிருந்த சரோஜாவின் முகத்தை ஒரு தரம் வெறித்தவள், அதற்கு மேல் நில்லாமல், ஓட்டமும் நடையுமாக வேகமாக அந்த இடத்திலிருந்து வெளியேறினாள்.

இன்னமும், அந்தக் குடும்பம் முழுதுமே தன்னை வெறுத்து ஒதுக்கும் காரணம் என்னவென்று அவளுக்குத் தெரியவில்லைதான்.

ஆனால், நின்று அதைக் கேட்டு, இப்போது பலவீனமாகப் பேசும் ஆன்ட்டிக்கு உடல்நிலை மேலும் கெட்டுவிட்டால்? மற்றவர்கள் மன்னிக்கிறார்களோ என்னவோ, அவளால் நிச்சயமாக தன்னைத் தானே மன்னிப்பது ஒரு போதும் இயலாது!

அதற்கென்ன? இந்த நாலு ஆண்டு காலம், அவள் உயிரோடுதானே இருந்தாள்? தாய் தம்பியிடம் பேசிச் சிரித்து, தம்பியின் வருங்காலம் பற்றித் திட்டமிட்டு... இயல்பான ஒரு குடும்பப் பெண்ணாக வாழ்ந்தாளே தவிரச் செத்து விடவில்லையே? அப்படியே மீதமுள்ள காலமும் கழிந்து விட்டுப் போகிறது.

வருத்தத்துடன் சௌமினி திரும்பிச் சென்றாள்.

ஆனால், நேரே வீட்டுக்குச் செல்ல அவளுக்குப் பிடிக்கவில்லை. வீட்டுக்குப் போனால், அம்மாவிடம் பேச வேண்டும்.

அன்னையிடம் இயல்பாக பேசுவதற்குப் பெருமுயற்சி செய்ய நேரும். அப்போது கூட, முடியுமோ என்னவோ? தாயார் இரண்டு தரம் குடைந்து கேட்டால், அப்புறம் வலியை மறைப்பது கடினம்!

அன்னையை சமாளித்து அறைக்குப் போய்விட்டாலும், தனிமை அவளது மனக் குமைச்சலையை கூட்டிவிடும்.

அப்படிக் குமைந்து குமுறுவதற்கு வேலையையே பார்க்கலாம் என்று முடிவு செய்து, சௌமினி எழுத்தாளர் வீட்டுக்கே போனாள்.

ஆனால், உடனே வேலையைத் தொடங்க முடியாமல், எப்போது வருவாள் என்று காத்திருந்தது போல அவளை நிற்க வைத்து, வசைமாரி பொழிந்தார் ராஜகெம்பீரன். தொடர்ந்து பத்து நிமிடஷங்களுக்கும் மேலாக ஒரே திட்டு.

நாளெல்லாம் ஊர் சுற்றிவிட்டு, நினைத்தால் வந்து வேலை செய்வதற்கு, இதொன்றும் கிராமப்புறத்து நூறுநாள் வேலைத் திட்ட அலுவலகம் இல்லை என்றார்.

சிறிதளவும் நியாயம் இல்லாத பேச்சுதான்.

ஆனால், உள்ளே புழுவாய் அரித்துக் கொண்டிருந்த வேதனையைச் சற்றே மறக்கடித்தது. கையில் இருந்த வேலையில் கவனத்தைச் செலுத்தச் செய்தது. அந்த அளவில் எழுத்தாளரின் வசை மழை அவளுக்கு நன்மையே செய்தது.

ராஜகெம்பீரனின் கோபத்தின் காரணத்தை ஆராய்ந்தால், பெரிய பிரச்சினை எதுவுமில்லை. சௌமினி பிரித்து எடுத்து வைத்திருந்த ஹோட்டல்களின் பட்டியல்கள் இரண்டையும் எப்படியோ குழப்பிவிட்டார். மொத்தத்தில் இருந்து பிரித்து எடுக்கவும் தெரியாமல், திணறித் திண்டாட நேர்ந்துவிட்டது.

ஒன்றும் புரியாமல் அவர் இவ்வளவு நேரம் பட்ட கஷ்டத்துக்கு வடிகால் வேண்டாமா? அதுதான் இந்த ஏச்சும் பேச்சும்!

எழுத்தாளரின் சுதி ஏற ஏற, சௌமினியின் மனதில் ஒரு தெளிவு உண்டாயிற்று. இந்த வேலையில், அவள் அதிக நாள் நீடிக்கப் போவதில்லை!

ஒருவாறு எழுத்தாளருக்கு திருப்தி ஏற்படும் விதமாக வேலையை முடித்துக் கொடுத்துவிட்டு, வீடு நோக்கி சௌமினி கிளம்பியபோதே எட்டு மணி ஆகிவிட்டது.

என்னவோ மனம் மரத்துப் போனது போல, வழக்கமான பயம், படபடப்பு எதுவும் தோன்றவில்லை. ஆனால் வீட்டுக்குப் போனால், எல்லாக் கஷ்டங்களும் இரு மடங்காக அவளைப் பாதித்தன.

ஏனெனில் அவளுடைய தம்பி கண்ணன் இன்னமும் வீடு வந்து சேரவில்லை.

மாலை மூன்று மணிக்குப் பள்ளிக்கூடம் விட்ட பிறகு, என்னதான் நண்பர்களுடன் அரட்டை அடித்தாலும், நாலரை, ஐந்து மணிக்கு அவனுக்குப் பசியெடுத்துவிடும். பிள்ளைக்காக சுந்தரி செய்து வைத்திருக்கும் சிற்றுண்டிக்காக ஓடி வந்துவிடுவான்.



கொஞ்ச நாட்களாகவே கண்ணன் வீடு வரும் நேரம் தாமதம் ஆனபோதும், இப்படி எட்டு மணி தாண்டியும், அவன் வராமல் இருந்தது இல்லை!

"கொஞ்ச நாளாகவே தாமதமாக வருகிறானா? ஏன் அப்படி? யாருடன் இருந்தான் என்று கேட்டீர்களாம்மா? ஏன் இதுபற்றி என்னிடம் சொல்லவே இல்லை?" என்று கேட்டாள் மகள்.

"எங்கேம்மா? சும்மாவே அவன் படிப்பு பற்றிக் கண்டித்துக் கொண்டே இருக்கிறாய். நீ கண்டித்தால், அவனும் ஆத்திரப்படுகிறான். அவள் மகள் என்றால், நான் மகன்தானே? எங்களுக்குள் அவளுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது? அவள் எப்படி என்னை அதட்டலாம் என்று என்னிடமே கத்துகிறான் உங்களுக்குள் வீணே ஏன் சண்டை என்று எண்ணினேன். இப்போது ஒரே பயமாக இருக்கிறதே!" என்று தாயார் கலங்கவும், சௌமினிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

பிள்ளையைக் காணோம் என்று சும்மாவே கலங்கிக்கொண்டு இருக்கிறவளிடம், முன்னே செய்யாதது பற்றிக் குறுக்கு விசாரணை செய்து என்ன பயன்? இப்போது என்ன செய்வதுஎன்றுதானே யோசிக்க வேண்டும்?

தாயின் அருகே ஓடி, அவளை லேசாக அணைத்து "ஒன்றும் பயப்படாதீர்கள், அம்மா. கண்ணனுடைய சிநேகிதர்களுக்கு ஃபோன் செய்து விசாரிப்போம். எல்லோரும் சேர்ந்து ஏதாவது பேசுவதில் நேரத்தைக் கவனித்திருக்க மாட்டார்கள்" என்று இதமான குரலில் கூறிவிட்டு, ஹாலில் சுவரோடு படிந்தாற்போல இருந்த சின்ன ஷெல்ஃபை திறந்து ஃபோன் எண்கள் குறித்திருக்கும் சிறு புத்தகத்தை எடுத்தாள்.

ஆனால் "அது வேண்டாம், சௌமி. பயன்படாது. அதிலே இருப்பதெல்லாம் கண்ணனுடைய பழைய நண்பர்களின் எண்கள். இப்போது எல்லோரும் புது செட்தான். நான் கூட, இவர்கள் எல்லோரையும் கூப்பிட்டுக் கேட்டுப் பார்த்தேன். எல்லோரும் ஒன்று போல அவனோடு பேசியே மாதக் கணக்காகிவிட்டது என்கிறார்கள்" என்றாள் சுந்தரி கவலையோடு.

சற்றுத் திகைத்து "என்னம்மா, புது சினேகிதர்கள் யாருடைய எண்ணுமா இதில் இல்லை" என்று அவசரமாகப் பக்கங்களைத் திருப்பிப் பார்த்தாள் பெண்.

ஒவ்வொரு பக்கமாகப் பாராவிட்டாலும், அவ்வப்போது பார்த்தது தவிரப் புதிதாக எதுவும் குறிக்கப்படவில்லை என்று புரிந்தது.

கைப்பையை மேஜை மேல் போட்டுவிட்டு, ஒரு சோஃபாவில் காலை நீட்டி அமர்ந்து "கவலைப்படாதீர்கள் அம்மா. இந்த பழைய தோழர்கள் யாருக்கேனும், கண்ணனுடைய புது நண்பர்கள் பற்றியும் ஏதாவது தெரிந்திருக்கும் கேட்டுப் பார்க்கலாம். அதற்குள், தம்பிக்கே நேரமாகிவிட்டது உறைத்து, அவனாகவே வந்தாலும் வந்துவிடலாம்" என்று நம்பிக்கையாகப் பேசியபடி, முன்பு கண்ணனோடு நெருங்கிப் பழகியவர்களைக் கூப்பிட்டு செளமினி விசாரிக்கத் தொடங்கினாள்.

மகளின் சோர்வு உறுத்த, அவளுக்குக் கொஞ்சம் பழச்சாறு ஊற்றிக் கொணர்ந்து கொடுத்தாள் சுந்தரி "இதைக் குடித்துவிட்டுப் பாரம்மா" என்றாள்.

ஏதோ நினைவு வர "அம்மா அவன் பள்ளியில் செல்ஃபோன் பயன்படுத்தக் கூடாதுதான். ஒருவேளை செல்லை வைத்துவிட்டுப போயிருக்கிறானா, பாருங்கள். அதில் ஏதாவது நம்பர் கிடைக்கிறதா என்று பார்ப்போம்" என்று ஆவலாகப் போய்த் தேடினால், சின்னவன் செல்லை எடுத்துப் போயிருந்தான்.

அந்த எண்ணுக்கு முயற்சி செய்து பார்த்தாலோ 'ஸ்விட்ச் ஆஃப்' என்று வந்தது.

"வரவர எல்லோருக்கும் இது ஒரு நாகரீகம் ஆகிவிட்டது" என்று எரிச்சலோடு வாய்க்குள் முணுமுணுத்துவிட்டு, தன் பழைய முயற்சியைத் தொடர்ந்தாள் செளமினி.

பலன்தான் கிடைப்பதாக இல்லை!

இந்த முயற்சி பயன் தராது என்று உணர்ந்து, இனி வெளியே போய்த் தேட வேண்டியதுதான் என்று முடிவு செய்து வீட்டைப் பூட்டிக்கொண்டு சுற்று மதிலைக் கடந்து ஆட்டோ பிடிக்க வெளியே சென்றபோது மணி பதினொன்றாகி இருந்தது.

வீடு நோக்கியோ என்னவோ, வேகமாகச் சென்று கொண்டிருந்த ஓரிரு வாகனங்கள் தவிர நடமாட்டம் நின்று போயிருந்த தெருவும், ஆங்காங்கே இருந்த தெருவிளக்குகளை மீறி வெளியே பரவியிருந்த் இருளும் அந்தப் பெண்களை அச்சுறுத்தின.

தாயின் உடல் நடுங்குவதை உணர்ந்து "அம்மா, நீங்கள் உள்ளே போங்கள். ஏதாவது பிரச்சினை என்று கண்ணனே வீட்டுக்கு வந்தாலும், வீட்டில் யாராவது இருக்க வேண்டாமா? நான் மட்டும்..." என்று செளமினி சொல்லும்போதே, சுந்தரி இடைமறித்துப் பேசினாள்.

"அசட்டுத்தனமாக பேசாதே, செளமி. வயதுப் பெண் நீ. உன்னை இந்த நேரத்தில் வெளியே கூட்டிப் போவதற்கே கலக்கமாக இருந்தது. தனியாக வேறு அனுப்புவதா? நீ வீட்டில் இரு, நான் போய்ப் பார்க்கிறேன்" என்றாள் பெற்றவள்.

"எங்கே என்று போவீர்கள்? அக்கம் பக்கம் ஒன்றிரண்டு தெருக்கள் தவிர, நீங்கள் எங்கும் போனதில்லையே. அப்படி இருக்க எங்கென்று போய்த் தேடுவீர்கள்? நானே..."

இரு பெண்களுமாகக் கண்ணனுக்காக மட்டுமின்றி, ஒருவர் மற்றவருக்காகவும் கவலையும் பயமுமாய் கலங்கியபடி கையைப் பிசைந்து கொண்டு அங்கே நின்றனர்.

தலைமைக் கிளையில் அதிக நேரம் இருந்து பார்த்தாலும், மற்ற மூன்று கிளைகளையும் ஒருதரம் போய்ப் பார்த்துவிட்டுத்தான் தனசீலன் வீடு திரும்புவான்.

எப்போதுமே சபாபதி சற்று முன்னதாக வீட்டுக்குப் போய் விடுவார் என்றாலும் அன்று ஒரு திருமண வரவேற்புக்குச் செல்ல வேண்டி இருந்ததால், இன்னமும் சீக்கிரமாகவே கிளம்பிப் போயிருந்தார்.

இதுபோன்ற வைபவங்களுக்குத் தங்கையை உடன் அழைத்துப் போவது, சரோஜாவின் வழக்கம். அப்படியே ஓரிரு நாட்கள், தமக்கையுடன் கோகிலா தங்கிவிட்டுப் போவாள்.

அன்றும் இப்படித்தான் மூன்று பேரும் வரவேற்பு வைபவத்தை நிம்மதியோடு அனுபவித்துக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த தனசீலனுக்கு சுமார் எட்டு மணியளவில் தந்தை செல்லில் அழைத்ததே அதிசயமாக இருந்தது.

"அந்தப் பெண்ணால் அம்மாவுக்குப் பால்பிடேஷன் அதிகமாகி, மருத்துவமனையில் சேர்த்திருக்கிறோம். இப்போதைக்கு உடனடி ஆபத்து இல்லையாம். ஆனால் இரவு முழுவதும் மருத்துவமனையில் வைத்துப் பார்த்துவிட்டு, அப்புறமாக அழைத்துப் போங்கள் என்று பெரிய டாக்டர் சொல்லிவிட்டார். என்னவோ அவருக்கு உள்ளூர ஏதோ குடைகிறது போல! எதற்கும் நீயும் வந்துவிட்டால், டாக்டரிடம் பேச இலகுவாக இருக்கும்" என்று அவர் கூறவும் அவன்

அதிர்ந்தான்.

அந்தப் பெண்ணாலா? என்ன இது? அடியோடு தொடர்பற்றுப் போய் நாலு ஆண்டுகள் ஆன பிறகும், வேண்டாததை நினைத்து உடம்பைக் கெடுத்துக் கொள்வார்களா?

கொஞ்சம் கொஞ்சமாக அன்னையின் உடல் நிலை தேறுகிறது என்று எண்ணினால், திடுமென ஏதோ ஒரு வகையில் அவளை நினைத்து மறுபடியும் ஆரோக்கியம் முன்னை விட மோசமாகி விடுகிறது.

அந்தப் பாவி மட்டும் கையில் கிடைத்தால்....

சௌமினியை நினைத்ததிலேயே தாயார் மனநிலை உடல் நலத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கிறாள் என்று எண்ணி வருத்தத்துடன் சென்றால், அவள் நேரிலேயே வந்தாள் என்று தெரியவும் தனசீலனுக்கு ரத்தம் கொதித்துவிட்டது!

கொஞ்ச நஞ்சம் அவள் அன்னையின் உயிர் உடலோடு ஒட்டிக் கொண்டிருப்பது கூட, அவளுக்குப் பிடிக்கவில்லையாமா?

'மருமகளே, மருமகளே' என்று அவளிடம் அன்பைக் கொட்டியதற்கு இப்படியா முதுகில் குத்துவாள்?

மனதில் உள்ளதையெல்லாம் கொட்டி, அவளைத் திட்டித் தீர்த்துவிட வேண்டும் என்று வெறி பிடித்தவன் போல கண் மண் தெரியாத ஆத்திரத்துடன் தனா மருத்துவமமனையை விட்டு கிளம்பினான், அடித்து நொறுக்கும் துடிப்பை அடக்கியபடி!



## அன்பு மனம் மாறியதேன் 7

தனசீலனுக்கு இருந்த ஆத்திரத்தில் நேரம் காலம் எதையும் பார்க்கத் தோன்றவில்லை.

மனச் சோர்வோடு, உடலில் ஏறியிருந்த மருந்துகளின் காரணத்தாலும் ஓய்ந்து கிடந்த தாயின் தோற்றம், அவனை உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது.

முதலில் அந்த சௌமினியைக் குத்திக் கிழிக்க வேண்டும். வாய் வார்த்தையாலேனும்!

ஒன்றும் வேண்டாம் என்று ஒதுங்கிப் போனால், அவளுக்கு எக்காளம் ஆகிவிட்டது போல!



இருக்கட்டும், இன்று அவன் பேசுகிற பேச்சில், அவள் இனித் தூங்கவே கூடாது. வள்ளுவர் கூடச் சொல்லவில்லை? 'ஆறாதே நாவினால் சுட்ட வடு' என்று? அது என்னவென்று புரிய வைக்க வேண்டும்.

இது பழைய கற்காலமாக இல்லையே என்று தனசீலனுக்கு வருத்தமாகக் கூட இருந்தது. சும்மா அவளை அடித்து நொறுக்கி விடலாமே! பெண்ணை அடிப்பது அனாகரீகம் என்று கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்க நேர்ந்திராதே!

என்னென்னமோ எண்ணிக் குமுறியபடி, காரை ஓட்டி வந்தவனின் கூர் விழிகள், தெருமுனை திரும்பியதுமே, கையைப் பிசைந்து கொண்டு நின்ற இரு பெண்களையும் கண்டுவிட்டன.

சாலையின் வலக்கைப் புறமாக ஓர் அடுக்கு மாடிக் கட்டிடத்தின், அது அவர்கள் ஃப்ளாட் இருக்கும் கட்டிடம்தான். அதன் வெளிப்பறமாகச் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தார்கள்.

தலைமுதல் கால் வரை கலக்கமே உருவெடுத்து வந்தது போன்ற தோற்றம்!

என்னவாக இருக்கும், கூட அந்தத் தம்பியை வேறு காணோம்?

காரின் வேகத்தைக் குறைத்து, காற்று வீசிய திசையைக் கணக்கிட்டு, இரு வீடுகளுக்கு முன்னேயே காரை நிறுத்தியதோடு, கண்ணாடியையும் இறக்கி தனசீலன் கவனித்தான்.

காற்று உதவி செய்ய தாய் மகளின் பேச்சு பெருமளவு தெளிவாகவே கேட்டது.

எங்கே போய்த் தேடுவது? யார் போவது என்பது பிரச்சினை என்று புரிந்தது.

இருவருமே, அடுத்தவரைப் போக வேண்டாம் என்று தடுத்துக் கொண்டிருந்தனர். அது சரியான கருத்துதான். நள்ளிரவில் பெண்கள் தனியே வெளியே சென்று வரும் விதத்திலா, நாடு இருக்கிறது?.

பேச்சில் இருந்து தம்பியைக் காணோம் என்றும் புரிந்தது. அந்தக் கழுதை எங்கே போய்த் தொலைந்திருக்கும்? குடும்பமே உருப்படாததுதான் போல! அக்காவுக்கு ஏற்ற தம்பி! நன்றாகப் படட்டும்!

இந்தத் தண்டனையே போதும் என்று கிளம்பி விடலாமா என்று எண்ணி தனசீலனுக்கு அதுவும் முடியவில்லை. ரொம்பச் சின்ன

பையனில் இருந்து, அவனுக்குக் கண்ணனைத் தெரியும்.

ஒருவேளை, அவனுக்கு ஏதாவது ஆகியிருந்தால்?

தாயும் மகளுமாக... முக்கியமாக சௌமினி நன்றாக படட்டும் என்று அடியோடு விடவும் முடியாமல், அருகே பக்கத்தில் சீட்டில் கிடந்த லாப்டாப்பை தனசீலன் எடுத்தான்.

கண்ணனின் எண் அவனுக்குத் தெரியும்.

ஆனால், 'சிம்' கார்டை மாற்றியிருப்பானோ என்று எண்ணியபோதும், எதற்கும் முயன்று பார்க்கலாமோ என்று அவன் யோசித்தபோது, ஏதோ வழி கண்டது போல, சௌமினியும் "அம்மா!" என்றாள் விழிகள் பளிச்சிட.

பளபளவென்று என்ன மாதிரி ஒளி பொருந்திய கண்கள்!

ஆனால், பாம்பின் கண்கள் கூட பளபளப்பாகத்தான் இருக்கும்! அவனுடைய குடும்பத்துக்குத்தான் அதைப் புரிந்து கொள்ளத் தெரியாமல் போயிற்று.!

ஆனால், இப்போது என்ன சொல்லப் போகிறாள்?

"அம்மா, ஒரு நிமிஷம் பொறுங்கள். ஃபேஸ்புக்கில் கண்ணனுடைய புது நண்பர்கள் பற்றிப் பார்த்து விடுகிறேன்" என்று செல்ஃபோனில் படபடவென்று தட்டிய சௌமினி, உடனேயே சோர்வுடன் தொய்ந்தாள்.

"என்னடாம்மா?" என்று கவலையோடு கேட்ட தாயிடம் "அம்மா, கண்ணன் அவனுடைய ஃப்ரெண்ட் லிஸ்டில் இருந்து என்னை எடுத்து விட்டான் அம்மா. அத்தோடு அவனது எண்ணைப் ப்ரைவசி செட்டிங்கில் வைத்திருப்பதால், ஒன்றுமே அறிய முடியவில்லை! ஆனால், அவனது ஃப்ரண்ட் லிஸ்டில் இருந்தே என்னை விலக்கி விட்டானே! மனதுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதும்மா" என்றபோது சௌமினியின் குரலில் வலி தெரிந்தது.

"அதை விடவும், இப்போது தம்பியைக் கண்டுபிடிக்க ஒரு வழியும் தெரியவில்லையே! அதுதான் ரொம்பக் கவலையாக இருக்கிறது. அலைந்து திரிந்து தேடுவது என்றாலும், எங்கே தொடங்குவது என்றே தெரியாமல், நாம் என்னதான் செய்வது? எல்லாம் ஒரே பயமாக இருக்கிறதேம்மா!" என்றாள் தவிப்புடன்.

எப்படியோ போகிறார்கள் என்று அப்போது தனசீலன் போயிருக்கலாம். சரியான தண்டனை என்று ஒரு குரூர திருப்தியே அடைந்தால் கூட, அவனைத் தப்புச் சொல்ல முடியாது. ஆனால்,



அவன் வேறு மாதிரி யோசித்தான்.

அவனது ஒரு கடையிலிருந்து சற்று தூரத்தில்தான், கண்ணன் படிக்கும் பள்ளி இருந்தது. அவனது தளத்தில் இருந்து பார்க்கும்போது, அவ்வப்போது விளையாட்டு மைதானத்தில் கண்ணனின் உருவம் கண்ணில் படும்.

ஆனால், அதைத் தொடர்ந்து சௌமினியின் நினைவும் வரவே, 'இருந்திருந்து, இந்த இடத்தில் வந்து இந்தக் கிளையைத் தொடங்கினோமே' என்று அவன் பலமுறை உள்ளூர எரிச்சல் பட்டிருக்கிறான்.

ஒரு சில மாதங்களாகச் சின்னவனுடைய சகவாசம் மாறியதும், அவனது கண்களில் பட்டிருந்தது. ஆரோக்கியமான விளையாட்டுக்களை அடியோடு விட்டுவிட்டதும் தெரியும்.

அந்த வட்டாரத்தில் முக்கியமாக அரசியல் கட்சிப் பிரமுகருடைய மகனுடைய செட்டோடு சேர்ந்து, துரித உணவகங்களை மொய்ப்பதையும் கண்டிருக்கிறான். அதன் பிறகும் கூட்டமாக எங்கோ செல்வார்கள்.

செல்லுமிடம் நிச்சயமாக சத்சங்கமாக இராது!

அந்த யோசனையின் விளைவாக, அந்தக் கிளையைச் சேர்ந்த சேல்ஸ்மேனை, செல்லில் பிடித்தான்.

அரசியல்வாதியுடைய வீட்டினர் செல்ஃபோன் வாங்குவது, பழுது பார்ப்பது எல்லாம் தனசீலனின் அந்தக் கிளையில்தான். பிற்பாடு எந்தப் பிரச்சினையும் வந்துவிடக் கூடாது என்று, நம்பகமான இந்த சேல்ஸ்மேனைத்தான், அவர்களுக்கான வேலைகளுக்கு என்று தனசீலன் ஒதுக்கியிருந்தான். எனவேதான் அவனுடன் தொடர்பு கொண்டு பேசினான்.

பேசியதில் வேண்டிய விவரமும் கிடைத்தது.

கண்ணனைப் போல அந்தப் பையன் 'ப்ரைவசி செட்டிங்' எதுவும் பண்ணவில்லை. நண்பர்களுக்கு மறக்க முடியாத ஏதோ பார்ட்டி கொடுக்கப் போவதாக ஃபேஸ்புக்கில் பெருமையாக அறிவித்திருந்தான்.

பொதுவாக எல்லாரும் அறிந்த தன் செல்ஃபோனை எடுத்த தனா, சற்று யோசித்துவிட்டு, லாப்டாப் பைக்குள் இருந்து இன்னொன்றை எடுத்தான்.

"என் தம்பியின் பாட நோட்டு கண்ணனிடம் இருக்கிறதா என்று

கேட்க வேண்டும். இங்கே இருப்பேன் என்று சொல்லியிருந்தான்..." என்று மிகவும் இயல்பான குரலில் தனசீலன் கூறியபோது, அரசியல்வாதியுடைய பிள்ளையும் அதைச் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டான்.

அவனது குரலில் இருந்த சிறு குழறல் அவன் எதையுமே பெரிதாக எடுத்துக் கொள்வான் போலக் காட்டவில்லை.

கண்ணனைக் கூப்பிட்டு "உனக்குத்தான், பேசுடா" என்று மொபைலை அவனிடம் கொடுத்துவிட்டுப் போனான்.

சிறு தயக்கத்துடன் "யா...ர்?" என்று கண்ணன் கேட்டதுமே தனசீலனின் குரல் மாறியது.

கட்டைக் குரலில், "பார், இங்கே என்ன பார்ட்டி நடக்கிறது என்று எனக்குத் தெரியும். இன்னும் பத்து நிமிஷத்தில் நீ வீட்டில் இல்லாவிட்டால், கூண்டோடு போலீஸ் லாக்கப்பில் இருப்பீர்கள். என்ன? புரிகிறதா? என் தம்பியுடைய பாட நோட்டு உன்னிடம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன். ஏற்றபடி பேசிக்கொள். இப்போது உடனே வீட்டுக்குப் போகிறாயா, அல்லது..." என்று மிரட்டினான்.

"போ... போகிறேறேன்" என்று கண்ணன் பயத்துடன் தடுமாறும்போதே, பேச்சைக் கட் பண்ணிவிட்டுக் காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்ததற்கும் முன்னதாகவே கண்ணன் ஆட்டோவில் வந்து இறங்கிவிட்டான்.

ஆவலாகப் பற்றிய தாயின் கரத்தை உதறிவிட்டு, தமக்கையை ஒரு முறை முறைத்துவிட்டு, அவனும் பின்னோடு மற்றவர்களும் வீட்டுக்குள் போவதையும் தன் காருக்குள் இருட்டிலேயே அமர்ந்து பார்த்துவிட்டு தனசீலன் காரைத் திருப்பிக் கொண்டு போனான்.

விஷயம் அத்தோடு அமைதியாக முடிவது கடினம். பையனின் மனநிலைக்கு அது முடியாது. ஆனால் படட்டும், தெரிந்தே செய்த பெரிய தப்புகளுக்கு நன்றாகத் தண்டனை அனுபவிக்கட்டும். எப்படியோ போகட்டும் என்றுதான் தனசீலன் முதலில் நினைத்தான்.

ஆனால், கண்ணன் துறுதுறுப்பான பையன். இந்த வயதில் கட்டுப்பாடின்றி அவன் கெட்டலைவதையும், தனசீலனால் ஒப்ப முடியவில்லை!

அக்கா செய்த தப்புக்கு, இந்தப் பொடியன் என்ன செய்வான், பாவம்!

'அண்ணா, அண்ணா' என்று காலைச் சுற்றி வந்த பையனுக்கு என்னவெல்லாம் கற்றுக் கொடுத்திருக்கிறான்!

'உன் குட்டி மச்சினன்' என்றே கோகிலாச் சித்தி குறிப்பிடுவாள், கடைசியில்...

தனசீலன் ஊகித்தது போலவே, சௌமினி வீட்டுக் கதவைச் சாத்தியதுமே, உள்ளே 'சடபுடா'க் குச்சி, சரவெடியெல்லாம் வெடிக்கத் தொடங்கின.

யார் பேசவும் இடம் தராமல் முதல் ஆளாக கண்ணன் கத்தத் தொடங்கினான்.

கண்டபடி தொலைந்து போவதற்கு அவன் என்ன, பச்சைப் பாப்பாவா? பதினைந்து வயதாகிவிட்டால், அவன் பெரிய பையன் அல்லவா?

அப்பா இல்லாததற்கு அவன்தானே வீட்டு ஆண்பிள்ளை இன்னும் மூன்று ஆண்டுகள் தாண்டினால், அவன் ஓட்டே போடுவான். அப்படிப்பட்டவனை, இருக்கும் இடம் தேடிக் கண்டுபிடித்து, அடியாள் வைத்துக் கூப்பிட்டு மிரட்டுவதா என்று படபடவென்று கோபமாகக் கத்தினான்.

அன்னைக்கும் மகளுக்கும் அந்த வீட்டு ஆண்பிள்ளையின் பேச்சில் ஒன்றுமே புரியவில்லை.

இவன் இருந்த இடம் யாருக்குத் தெரியும்? அது தெரிந்தால் அல்லவா, அங்கே இவனைக் கூப்பிடுவதும் மிரட்டுவதும்!

இரு பெண்களுக்குமே திகைப்புதான். ஆனால் முதலில் சமாளித்து "என்னடா உளறுகிறாய்? அடியாளாவது மிரட்டுவதாவது? முதலில் அப்படிப்பட்ட தாதாக்களை எங்களுக்கு எப்படித் தெரியும்? நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. முதலில் நீ எங்கே இருந்தாய் என்றே தெரியாமல்தானே, நடுத்தெருவில் நின்று விழித்துக் கொண்டிருந்தோம். இவ்வளவு நேரம், நீ எங்கே இருந்தாய்? முதலில் அதைச் சொல்லு!" என்று சௌமினி தம்பியை அதட்டிக் கேட்டாள்.

ஆனால், அவளது பேச்சில் ஒரு வார்த்தையைக் கூடக் கண்ணன் நம்புவதாக இல்லை. வெறுப்புடன் அவளை நோக்கிப் "புளுகுணி!" என்றான்.

அதே தோரணையில் தொடர்ந்து அவன் பேசுமுன் குறுக்கிட்டு

“அக்கா சொல்வது நிஜம்தான், கண்ணா. நீ எங்கே என்ன பிரச்சினையில் இருக்கிறாயோ? எங்கே போய்த் தேடுவது என்ற கவலையில்தான் நாங்கள் இரண்டு பேருமே வெளியே வந்து நின்று கொண்டிருந்தோம்” என்றாள் சுந்தரி.

உண்மையை விளக்கி, பிள்ளைகளுக்கு இடையே சண்டை வராமல் தடுக்கும் எண்ணத்தோடுதான் சுந்தரி பேசியது.

ஆனால், மகனின் கோபம் இன்னமும் கூடியதே தவிரக் குறையவில்லை.

அத்தனை நண்பர்களும் அங்கே கவலையற்றுக் கும்மாளமாய்க் கூத்தடித்துக் கொண்டிருக்கையில், அவன் மட்டும் இடையிலேயே வீடு திரும்ப நேர்ந்தது, அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

அதிலும் அவன் அங்கிருந்து வெளியேறும் சமயத்தில் யாரோ ‘அமுல்பேபி’ என்று சொல்லிக் குழந்தை அழுவது போல ஒலியெழுப்ப, எல்லோரும் சேர்ந்து சிரித்தது, அவன் காதிலும் விழுந்து, நெஞ்சைப் புண்ணாக்கியிருந்தது.

இத்தனைக்கும் காரணம் யார் என்பதில் மட்டும் அவனுக்கு அணுவளவும் சந்தேகம் இல்லை. வீட்டுக்குள்ளே அவனது பரம எதிரியான அக்காவின் வேலையே என்பது வெகு நிச்சயம்!

எப்போது பார்த்தாலும் அதட்டி மிரட்டி அவனைத் திட்டிக் கொண்டே இருப்பவள்! படி படி என்று உயிரை வாங்குகிறவள், தாயிடம் கோள் மூட்டுகிறளும் அவளே!

ஆனாலும், அந்தக் கட்டைக் குரலின் கட்டளையை வெளிப்படையாக எதிர்க்கும் தைரியமும் அவனுக்கு வரவில்லை.

ஒருவேளை அந்தக் கட்டைக் குரல் தடியன் சொன்னது போலச் செய்து, போலீஸ் வந்துவிட்டால், அவர்கள் அத்தனை பேருமே, மைனர் பசங்கள் என்பதால் கட்டாயம் மாட்டிக் கொள்வார்கள்.

அரசியல்வாதியுடைய மகனும், மற்றும் சில பெரிய இடத்துப் பிள்ளைகளும் அவரவர் அப்பாமார் உதவியோடு எப்படியும் வெளியே வந்து விடுவார்கள், ஆனால் அவன்?

தான் தனியே மாட்டிக் கொள்வோம் என்கிற பயத்தில்தான் அவன் வீடு திரும்பியது.

ஆனால் நண்பர்கள் மத்தியில் நேர்ந்த அவமானம், கொண்டாட்டத்தை விட்டுவிட்டு இடையில் திரும்பியது எல்லாமாக அவன் மனம் எரிமலையாகக் குமுறிக் கொண்டு இருந்தது.



இத்தனைக்கும்மேல், அவனை அதட்டிக் கேள்வி வேறு கேட்கிறாள்! அம்மாவுக்கும் உருவேற்றுகிறாள்! திமிர் பிடித்தவள்!

ஆத்திரத்துடன் “தலையில் இருந்து கால் வரை அவ்வளவும் பொய், அம்மா. சம்பாதிக்கிறோம் என்ற திமிரில், நம் இருவரையும் அடக்கியாள நினைக்கிறாள். செய்வதெல்லாம் செய்துவிட்டு, அப்பாவி வேஷம் போடுகிறாள்! ஆனால், உங்களைப் போல அதைப் போய் நம்புவதற்கு நான் முட்டாள் இல்லை. இதற்கு மேல் என் விஷயத்தில் தலையிட்டால் மரியாதை கெட்டுவிடும் என்று அந்தப் பிசாசிடம் சொல்லி வையுங்கள்!” என்று சீறிவிட்டு, அவனது அறைக்குள் சென்று கதவை தடாரென்று சாத்திக் கொண்டான் ‘வீட்டு ஆண்பிள்ளை’!

தாயார் பரிதாபமாக நோக்க, மகள் முகத்தைத் தெளிய வைத்துக் கொண்டாள்.

“போகட்டும், அம்மா. சின்னப் பையன்தானே. நல்லது கெட்டது என்ன தெரியும்? பாவம், புத்தியில்லாமல் பேசுகிறான். ஆனால் எப்படியோ வந்துவிட்டானே! அது போதும். இவ்வளவு நேரத்துக்குக் கண்ணன் சாப்பிட்டிருப்பான். வாருங்கள், லேசாக எதையேனும் சாப்பிட்டுவிட்டு நாமும் படுப்போம். நாளைக்கு வேலை இருக்கிறது அல்லவா?” என்று சமாதானமாகப் பேசி தாயை உணவருந்த அழைத்துப் போனாள்.

ஆனால், அது யார் அந்த அடியாள்? கண்ணன் கோபப்பட்டாலும், அவனை மிரட்டி வீட்டுக்கு வர வைத்திருக்கிறான்! இல்லாவிட்டால், எங்கே போவது, என்ன செய்வது என்று தெரியாமல், அன்னையும் அவளும் எவ்வளவு நேரம் தவித்திருப்பார்களோ?

அந்த வகையில் குடும்பத்துக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறான்!

நன்றி கூறப்பட வேண்டிய உதவி! ஆனால் அவன் யாரென்று தெரிந்தால் அல்லவோ நன்றி தெரிவிக்க முடியும்!

மறுநாள் இன்னோர் அதிசயம் நிகழ்ந்தது. அவளாக அழைத்த போதல்லாம் செல்லை அணைப்பது, அல்லது பேச்சைக் கட் செய்வதே வழக்கமாக் கொண்டிருந்த தனசீலன், அவனாக சௌமினியை அழைத்துப் பேசினான்.

ஆனால், அவன் பேசிய விதத்துக்கு சும்மாப் பேசாமலே இருந்திருக்கலாம்!

ஏனெனில் அவனது பேச்சு அவளை அபாண்டமாகக் குற்றம் சாட்டியது! அவள் கனவிலும் கருதாத குற்றம்!

மறுநாளே தனசீலன் அவளைக் கூப்பிட்டபோது, கம்ப்யூட்டர் வகுப்புப் படிகளில் சௌமினி ஏறிக் கொண்டிருந்தாள்.

செல்லின் ஒலி கேட்கவும், அசுவாரசியமாகத்தான் எடுத்துப் பார்த்தாள்.

ஆனால் திரையில் ஒளிர்ந்த எண்! அவளது இதயத்திலேயே பொறிக்கப்பட்டவை ஆயிற்றே!

"தனா..." என்று அவள் குரல் தழுதழுக்கும்போதே, அவன் கடுமையான குரலில் பேசத் தொடங்கிவிட்டான்.

"இதேபார். உன்னுடன் பேச எனக்கு கொஞ்சமும் விருப்பம் இல்லை. சொல்லப் போனால் மிகுந்த அருவருப்புதான். பேசி முடித்ததும் வாயைக் கொப்பளித்தாக வேண்டும் போன்ற அருவருப்பு. ஆனால் வேறு வழியில்லை. உன்னைக் கடுமையாக எச்சரிக்கவே பேச வேண்டியிருக்கிறது.

"இந்தத் தடவை நான் இல்லாத நேரத்தில் என் வீட்டுக்கு வந்ததால் தப்பிப் பிழைத்தாய். ஆனால் இன்னொரு தடவை வீட்டுப் பக்கம் வந்தாய் என்று தெரிந்தால் உன்னைத் தொலைத்துக் கட்டிவிடுவேன். புரிகிறதா? கைகால் உருப்படியாகத் திரும்பிப் போவதே சந்தேகமாகிவிடும். இதை நினைவில் வைத்துக்கொண்டு, அதற்கு மேல் இந்தப் பக்கமாகக் காலடி எடுத்து வை!

"உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால் என் வீட்டுக்கு வருவாய்? அன்று பணம் போனதும் வேண்டாம் என்று என்ன மாதிரி உதறிவிட்டுப் போனாய்? இன்று எங்களிடம் பணம் வந்ததும் மறுபடியும் ஒட்டிக்கொள்ளப் பார்க்கிறாயா? முடியுமா?

"நாங்கள் என்ன முட்டாள்களா? உன் சுயரூபம் தெளிவாகத் தெரிந்து போனதால், நாங்கள் யாரும் உன்னை நம்பவே மாட்டோம்.

"ஒரு காலத்தில் உன்னை நம்பிய பாவத்துக்குப் படாத துன்பமெல்லாம் பட்டுத் தேறினோம். என்ன பாடு பட்டு என் அம்மாவின் உயிரைக் காப்பாற்றினோம் தெரியுமா? போதும் தாயே, போதும். இன்னொரு தரமும் அதை அனுபவிக்க வைக்காதே.

"இதயத்துக்குப் பதிலாக கருங்கல்லை வைத்திருக்கும் உனக்கு, என் அம்மாவின் உயிர் பற்றிச் சிறிதும் அக்கறை இராதுதான்.

"ஆனால் எனக்கு அப்படியல்ல! முன்போல நான் ஒன்றும்



இல்லாத ஆளும் அல்ல. வந்தது வரட்டும் என்று உன்னை அரைப்பிணம் ஆக்கிவிடுவேன்.

"இப்போது எங்கள் வளத்தைப் பார்த்து உனக்கு நாக்கு ஊறி மீண்டும் முயற்சி பண்ண நினைத்திருப்பாய். ஆனால் நாங்கள் யாரும் ஏமாறுவோம் என்று எண்ணாதே.

"மானம் ரோஷம் ஏதேனும் துளி இருந்தாலும், ஏன், உன் உயிர் மீது ஆசை இருந்தாலுமே, எங்கள் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கத் துணியாதே, ஜாக்கிரதை!" என்று கடுமையான குரலில் ஒரே வேகத்தில் சொல்லிக் கொண்டே வந்தவன் அந்த எச்சரிக்கையோடு பட்டென்று பேச்சை முடித்துவிட்டான்.

அளவிட முடியாத வருத்தமும் வேதனையும்தான்.

ஆனால், ஏன் என்று புரியாமல் நாலு ஆண்டுகளாக நெஞ்சைக் குடையும் குழப்பம் அப்படியே இருந்தது.

இப்படிப் பேசுகிறவனிடம், என்னவென்று விளக்கம் கேட்பது?

கூடவே அவனிடம் இப்போது சேர்ந்திருக்கும் பணத்துக்காக வருகிறாய் என்று தனசீலன் சொன்னது, அவளைப் பெரிதும் வருத்தியது.

அவள் என்ன, அவனது பணத்துக்காகவா, நெட்டில் அவனைத் தேடினாள்.?

ஏதோ, தேடியதற்கு, தனசீலன் குடும்பம் இப்போது நல்ல நிலையில் இருப்பது தெரிந்தது, ஒரு நிம்மதி.

ஆனால், அவனது இப்போதைய பேச்சுக்கு மேல், அவனை எட்டிப் பார்ப்பது கூடக் கேவலம். அடியோடு ஒதுக்கி விடுவதுதான் கௌரவம்!

இந்த முடிவோடு சௌமினி வாழத் தொடங்கினாள்.

கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்புக்குப் போவது, வேலைக்குப் போவது, வருவது, அப்புறம் அறைக்குள் முடங்குவது! தாயார் வந்து பார்த்தால், தூங்குவது போலப் பாசாங்கு செய்வது!

காலம் முழுவதையும் இப்படியே கழித்துவிட வேண்டியதுதான் என்று எண்ணியிருந்த சௌமினி, சில தினங்களிலேயே அந்த முடிவை மாற்றிக் கொள்ள நேர்ந்தது!

உயிர் இருக்கும் வரை நம்பிக்கையும் இருக்குமாமே! நொந்து ஓய்ந்திருந்த அவள் மனதிலும் நம்பிக்கை தலை தூக்கியது. காரணம் அவளுடைய தம்பி! தம்பியேதான்.

வீட்டு உறவுகளைப் பொறுத்தவரை, கண்ணன் தமக்கையை மன்னிப்பதாக இல்லை. அவளோடு பேசுவதை அறவே தவிர்த்தான். அவள் முகத்தை நிமிர்ந்து பார்ப்பது கூடக் கிடையாது.

அவள்தான் சும்மாவே 'படி படி' என்று விரட்டிக் கொண்டிருந்தவள், இப்போதும் அவனை உளவு பார்த்து, அம்மாவிடம் காட்டிக் கொடுத்து, நண்பர்கள் நடுவில் கேவலப்படுத்தி விட்டாள், ஜென்ம விரோதி!

அப்படித்தான் நடத்தினான்.

அவர்களுடைய தாயார், மகளுக்கு ஒரு தம்ளர் தண்ணீர் கொடுத்தால் கூட, "அவள்தானே செல்லம், அவளுக்குத்தானே செய்வீர்கள்?"என்று காய்ந்தான்.

"எல்லாம் தானே புரியும், அம்மா. அதுவரை என்னை விட்டுவிட்டு அவனுக்கே செய்யுங்கள். உங்களிடமாவது இணக்கமாகப் பழகட்டும்" என்ற மகளுக்காக, உள்ளூர மனம் உருகினாள் சுந்தரி.

இந்த இருட்டு எப்போது, எப்படி விலகும்?

தன்னிடம் எப்படி நடந்தாலும், கண்ணன் முன்போலப் படிக்க அமரவும் சௌமினிக்கு ஆறுதலாக இருந்தது. இப்போது அவனது படிப்புதானே முக்கியம்?

ஒருநாள் கண்ணனின் அறையைத் தாண்டிச் செல்லும் அவன் யாருடனோ உரக்கப் பேசுவது அவளுக்குக் கேட்டது.

செல்லில் கதை பேசுகிறானோ என்று அவள் கவலையோடு நின்று கவனித்தால், எரிச்சலோடு, அதே சமயம் அச்சம் கலந்த குரலில் சின்னவன் சொல்லிக் கொண்டிருந்தான் "ஐயோ, ஆமாம், ஆமாம் சார்! நான் படிக்கிறேன் படிக்கிறேன். இப்போது கூடப் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!" என்றான்.

யாரிடம் சொல்கிறான்? முன்னொரு நாளும், இதேபோலப் படிப்பதாக அவன் உரக்கச் சொன்னதைக் கேட்ட ஞாபகம் அவளுக்கு வந்தது.

அது யார் அந்த 'சார்'

யோசித்ததில் சற்று அதிக நேரம் நின்றுவிட்டாள் போல, வெளியே நிழலைக் கவனித்து, வந்து பார்த்த கண்ணன் சீறினான்.

"என்ன? நீ ஏற்பாடு செய்த ஆள் சரியாக ஃபோன் செய்து என்னை மிரட்டுகிறானா என்று அவனையும் வேவு பார்க்கிறாயாக்கும்! பண்ணுகிறான் தாயே, பண்ணுகிறான்! நீ கொடுத்த காசுக்கு



வஞ்சனை பண்ணாமல், அவன் என்னை விரட்டிக் கொண்டேதான் இருக்கிறான்!

"ஆனால், ஒன்று அவனிடம் சொல்லி வை! ஒருவரை இப்படி மிரட்டுவது சட்டப்படி குற்றம்! என்றைக்காவது மாட்டினான் என்றால், அப்புறம் கம்பி எண்ண நேரும். தூண்டிவிட்ட நீயும்தான். திமிரைப் பார்! என் படிப்பைக் கவனித்துக் கொண்டேதான் இருக்கிறானாம். மதிப்பெண் கூடவில்லை என்றால், சும்மா விட மாட்டானாம்!

"என் படிப்பை அவன் என்ன பெரிதாகக் கவனிப்பது? அதுதான் மூட்டி கொடுக்க வீட்டுக்குள்ளேயே ஆள் நீ இருக்கிறாயே! ராட்சசி! இன்னொரு தரம் என் அறை வாசலில் உன்னைப் பார்த்தால்... பபார்த்தால்... வந்து... இங்கே உன்னை பார்த்தால் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!" என்று மிரட்டலாக மொழிந்தவன், சட்டென உள்ளே அறைக் கதவை அழுந்தச் சாத்தித் தாளிட்டான்.

என்ன கொடுமை செய்வான் என்று சொல்லக் கூடத் தெரியாத பிள்ளை! இவனைப் போய் கெடுக்க முயற்சிக்கிறார்களே!

ஆனால், கண்ணனை ஃபோனில் மிரட்டுகிறவனின் குறிக்கோளும் நல்லதுதான். தம்பியை குழியில் விழாமல் காப்பதுதான்.

ஆனால், அது யாராக இருக்கும்?

யோசித்தபடியே அவளது அறைக்குள் சென்றால், பின்னோடு சுந்தரியும் போனாள்.

கேள்வியாய் நோக்கிய மகளிடம் "தம்பி சத்தம் கேட்டதும் வந்து எட்டிப் பார்த்தேன். ஃபோனில் பேசுகிற அந்த ஆள் நல்லதுதான் செய்கிறான். ஆனால், தம்பி உன்னை ரொம்பத் திட்டுகிறானே! இனி மிரட்ட வேண்டாம் என்று சொல்லி விடுகிறாயாம்மா?" என்று பரிவுடன் கேட்டாள்.

என்ன, இந்த அம்மாவும் இப்படித் தப்பாகவே நினைக்கிறார்களே என்று திகைத்தாள் பெண்.

"எனக்கே தெரியாதும்மா. ஆனால், தோன்றாத் துணையாகக் கடவுள் மாதிரி அன்று இரவில் கண்ணனை வரவழைத்ததோடு நில்லாமல் படிக்கும்படியாகவும் விரட்டுகிறாரே அந்த மனிதர் யாராக இருக்கும் என்றுதான் நானும் யோசித்துக் கொண்டு இருக்கிறேன். ஏம்மா, நீங்கள் யாரிடமாவது கண்ணனின் போக்கு பற்றி

வருத்தப்பட்டது உண்டா?” என்று அன்னையிடமே விசாரித்தாள்.

“இல்லையேம்மா. உனக்குத்தான் தெரியுமே, என் நடமாட்டம் எல்லாம் இந்த இரண்டு தெருக்களுக்குள் உள்ள கடை கண்ணிக்கு மட்டும்தானே? நீ யாரிடமாவது ஏதாவது சொல்லியிருப்பாயா?” என்று மகளையே திருப்பிக் கேட்டாள் சுந்தரி.

“ஊகூம். நம் கண்ணனைப் பற்றிக் குறை கூறும் அளவு நான் யாரிடமும் ரொம்பப் பழகியதில்லையே. ஆனால், யாரோ முகமூடி போட்டுக் கொண்டு உதவுகிற அந்த மர்மம் எனக்கு பிடிக்கவில்லை அதனால், அது யார் என்று கண்டுபிடித்தே ஆக வேண்டும்” என்றாள் பெண்.



## அன்பு மனம் மாறியதேன் 8

அந்தத் தோன்றாத் துணையை அறிவது அப்படி ஒன்றும் பிரமாதமான காரியம் அல்ல.

கண்ணனுக்குத் தெரியாமல், அவனது செல்லில் இருந்த புதிய எண்ணை எடுப்பதற்கு மட்டுமே சௌமினி சிரமப்பட்டாள். அதன் பிறகு, அது யார் என்று அறிவது கடினமாக இருக்கவில்லை.

சின்னப் பையன், இந்த வயதில் சரியான வழி காட்ட ஆளில்லாமல் கெட்டுவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் யாரோ கூட, முகம் காட்டாமலே இந்த உதவியைச் செய்துகொண்டு இருக்கலாம்.

ஆனால் விலையற்ற உதவி என்று எதுவுமே கிடையாது என்று தந்தையை இழந்த பின் இந்த சில ஆண்டுகளில் நன்கு உணர்ந்திருந்த சௌமினிக்கு, இந்த இலவச நன்மை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. குறைந்த பட்சமாக நன்றியாவது சொல்ல வேண்டும்தானே?

தம்பியின் செல்ஃபோனில் இருந்து எடுத்த எண்ணுக்கு அவள் நேராக ஃபோன் செய்தால், யாரும் எடுக்கவே இல்லை.

சட்டென அவளுக்கு சந்தேகம் வந்தது. எதிர்முனையில் இருப்பது, முழுக்க அறியாத யாரோ என்றால், அவளிடம் பேசக் கூடாது என்று என்ன விரதம்?

அப்படி ஒரு விரதத்தை கடைபிடிப்பவன், அவன் மட்டும்தானே?



ஆனால், அவன்தான் என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமே!

சற்று யோசித்துவிட்டு சௌமினி வேறு வழியில் முயன்றாள்.

உடனே முயன்றால் சந்தேகம் ஆகும் என்று அப்போதைக்கு அந்த முயற்சியை ஒதுக்கி வைத்துவிட்டு, மற்ற வேலைகளைப் பார்த்தவள், அரை மணி நேரம் கழித்து, வேறு எண்ணிலிருந்து அந்த எண்ணுடன் தொடர்பு கொண்டாள்.

“ஹலோ!” என்ற கேட்ட ஒரு வார்த்தையில் அவளுக்கு உலகம் முழுதும் வண்ணமயமாயிற்று! ஏனெனில் அது அவன் குரல்! தனசீலன்தான். அவளுடைய சீலனேதான் அந்தச் செல்போனில் ‘ஹலோ’ சொன்னவன்.

மேலே எதுவும் பேசாமல் செல்லை அணைத்துவிட்டு, சௌமினி யோசித்தாள்.

நடந்ததைப் பார்க்கும்போது, அவளுடைய தம்பியிடம் தனசீலனுக்கு அக்கறை இருக்கிறது என்பது நிச்சயம்.

அன்று நள்ளிரவில் அவனை திருப்பி வீட்டுக்கு வர வைத்ததென்ன? தொடர்ந்து மிரட்டிப் படிக்க வைப்பதென்ன?

எல்லாமே அதைத்தானே, அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன?

பின்னே அவளிடம் மட்டும் என்ன வெறுப்பு?

இத்தனைக்கும் எதிர்காலம் பற்றியெல்லாம் இருவருமாகச் சேர்ந்து பேசியவர்கள்!

என்ன யோசித்தாலும், அழைத்த நேரம் வந்து நிற்கவில்லை என்பது தவிர, எந்தத் தப்பையும் தான் செய்யவில்லை என்பது சௌமினிக்கு நிச்சயம். அதுவும் மன்னிக்க முடியாதது அல்ல.

ஆனால் அவளோடு பேசவே, தனாவும் அவனுடைய தந்தையும் மறுக்கிறார்கள்!

சரோஜா ஆன்ட்டியோ, அவளைப் பார்த்தாலே மயக்கம் போட்டு விழுகிறார்கள்! அன்னையின் உயிரை மீட்டுக் கொணர்ந்ததாக அவன் பொய் சொல்லத் தேவையில்லை!

சரோஜா ஆன்ட்டி சோர்ந்து, சரிந்ததைத்தான், அவளே கண்ணால் பார்த்தாளே!

பின்னே இந்த விவரம் எப்படி அறிவது?

ஆனால், எப்படியும் இதைத் தெரிந்து கொண்டே ஆக வேண்டும், இல்லாவிட்டால் சௌமினியின் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும்.

எப்படி... என்று தீவிரமாக யோசித்தவள் சட்டென நிமிர்ந்தாள்.

இந்த விவரம் அறிந்த இன்னொரு ஜீவன் இருக்கிறது! கோகிலா ஆன்ட்டி! சரோஜா ஆன்ட்டியுடைய தங்கை! அவளுக்கும் எல்லாம் தெரியும்.

'அக்கா அரை உயிராக வாழ்வது பொறுக்கவில்லையா? அடியோடு ஒழித்துவிட வந்தாயா'என்று கேட்டாளே! நிச்சயமாக, அவளுக்கு முழு விவரமும் தெரிந்திருக்க வேண்டும்!

பிரச்சினை என்னவென்று சௌமினிக்குச் சொல்லக் கூடியவள், அவள் மட்டுமே!

அக்காவிடம் கோகிலா ஆன்ட்டிக்கு மிகுந்த பாசம் உண்டு. அந்தக் குடும்பத்துக்கும் அப்படியே! எனவே, அவளும் ஒன்றும் அவ்வளவு இலகுவாக எல்லாவற்றையும் சொல்லிவிடப் போவதில்லை.

ஆனால், எப்படிச் சொல்ல வைப்பது என்று தனக்குள் ஒரு திட்டமிட்டுக்கொண்டு.

சௌமினி கோகிலாவின் இருப்பிடம் நோக்கிச் சென்றாள்.

கோகிலாவின் குடும்ப வாழ்வு சரியில்லை என்று, வேலை பார்க்கும் அலுவலகம் பக்கமாக, ஒரு வீட்டு மாடியறை ஒன்றில் 'பேயிங் கெஸ்ட்' மாதிரி அவள் தனியேதான் வாழ்ந்தாள். நல்லதோ கெட்டதோ, உறவு நட்பு யார் வீட்டுக்கும் போய் வருவது, தமக்கை குடும்பத்தோடு சேர்ந்துதான்.

ஒருநாள் மாலை, வேலையில் இருந்து திரும்பி வந்து, இறுக்கம் தளர உட்கார்ந்து டீ அருந்திக் கொண்டிருந்த கோகிலா, திடுமெனக் கண்ணெதிரே சௌமினியை காணவும், மிரண்டு போனாள்.

சற்று நேரம் பேந்த விழித்தவள், ஒருவாறு சுரணை வந்து, வேகமாக எழுந்து "ஏஏய்... நீ நீ இங்கே ஏஏன் வந்தாய்? நீநீ வந்து, உடனே போய்விடு!" என்று தடுமாறினாள்.

அமைதியைக் காட்டி, தானாகவே இன்னொரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு கோகிலாவின் எதிரே அமர்ந்தாள் சௌமினி.

அமருமாறு கோகிலாவுக்கு இருக்கையை காட்டிவிட்டு, "நானும் உங்களுடன் உட்கார்ந்து ஊர் வம்பு பேச வரவில்லை, ஆன்ட்டி. அப்போது என்ன நடந்தது என்று சொல்லுங்கள். சுமார் நாலு ஆண்டுகளாகப் பழைய காலத்தில் நாடு கடத்துவது போல, ஊரை



விட்டு ஒதுக்கி வைப்பது போல, என்னை விலக்கி வைத்திருக்கிறார்கள்..." என்று சின்னவள் சொல்லி வரும்போதே, முகம் கடுக்க, "அதன் காரணம் யார் என்று உனக்கே தெரியும்" என்றாள் கோகிலா கோபமாக.

அமைதியைக் கடைப்பிடித்து, "இல்லை தெரியாது" என்றாள் சௌமினி தெளிவாக "அது பற்றி, ஒரு சின்ன ஊகம் கூட எனக்குக் கிடையாது. என்ன யோசித்தும் கண்டுபிடிக்கவும் முடியவில்லை. அதனால் நீங்கள்தான் அது பற்றி எனக்கு சொல்ல வேண்டும். சொல்லுங்கள், ஆன்ட்டி!" என்றாள் வற்புறுத்தலாக.

"ஐயோ, நான் மாட்டேன்!" என்றாள் பெரியவள்.

இதை எதிர்பார்த்து வந்திருந்ததால், "நீங்கள் சொல்லாவிட்டால், உங்கள் அக்காவிடம் போவேன்" என்று தன் அடுத்த ஆயுதத்தை சௌமினி கையில் எடுத்தாள்.

பயந்து போய் "ஐயோ! அதைச் செய்யாதே, அன்றைக்கு உன்னைப் பார்த்ததிலேயே அக்காவுக்குப் படபடப்பு வந்து மருத்துவமனையில் சேர்க்கும்படி ஆயிற்று. இன்னொரு தரம் அக்கா நிச்சயமாய்த் தாங்க மாட்டாள். தயவு பண்ணி பேசாமல் போய்விடு" என்று கோகிலா கெஞ்சத் தொடங்கினாள்.

இளகாத குரலில், "அப்படியானால் நீங்களே சொல்லுங்கள்" என்றாள் சௌமினி.

"சொன்னால், அத்தானும் தனாவும் உன்னை போலவே, என்னையும் வெட்டி விட்டுவிடுவார்கள். தனியாளான எனக்கு அக்காவை விட்டால் யார் இருக்கிறார்கள், சொல்லு?" என்று மற்றவளையே விடை கேட்டாள் கோகிலா.

பாவம்தான் என்று மனதுள் நினைத்தாலும், இளகாத கல் முகத்துடன் சௌமினி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

இவளுக்கு இளகினால், எத்தனை வாழ்வுகள் வீணாகும்? நல்லது நடந்தால், இவளுமே சந்தோஷப்படுகிறவள்தான்.

சிறு அமைதியின் பின் கோகிலாவே தணிந்து வந்து பேசினாள். "இரண்டு நாட்கள் பொறுத்துக் கொள், அதற்குள் நான் மேலே ஏ ஏதாவது செய்ய முடிகிறதா என்று பார்க்கிறேன்" என்றாள் தயக்கத்துடன்.

ஊடுருவுவது போல அவளை நேராகச் சில கணங்கள் பார்த்துவிட்டு, ஒரு துண்டுக் காகிதத்தில் தன் செல்ஃபோன்

எண்ணை எழுதி வைத்துவிட்டு, ஒன்றும் பேசாமலே சௌமினி எழுந்து சென்றாள்.

சித்தி கோகிலா சொன்னதைக் குறுக்கிடாமல் கேட்ட தனசீலனுக்கு அவள் மீது கோபம் வரவில்லை. மாறாக அவன் தன்னைத்தானே தான் நொந்து கொண்டான்.

அன்று ஒரு கணம் யோசித்தது, தப்பாகி போயிற்று.

ஒரு நள்ளிரவில் அவன் அறிந்த குடும்பத்துப் பெண்கள் தனியே கிடந்து தவிக்கிறார்களே என்று மனம் இரங்கினான். ஆனால் அது இப்போது அவனுடைய குடும்பத்துக்கே தீம்பாக உருவெடுத்திருக்கிறது!

அச்சமும் கவலையுமாக உட்கார்ந்திருந்த சிறிய தாயைப் பார்க்கையில் அவனுக்கு பரிதாபமே உண்டாயிற்று. அவன் செய்த தவறுக்கு, இந்த நல்ல பெண்மணி என்ன செய்வாள், பாவம்!

"அச்சோ! என்ன கத்தி, கபடாக்களோடு யாரோ யுத்தத்துக்கு வந்திருப்பது போலத் தெரிகிறதே. இப்படிப் பயப்படுகிறீர்கள்? அந்தப் பெண் சௌமினியை என்னால் சமாளிக்க முடியாதா, என்ன? நாலு வருஷங்களில் நான் எவ்வளவோ வளர்ந்துவிட்டேன், சித்தி. அவளை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். பழசை எண்ணிப் பயம் வேண்டாம்" என்று தேறுதலாகப் பேசினான்.

அக்கா மகனின் நெஞ்சுத்திடம் ஆறுதலைத் தர, கோகிலா மெல்ல முறுவலித்தாள்.

சொல்லப் போனால் விதிப் பயனால் தனி மரமாகிப் போன அவளுக்கும் ஒரே ஆதாரம் அவன்தானே?

ஓர் இக்கட்டான சமயத்தில் இவனும் உடைந்து அக்காவுடைய குடும்பம் அடியோடு முழுகிப் போய்விடுமோ என்று அஞ்சிய தருணம் நினைவு வர, கண் முன்னே நிமிர்ந்து நிற்கும் தனசீலனைப் பார்க்கையில் அவளுக்குப் பெருமையாக இருந்தது.

ஆனால், இருந்திருந்து இந்த நேரத்தில், அந்த நாசகாரி... இல்லையில்லை. அவளை நாசகாரி என்றால் அக்காவுக்குப் பிடிக்காது, அந்த சௌமினி வந்து நிற்க வேண்டுமா என்று உள்ளூர வருத்தத்துடன் எண்ணினாள் அவள்.

தாய்க்கு நிகரான பாசமுள்ள சிறியதாயின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, நிகழ்காலத்துக்குக் கொண்டுவந்தான் பிள்ளை.

"ஒன்றும் கவலை வேண்டாம், சித்தி. அவளை எப்படி விலக்குவது என்று எனக்குத் தெரியும். அவளை நாளை மாலை ஐந்து மணிக்கு சுதந்திரதினப் பூங்கா வாயிலில் நிற்கச் சொல்லுங்கள். நான் போய்ப் பேசுகிறேன். அங்கே நான் வருவேன் என்பதற்கு மேல் எதுவும் சொல்ல வேண்டாம், அவளது எண் இருக்கிறதல்லவா?" என்று கேட்டான் பிள்ளை.

"ம் தந்துவிட்டுத்தான் போனாள்" என்று சொல்லும்போதே, 'இல்லை' என்று சொல்லியிருக்க வேண்டுமோ என்று கோகிலாவுக்குத் தோன்றியது.

இந்த எண் என்று அவன் கொடுத்திருந்தால், சௌமினியின் எண்ணை தனசீலன் இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறான் என்று தெரிந்திருக்கும். அதன் பொருள், தகுதியற்ற அவளை, அவன் மறக்கவில்லை என்பதுதானே?

இப்போது, இவனுக்காகக் கடவுளிடம் என்ன வேண்டுவது?

மாலை ஐந்து மணிக்கு சுதந்திரப் பூங்காவுக்குச் செல்வது, சௌமினிக்கும் எளிதாக இருக்கவில்லை.

முக்கியமான காரணம், அவளுக்கு சம்பளம் கொடுக்கும் எழுத்தாளர் ராஜகெம்பீரன்.

என்ன அடிக்கடி லீவு போட்டாகிறது? இங்கே மாதாமாதம் சம்பளம் வாங்குவது நினைவில் இருக்கிறதா இல்லையா? இந்த மாதம் கட்ட வேண்டிய மின்சார பில், தண்ணீர், சொத்து வரிகள் ஒன்றையும் கட்டவில்லை! கொஞ்ச நாட்களாகவே தீபிகாவுக்கு பாடம் செய்து கொடுக்கவில்லை, இதெல்லாம் செய்யாமல், கண்ட கழுதைகளோடு சேர்ந்து ஊரைச் சுற்றுகிறதுகளுக்கு ஓசியில் சம்பளம் கொடுப்பதற்கு அவர் ஒன்றும் முட்டாள் அல்ல!

இத்தனை பாட்டுக்களும் ஏற்ற இறக்கங்களுடன், பதில் சொல்ல வாய்ப்பே கொடுக்காமல் பாடப்பட்டன.

பட்டியலிட்டு, அவர் சொன்ன வேலைகளில், அவர் தரும் ஊதியத்துக்காக அதிகாரப்பூர்வமாக அவர் குறிப்பிட்ட வேலைகள் என்னென்ன என்று கேட்டால், இவர் முகத்தை எங்கே கொண்டு வைத்துக் கொள்வார் என்று எண்ணியபோதும், சௌமினி அமைதி காத்தாள்.

நியாயமற்றுப் பேசும் இந்த மனிதரிடம் வாக்குவாதம் செய்ய அவளுக்கு மனமில்லை. முக்கியமாக இந்தத் தருணத்தில்.

தன்சீலன் அவளை வரச் சொல்லியிருக்கிறான். அவளது

மிரட்டலுக்குப் பயந்துதான், என்றாலும் தம்பிக்கு அவன் தொடர்ந்து உதவும் விதத்தினால், அவளுக்கு ஒரு நம்பிக்கை வந்திருந்தது.

இடையில் நேர்ந்த பிரச்சினை எதுவானாலும், பேசித் தீர்க்க முடியாதது என்ன இருக்கிறது?

ஆனால், அவன் இவ்வளவு கோபப்படுவதனால், அதன் காரணமும் பெரிதாகத்தான் இருக்கும். அவளது மூளைத்திறன் முழுவதையும் பயன்படுத்தினால் தவிரப் பிரச்சினை தீராது.

ஒருமுகப்படுத்த வேண்டிய கவனத்தை கலைத்து ராஜகெம்பீரனோடு பொருளற்ற வாக்குவாதத்தில் ஈடுபட அவளுக்கு விருப்பம் இல்லை.

எனவே, ராஜகெம்பீரன் ஒரு கட்டத்தில் மூச்சைச் சீர் செய்வதற்காகப் பேச்சை நிறுத்தியபோது, "இன்று நான் கட்டாயமாகப் போக வேண்டியிருக்கிறது, சார்! அங்கே போய்விட்டு வந்து விடுகிறேன். அதன்பிறகு என் வேலைகள் என்னென்ன என்பது பற்றிப் பேசுவோம்" என்று மட்டும் சொன்னவள் அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை.

அன்று போலத் திரும்பி வந்ததும் பட்டுக்கொள்ள வேண்டியதுதான். இனி வேலை இல்லை, வெளியே போ என்றாலும் போக வேண்டியதே. பரசுராமன் சார் சொன்னதில் பாதியளவு நிஜமானாலும், வீட்டு நிதி நிலைமை மோசமாகி விடாது.

எதற்காகவும், தனசீலனைச் சந்திக்கும் இந்த வாய்ப்பை, அவள் விட்டுவிட முடியாது!

பூங்காவில் வாசல் என்றால், சரியாக அதன் வாயிலிலேயே சௌமினி நின்றாள், அவன் சொன்ன ஐந்து மணிக்கு!

தனசீலனும் அதே போல, அவளை வினாடி நேரம் மாறாமல், அதே ஐந்து மணிக்குப் பூங்காவின் வாயில் முன்னே காரை நிறுத்தினான்.

காரினுள்ளே அவனைப் பார்த்துவிட்டு, அவள் அருகே வரவும், கார்க் கதவை அவன் திறந்துவிட்டான்.

காரினுள் ஏறும்போது அவளுக்கு ஏதோ உறுத்தியது. இந்தக் கார் இந்தக் காரில் என்ன இருக்கிறது? இதை அவள் பார்த்திருக்கவே வாய்ப்பில்லை.

வேறு யோசனை பண்ணிக் கொண்டிருக்க வாய்ப்பின்றி, தனசீலன் பேசத் தொடங்கினான்.



அன்று செல்ஃபோனில் பேசிய அதே கடுமை நிறைந்த குரல்.

என்ன? ஏன் இப்படித் தொல்லை செய்கிறாள்? அன்று அப்படி வெட்டிக்கொண்டு போனாள். இப்போது பணம் வந்துவிட்டது என்று தெரிந்ததில் இருந்து, அவனை விட மனம் வரவில்லை போல? அவனது பணம் இப்போது அவளைக் காந்தமாக இழுக்கிறதாக்கும்?

ஆனால், என்னதான் அவள் ஒட்டி ஒட்டி வந்தாலும், அவனோ அவனுடைய குடும்பமோ, இனி ஒரு வினாடியேனும் அவளை நம்புவார்களா? வீண் முயற்சி செய்து அவனது நேரத்தை விரயமாக்காமல் முன்போலவே விலகிப் போய்விடுவது, அவளுக்குமே நல்லது.

இந்த ஒட்டல் முயற்சியை வேறு எந்தப் பணக்காரனிடமேனும் முயன்றால், பாம்புபோல அவளுக்கு இருக்கும் அழகுக்கு, அவள் வெற்றிகூட அடையலாம்.

அதைவிட்டு, அவன் பின்னே அலைவதை நிறுத்தி, அவனைத் தொல்லை செய்யாமல் ஒழுங்காகத் தொழில் செய்ய விடுமாறு சொல்லிவிட்டுப் போகவே இப்போது வந்தான்.

கடுமையான குரலில் ஒரே சீராகச் சொல்லி முடித்துவிட்டு "எல்லாம் ஒரு வழியாகப் புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். சொல்லு, உன்னை எங்கே இறக்கி விடட்டும்?" என்று கேட்டான் தனா.

ஓரளவு எதிர்பார்த்தே வந்தாலும், அவனது பேச்சும் குரலும் சௌமினியைப் பாதிக்கவே செய்தன.

ஆனால் இந்த வலிக்காக ஒதுங்கிப் போனால், இருவரின் வாழ்வல்லவா வீணாகும்?

எனவே அமைதியான குரலிலேயே "நீங்கள் பணம் சம்பாதித்து இருப்பது எனக்கு சந்தோஷம்தான் தனா. ஆனால், அந்தப் பணத்துக்காக உங்களை ஒட்டிக்கொள்ள விரும்பி, நான் உங்களிடம் பேச முயற்சிக்கவில்லை. ஆனால், இப்போது எனக்கு ஓர் உண்மை தெரிய வேண்டும். இந்த நாலு ஆண்டுகளாக, நீங்கள் எல்லோருமே என்னை ஏன் இப்படி ஒதுக்குகிறீர்கள்? இந்தக் கேள்வியின் பதிலைச் சொல்லிவிட்டீர்கள் என்றால், அதற்கு மேல் நான் ஒரு கணம் கூடத் தேவையற்று, இங்கே நிற்க மாட்டேன். இப்போது, அதைச் சொல்லுகிறீர்களா?" என்று கேட்டாள் சௌமினி.

ஸ்டியரிங் வீல் மேல் இருந்த தனசீலனின் கைகள் இறுகி

வெளுப்பதைத் திகிலுடன் பார்த்தாள் சௌமினி.

இத்தனை காலம் கழித்தும், இவ்வளவு ஆத்திரம் வருமானால், ஏதோ பெரிய விஷயமாகத்தான் இருக்கும். அது என்னவாக இருக்கும்?

தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, தனசீலன் பேசினான் "உனக்குத் தைரியம் அதிகம்தான்! செய்வதையும் செய்துவிட்டு, இப்படிக் கேட்கிறாயே! நான் அறிந்த சௌமினிக்கு இப்படி நடிக்கத் தெரியாது. ஆனால், இப்படி குரூரமானவளும் கிடையாது"

கிடையவே கிடையாதுதான், ஆனால், தனா அப்படி நம்பித்தானே பேசுகிறான்?

வயிற்றுக்குள் பிசைந்ததைக் கட்டுப்படுத்திக் கொண்டு "இதோ பாருங்கள் தனா. நான் என்னவோ செய்து விட்டதாக, உங்கள் குடும்பத்தில் எல்லோரும் சொல்லுகிறீர்களே, அது என்ன என்று எனக்கு சத்தியமாக, இந்த வினாடி வரை தெரியாது. அது மட்டுமல்ல, நீங்கள் எல்லோரும் இப்படி வெறுக்கும்படியாக நான் எதுவுமே பண்ணவில்லை என்பதும் எனக்கு நிச்சயமே! அதனால், இதுவரை எனக்கு ஒன்றுமே புரியாத நிலைதான். இன்னோரன்ன வார்த்தைகளால், நீங்கள் வாய்விட்டு சொன்னால்தான் எனக்கும் தெரியும்" என்றாள் சௌமினி முடிந்தவரை அமைதியாக.

வெறுப்புடன் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, சாலையில் கவனத்தை திருப்பினான் தனசீலன்.

ஒரு நெடுமூச்சின் பின், அவன் பேசத் தொடங்கினான். "வார்த்தைகளை மாற்றிப் பேசினாலும், நீ முதலில் சொன்னதையேதான் கடைசி வரை சொல்லப் போகிறாய் என்று தெளிவாகத் தெரிகிறது சரி, இதை நீயே கற்பனை செய்து பார். கீழே கீழே இறங்கி, மீள முடியாதோ என்று கலங்குகிற அளவு கடனை வளர்த்துக் கொண்டிருக்கும் தொழில், அதன் விளைவு பற்றிய துன்பங்களில் சும்மாவே நாங்கள் தவித்துக் கொண்டிருந்தோம்.

"இந்தச் சமயத்தில் ஆறுதலுக்கு உன்னைத் தேடினால், நீ சந்திக்க வருவதே இல்லை. இந்த நேரத்தில் துணையாக இருக்க வேண்டியவளைப் பார்க்க கூட முடியவில்லையே என்கிற வருத்தம் மனதைத் தாக்க ஆத்திரப்பட்டு கோபமாகப் பேசிவிட்டு வருகிறேன். நெஞ்சை காயப்படுத்தும் வார்த்தைகள்தான். இப்படி பேசிவிட்டேனே என்ற வருத்தம் ஒருபுறம், மாறிவிட்டாயோ என்ற



அச்சம் கலந்த வேதனை வேறு மனதைக் கலக்குகிறது.

"மனதில் பெரும் கவலையோடு உட்கார்ந்திருக்கும்போது, போலீஸ்காரர்கள் அதிகாரமாகக் கதவைத் தட்டி, அதிகாரி அழைத்து வரச் சொன்னதாக என்னை போலீஸ் ஜீப்பில் கூட்டிப் போகிறார்கள். பெருங்குரலில் அவர்கள் சத்தமாகக் கூப்பிட்ட விதத்தில் அக்கம் பக்கத்தவர் கூடவே தொடங்கிவிட்டார்கள். அதுவே முழு உடலையும் கூசிக் குறுக்கிவிட்டது. யாரையும் தலையை நிமிர்த்திப் பார்க்க முடியாமல் குன்றலோடு அங்கே போனால், அங்கே வெறும் ஜட்டியோடு ஒருவனைக் கதறக் கதற அடித்துக் கொண்டிருக்கிறார்கள், ரத்தக் காயங்கள்.

"சற்று நேரம் அதைப் பார்க்க வைத்துவிட்டு, இன்ஸ்பெக்டர் என்னைக் கூப்பிட்டார். உனக்கும் இந்த மரியாதை தேவையா என்று கேட்டார். நான் ஒரு தப்பும் செய்யவில்லையே என்றால் காதிலேயே வாங்காமல், அவர் பேசிக்கொண்டே போனார். போலீஸ்கார அடி பற்றிய விளக்கம் அதுதான் கண் முன்னாலேயே பார்த்தேனே! இதை என்னிடம் ஏன் சொல்கிறார்? தப்பான ஆளான என்னை அழைத்து வந்துவிட்டாரா என்று குழப்பம். எடுத்துச் சொல்ல முயன்றால், பக்கத்தில் நின்ற போலீஸ்காரர் வாயை மூடிக்கொண்டு அய்யா சொல்வதைக் கவனி என்கிறார். கடைசியாக, இந்த அடி வேண்டாம் என்றால் அந்தப் பெண் பக்கம் போகக்கூடாது என்கிறார் அந்த அதிகாரி. எனக்கு எப்படி இருந்திருக்கும்? யோசித்துப்பார்.

"அந்தப் பெண் என்றால் நீயா? கடுமையாகப் பேசினேன்தான். ஆனால், இந்த அளவுக்குப் போவாயா என்று நம்ப முடியாத கலக்கம்.

"நான் ஒரு தப்பும் செய்யவில்லை என்றால், ஒரு 'உச்'சுடன் என் பேச்சை அவர் அலட்சியமாக ஒதுக்கிவிட்டார். நீ ஒன்றும் பண்ணவில்லை என்றால், சும்மாவா அந்தப் பெண்ணிடமிருந்து புகார் வந்திருக்கிறது என்று என்னிடம் கேட்டார்! அப்போதும் நம்ப மாட்டாமல், இருக்காது சார், எந்தப் பெண்ணும் அப்படிப் புகார் கொடுக்க வாய்ப்பே கிடையாது என்றேன். அவர் உன் பெயரைச் சொல்லி, என் முகவரியையும் நீயே கொடுத்ததாகச் சொன்னார். எனக்கு உடம்பெல்லாம் ஆடிப்போய்விட்டது. குறுக்கிடாதே! ப்ளீஸ்! இன்னும் நான் முடிக்கவில்லை. பேசியபடியே லட்டியை எடுத்துக்கொண்டு அவர் அருகே வரவும் , எனக்கு... உண்மையைச் சொல்லுகிறேன், அன்று கைகால் உதறிவிட்டது. கண் முன்னே

பார்த்தது போல அடி படுவதும், அத்தோடு வீடு செல்வதும் எவ்வளவு கேவலம்?

"சும்மாவே அம்மா நெஞ்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்த நினைவு! இன்னும் அடி பட்ட காயங்களோடு என்னைப் பார்த்தால், அவர்கள் உயிர் நிலைக்குமா?

"இப்படிப் பொய் புகார் கொடுக்கிற உன்னிடமா ஆசை வைத்தேன் என்று... பொறு என்றேனே! உன்னை ஏன் வெறுக்கிறோம் என்ற விவரம்தானே கேட்டாய்? ஒன்று விடாமல் நான் சொல்லி முடித்து விடுகிறேன். அதன் பிறகும் வாய் திறந்து உன்னால் பேச முடிந்தால், அப்போது சொல்லு உன் கதையை.

"அந்த ஆய்வாளர் கைத்தடியை எடுத்துக்கொண்டு அருகில் வந்த அந்த வினாடியில் எனக்கு உண்மை புரிந்தது. எங்கள் தொழில் படுத்ததில் உன் சாயம் வெளுத்துவிட்டது. ஜாடைமாடையாக நீ ஒதுங்க முயன்றது எனக்குப் புரியாததால், விலகு என்று உச்சந்தலையில் அடித்துச் சொல்கிறாய்!

"அந்த வினாடியில் மனதில் இருந்து உன்னைத் தூக்கி எறிந்துவிட்டு, அந்த அதிகாரியிடமும் அதையே சொல்லிவிட்டு வீட்டுக்கு ஓடி வந்தேன். ஒருவாறு அதற்குள்ளாகவே அம்மா மயக்கம், தெளிந்திருந்தார்கள். ஆனால் வீட்டில் அத்தனை பேரும் கூசிக் குறுகிப் போனோம். வீட்டை கூட, அதிகம் கேட்டு பேசிக் கொண்டிருந்தவர்களிடம் அவர் சொன்ன விலைக்கே விற்றுவிட்டு, அங்கிருந்து ஓடிப் போனோம். தொழில் இடத்திலும் தலை காட்ட மனமின்றி, அங்கிருந்தும் விலகிப் போனோம். இன்னமும் அம்மாவின் உடம்பு முழுமையாகத் தேறவே இல்லை.

"இத்தனை கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் மூலமும் முழுவதுமான காரணம் நீதானே? இதற்கு நீ என்ன சொல்கிறாய்?" என்ற கேள்வியோடு முடித்தான் தனசீலன்.

சௌமினிக்கும் திகைப்பாகத்தான் இருந்தது.

நாலு ஆண்டுகளுக்கு முன்பாக தனசீலன் நியாயமற்றுப் பழி பேசியது அவளுக்கு மிகுந்த வேதனையாகத்தான் இருந்தது. அவள் இயல்புக்கு வரவே பல நாட்கள் ஆயின.

ஆனால், தனா சொன்னதெல்லாம் நடக்க, அவள் காரணமே இல்லையே! ஏதோ முத்தரப்பு காதல் இருந்து, அந்த இன்னொருத்தன் அவள் அறியாமல் ஏதேனும் செய்திருப்பானோ



என்று யோசிக்கவும் வழியின்றி, அவள் வாழ்வில் வேறு யாருமே கிடையாதே!

உண்மை இதுவாயிருக்க, தனாவின் கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்ல முடியும்?

"கஷ்டம்தான், தனா. கேட்கவே வேதனையாகத்தான் இருக்கிறது. ஆனால் எனக்கும் இந்தப் போலீஸ் பிரச்சினைக்கும் தொடர்பு கிடையாது" என்று உண்மையைச் சொன்னாள் அவள்.

அவ்வளவு நேரமும் ஒரு கட்டுப்பாட்டுடன் பேசிக் கொண்டிருந்த தனசீலன் சட்டெனச் சினந்து சீறினான் "திரும்பவும்... அப்படிச் சொன்னால் ஓங்கி அறைய வேண்டும் போல வருகிறது. பெண்ணை அடிப்பது தவறு என்று கைகளை இறுக்கிப் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். மேலேமேலே பேசி என்னைப் பொறுமை இழக்கப் பண்ணாதே!" என்றான் ஆத்திரத்துடன்.

"பொறுமையிழந்து நீங்கள் என்னை அடித்தாலுமே, நான் இதைத்தான் சொல்ல முடியும். எந்தப் போலீசிடமும் நான் உங்களைப் பற்றி புகார் பண்ணவில்லை, இது சத்தியம்!" என்றாள் அவளும் உறுதியான குரலில்.

நான்காண்டு முதிர்ச்சி அவளுக்கும் இருக்கும்தானே?

ஆனால் "பொய்ச் சத்தியம் செய்யவும் பழகிவிட்டாய் போல!" என்றான் தனசீலன் அருவருப்புடன்.

"உண்மையை வலியுறுத்த எண்ணி சத்தியம் என்றேன். ஆனால் நீங்கள் இப்படிச் சொன்னால் என்ன செய்வது?" என்றாள் அவள் பதிலுக்கு

சற்று நேரம் இருவருமே பேசவில்லை.

தீவிரமாக யோசித்துவிட்டு, "எந்தக் காவல் நிலையம்? அங்கே நான் கொடுத்தாக நீங்கள் சொல்லுகிற புகார், ஃபைலில் இருக்கும் அல்லவா?" என்றாள் சௌமினி.

மீண்டும் ஒரு பார்வையை அவள் மீது செலுத்திவிட்டு, "அவசரப்பட்டுப் பேசாதே!" என்று எச்சரித்தான் தனா. "சரி பார்க்க உன்னோடு வர மாட்டேன் என்று நினைத்தாயா? ஆனால், அங்கே உன் புகார் மட்டும் இருந்தால், நிச்சயமாக கைகால் உடையாமல் வீடு திரும்ப மாட்டாய், நினைவிருக்கட்டும்" என்றான் மிரட்டலாக.

"பரவாயில்லை போவோம்" என்றாள் அவளும் திடமாகவே.

மடியில் கனம் இருந்தால்தானே, வழியில் பயம்? அவளிடம்தான்

உண்மை இருக்கிறதே! பிறகென்ன?

ஆனால், உண்மை நிரூபிப்பது அப்படி ஒன்றும் எளிதல்ல என்று அங்கே போய்த்தான், அவள் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

## அன்பு மனம் மாறியதேன் 9

தனசீலனும் செளமினியும் வளர்ந்த அவர்களது பழைய வீட்டுப் பகுதிக்கு உரிய காவல் நிலையம்தான்.

நாலு ஆண்டுகளுக்கு முன்னராக அங்கே இருந்த பலபேர் வேலை உயர்விலோ, இட மாற்றலிலோ அங்கிருந்து சென்றிருந்தார்கள். மற்றவர்கள் வேலை நிமித்தம் ரோந்துப் பணிக்காகப் போயிருந்தார்கள்.

அப்போது அந்த நிலையத்தில் எழுத்தரும் இரண்டு காவலர்களும் மட்டுமே இருந்தார்கள்.

இளம் வயதினராக இருவர் வரவும் சற்று உயிர்ப்புற்று, "என்ன விஷயம்?" என்று ஆர்வத்துடன் விசாரித்தார்கள்.

அவர்கள் வந்த வேலை என்னவென்று தெரிந்ததும் உற்சாகம் மறைய "அதெல்லாம் பழைய ஃபைல்ங்க. சும்மாக் கேட்கிறவங்க கிட்டே எல்லாம் காட்ட முடியாது" என்று முடித்து விட்டார்கள்.

வேறு வழியின்றி இருவரும் வெளியே நடந்தார்கள்.

தனசீலனின் முகம் கனன்று சிவந்திருந்தது.

செளமினியைப் பார்த்து "ஆக, இந்தத் தைரியத்தில்தான், என்னை இங்கே இழுத்து வந்தாயா?"என்று காட்டமாகக் கேட்டான்.

"இந்தப் பதிலை நானும் எதிர்பார்க்கவில்லை" என்று அவள் சொன்னதை, அவன் கேட்டதாகவே காட்டவில்லை.

கோபமும் வெறுப்புமாகத் தொடர்ந்து பேசினான். "இந்தக் காவல் நிலையுத்துக்குள் வரும்போது, என் உடல் எப்படிக் கூசியது தெரியுமா? பழைய ஆட்கள் இருப்பார்களோ? என்னை அடையாளம் கண்டு ஏதாவது மட்டம் தட்டிப் பேசுவார்களோ என்று தவிப்பு. ஆனால் அதையும் அடக்கிக்கொண்டு உன்னோடு வந்தேன். காரணம், நூற்றில் ஒரு வாய்ப்பாக, ஒருவேளை நீ மெய்யாக இருப்பாயோ என்கிற பேதமைதான். ஆனால் என் தலை உச்சியில் ஆணிகள் நிறைய அறைய வேண்டியிருக்கிறது!" என்றான் கசப்புடன்.



கார் அருகே நெருங்கியபோது "ஒரு நிமிஷம்" என்று செளமினி காவல் நிலையத்துக்குள் ஓடிச் சென்றாள்.

"என்ன? செளமினி, இன்னும் என்ன?" என்று அவனும் மனமற்றுப் பின் தொடர்ந்து போனான்.

எத்தனையோ 'அண்ணா'ப் போட்டுக் கெஞ்சி, டீக்காசு என்று ஒரு தொகை கொடுத்து ஃபைல்களைப் பிரித்து தேட அனுமதி கேட்டாள்.

அவனும் சேர்ந்து தேடினான்.

தனசீலன் குறிப்பிட்டுச் சொன்ன மாதம் மட்டுமின்றி, அந்த மாதத்துக்கு முன்னும் பின்னுமாகப் பல மாதங்களின் ஃபைல்களில், துண்டு பேப்பர் விடாமல் தேடினார்கள். முழுக்க அவனது மேற்பார்வையில்.

தன்னைத் தனா நம்பவில்லையே என்று செளமினிக்கு வருத்தமே என்றாலும், அவன் எவ்வளவு கவனமாக ஆராய்ந்தும், அவள் கொடுத்ததாக எந்தப் புகாரும் அங்கே ஃபைல் பண்ணப் படவில்லை என்று அறியவும் மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் "இல்லை, பாருங்கள்!" என்று அவள் புன்னகையோடு சொல்லும்போதே "சில சமயம் பிராது எழுதிக் கொடுக்காமலே விசாரிக்கிறதும் உண்டும்மா" என்று அவள் வயிற்றில் புளியைக் கரைத்தார் எழுத்தர்!

"அப்படிக் கூடச் செய்வார்களா? அதுபற்றி இன்னும் கொஞ்சம் விவரம் சொல்ல முடியுமா?" என்று பாக்கெட்டில் கையை விட்டான் தனசீலன்.

"சொல்றதுக்கென்னங்க? கொஞ்சம் நல்ல மாதிரி அதிகாரிங்க, பொண்ணு பேர் அசிங்கப்பட்டு விடக்கூடாதுன்னு, எழுத்து மூலியமா எதுவும் இல்லாதப் பார்த்துக்கிடறது உண்டு. அதேபோல, நேரடியாகத் தன் பேர் வரக் கூடாது என்று நினைக்கிறவங்க, அடுத்த ஏரியா அதிகாரிகிட்டே சொல்லிக்கூட உதைக்கச் சொல்லுவாங்க. அதற்கெல்லாம் ஒரு ருசுவும் கிடையாதுங்க."

அவர் சொன்ன இரண்டுமே, செளமினிக்கு எதிரானவையே, மீள வழியின்றி அவளைக் குற்றவாளியாக்கின.

ஏக்கத்துடன் "தனா..." என்று அவள் தொடங்கவும், தனசீலன் கையெடுத்துக் கும்பிட்டான்.

"ப்ளீஸ், விட்டுவிடு. இதற்கு மேலேனும் எங்கள் குடும்பத்தை

நிம்மதியாக வாழ விட்டுவிட்டு விலகிப் போய்விடு" என்று கேட்டான்.

விலகிப் போனால் நிம்மதி எப்படி வரும்? இந்த நாலு ஆண்டு காலமும் நிம்மதியாகவா இருந்தார்கள்?

எந்நேரமும் நெஞ்சுக்குள்ளே ஒரு குறை! சாதாரணமாக இருப்பது போலத் தோன்றினாலும், கண்ணில்படும் ஒரு சின்னத் தோற்றத்திலேயே வினாடிக்குள் தாக்கும் வலி அப்படியே சுருள வைத்துவிடுமே. மற்றவர் அறியாமல் அதை மறைப்பதற்கு என்ன பாடு பட நேரும்!

காலம் முழுதும் அதை அனுபவிக்க வேண்டுமா?

"எப்படி விலகுவது, தனா? நம் அன்பு அப்படியே இருக்கும்போது"

"அறைந்து பல்லைக் கழட்டிவிடுவேன்" என்று சீறினான் தனசீலன் "நம் அன்பாவது, மண்ணாங்கட்டியாவது? அதற்கு நான் முழுக்குப் போட்டு நாலு ஆண்டுகள் முடிந்து போயின. அதை முதலில் தெரிந்துகொள்" என்றான் உதாசீனமாக.

ஒவ்வொரு வார்த்தையுமே வலிக்க விழுந்த அடிகள்தான்.

ஆனால் தனசீலனை நேரில் பார்த்து காவல் நிலையம் வரை அவனும் வந்து தேடியபின் அத்துடன் விட்டுவிட அவளுக்கு மனமில்லை, முடியவில்லை.

போராடாமல் என்ன கிடைக்கும்?

என்ன, என்ன என்று தேடியவளுக்கு தம்பி கண்ணனுக்குத் தனசீலன் செய்துவரும் உதவிகள் நினைவு வந்தன.

சும்மாவா, இதையெல்லாம் செய்வான். அன்று நள்ளிரவு பார்ட்டியில் இருந்து மீட்டு வரவழைத்து, படி படி என்று விரட்டி...

அதற்குள்ளாகக் காரில் ஏறி, அவளுக்குக் கதவைத் திறந்து விட்டிருந்தான் தனசீலன். "ஏறிக் கொண்டாய் என்றால், பூங்காவிலேயே கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன். தேவையில்லை என்றால்.." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவசரமாகக் காரில் ஏறி அமர்ந்தாள் அவள்.

இங்கேயே பிரிவதா? கடவுளே! அவள் இன்னும் பேச வேண்டுமே! ஏதாவது...

கார் ஓடத் தொடங்கவும் "அ... அப்படி இருந்தால், அதாவது



நீங்கள் சொன்ன மாதிரி அன்பு இல்லை என்றால், என் தம்பிக்கு இப்படி உதவி செய்வீர்களா? படிப்பு நடவடிக்கை என்று அவனது முன்னேற்றத்தில் அக்கறை காட்டத்தானே செய்கிறீர்கள்? அது, எதற்காகவாம்?" என்று தனசீலனை மடக்க முயன்றாள்.

ஆனால், அவன் வேறு கூறினான். "ஏன்? உன் மேல் ஆசை என்றால்தான் கண்ணனுக்கு உதவி செய்ய வேண்டுமா? அவன் தளர்நடை நடக்கிற காலத்தில் இருந்து அவனை எனக்குத் தெரியும். தந்தையை இழந்தவன் இந்த வயதில் கண்டிப்பும், கவனமுமாக வளர்க்க ஆள் இல்லாமல் அவன் கெட்டுப் போகிறானே என்று எனக்கு மனது உறுத்தாதா? ரொம்பத் தெரிந்த ஒரு பையனுக்கு உதவ, உன்னிடம் நேசம் இருக்க வேண்டியது என்ன கட்டாயம்?" என்று மறுபடியும் அடித்தான் அவன்.

அவன் பேசிய தினுசில், அப்படியும் இருக்கலாமோ என்று தோன்றவும், சௌமினியின் நெஞ்சக்கூடு, அப்படியே காலியாகிப் போய்விட்ட உணர்வு!

ஐயோ! இந்த ஒன்றை வைத்து, என்னென்ன கோட்டை கட்டிவிட்டாள்!

ஆனால், அவன் சொல்லுவதும் சரிதானே? ஏன்? இப்போது சரோஜா ஆன்ட்டிக்கு ஆபத்தாகிவிடக் கூடாது என்று, இவன் மேல் உள்ள நேசத்தால் மட்டும்தானா நினைக்கிறாள்? ஆன்ட்டி மேல் உள்ள அன்பினாலும்தானே? அதே போல கண்ணனிடம் தனாவுக்கும் பாசம் இருக்கலாம்தான். பக்கத்து வீடு, பாதி நேரம் அவர்கள் வீட்டில்தான் கண்ணன் இருப்பான்.

முழுதாக நம்பிக்கை இழந்து சோரும்போதே, அப்படி அவளை அடியோடு வெறுத்திருந்தால், அவள் கொடுத்த புகார் பற்றி சரிபார்க்க அவளோடு வந்திருக்க மாட்டானே என்ற ஓர் எண்ணம் தோன்றி, நம்பிக்கைப் பொறி, அணைய விடாமல் காத்தது.

இறுகக் கோத்திருந்த கைகளை விட்டுப் பார்வையை உயர்த்தினால், முன்புறக் கண்ணாடி வழியே வெளியே பானெட்டின் மேல் பதித்திருந்த உலோகப் பறவை பளபளவென்று தெரிந்தது. இந்தப் பறவை... இதை அவள் பார்த்திருக்கிறாள்.

எங்கே?... எங்கே?.. ஏனோ இப்போது இது மிக முக்கியமாக அவளுக்குத் தோன்றியது. எங்கேயாக இருக்கக்கூடும்?

கரெக்ட்! அன்று கண்ணன் வரத் தாமதம் ஆனபோது,

அன்னையோடு வெளியே நின்று யார் போய்த் தேடுவது என்று அச்சமும் கலக்கமுமாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்த சமயம் சற்றுத் தள்ளி நின்ற காரின் முகப்பில், தூரத்து விளக்கொளியில் பளிச்சிட்டது இந்தப் பறவைதான். சட்டென அவளது சோர்ந்த உடலில் ஒரு நிமிர்வு வந்தது.

"ஒத்துக் கொள்ளுகிறேன்" என்றாள் மொட்டையாக.

அவன் லேசாகத் திரும்பிப் பார்க்கவும், அவளே தொடர்ந்து "நீங்கள் சொல்வது சரிதான். ஒருவரிடம் காதல் இல்லாமலே கூட, அவரது குடும்பத்தினரிடம் அன்பு வைக்க முடியும். இப்போது சரோஜா ஆன்டியை நேரில் போய்ப் பார்த்து அவர்களது ஆரோக்கியத்தை கெடுத்து விடக்கூடாது என்று, நான் கோகிலா ஆன்ட்டியிடம் விசாரிக்கப் போகவில்லையா?" என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றிவிட்டு மேலும் தொடர்ந்தாள்.

"அதுபோல, கண்ணனின் குணமோ படிப்போ கெட்டுவிடக்கூடாது என்று நீங்களும் செயல்படலாம். செயல் பட்டிருக்கலாம்தான். அது உலக இயல்புதான். ஆனால், அவனது பிரச்சினை பற்றி, உங்களுக்குத் தெரிந்தது எப்போது? சொல்லுங்கள் சார், எப்போது தெரிந்தது? அன்று நள்ளிரவில்தானே, அதுவரை இந்த அன்பு எங்கே போயிருந்தது?" என்று சற்று கிண்டலாகவே கேட்டாள் சௌமினி.

அவளது தொனி மாறவும், விழியிடுக்கிப் பார்த்தான் அவன். "எப்படித் தெரிந்தது? கார் நம்பரா? அதைக் கவனிக்கிற நிலையில், அப்போது நீ இல்லை என்று எண்ணினேனே"

"இல்லைதான்" என்று முகப்புப் பறவையைக் காட்டினாள் சௌமினி. "அது கண்ணில் பட்ட நினைவு. இன்று காரில் ஏறும்போதே உறுத்தியது. ஆனால் என் கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லையே!"

கீழுதட்டைப் பற்களால் அழுத்தியபடி சில கணங்கள் பேசாதிருந்துவிட்டு, அவனும் உண்மையைச் சொன்னான் "அன்று மருத்துவமனையில் அம்மாவைப் பார்த்துவிட்டு கொலை வெறியோடு... உன்னைக் குத்திக் கிழிக்கும் கோபத்துடன்தான் வந்தேன். ஆனால் என் மடத்தனம், நள்ளிரவில் நீயும் ஆன்ட்டியும் அனாதரவாய் அப்படி நின்றது, மனதைப் பாதித்துவிட்டது" என்றான்.

அவள் ஆவலாகப் பார்க்கவும், மறுப்பாகத் தலையசைத்து "ஏதோ



ஒரு காலத்தில் வேறு மாதிரிப் பழகிய பாவம். அவ்வளவுதான், ஆனால் அதற்காக, உன் தப்புகளை மறந்து, உன்னோடு இணையத் தயாராகிவிட்டேன் என்று மனப்பால் குடிக்கத் தொடங்கி விடாதே. ஏனெனில் உன் சுயரூபம்... பணம் இல்லை என்றதும் மிகக் கேவலமான முறையில் வெட்டி விட்டுவிட்டு இப்போது பணம் வந்தது தெரிந்ததும் பசையாய் ஒட்டிக்கொள்ளத் துடிக்கும் உன் குணம் பற்றி நாங்கள் முற்றிலும் அறிந்து விட்டதால், அது ஒரு போதும் நடக்காது என்பதை உறுதியாகத் தெரிந்துகொள். எனவே இது பற்றிய அனாவசியப் பேச்சு இனி வேண்டாம்" என்றான் அவன் முடிவாக.

மறுபேச்சுப் பேச முடியாத குரலில், கூறியதும் அதைத்தானே?

ஆனால், அன்பு இருக்கிறது என்று அவனே சொல்லாமல் சொன்ன பிறகும், அந்த அன்புக்கு எதிர்காலமே கிடையாது என்றால் எப்படிப் பேசாதிருப்பது?

பாதிப்பு அவளுக்கு மட்டுமா? இருவருக்கும்தானே?

இதை இவனுக்கு எப்படிப் புரிய வைப்பது?

யோசித்துவிட்டு "சாரி தனா. இந்த ஒன்றை மட்டும் நான் சொல்லியே தீர வேண்டியிருக்கிறது. கொஞ்...சம் ஒரே ஒரு தரம் இப்படி யோசித்துப் பாருங்கள். ஒருவேளை, நான் சொல்வது உண்மையாக இருந்தால்? உங்கள் முடிவு மாபெரும் தவறு ஆகாதா? உங்களுக்குமே அனியாயம் செய்வதுதானே? நிஜமாகச் சொல்லுகிறேன் தனா. அதுபோலப் புகார் நான் கொடுக்கவே இல்லை! இது சத்தியம் தனா, நம்புங்கள்!"என்றாள் கெஞ்சலும் வருத்தமுமாக.

அவன் தோளைக் குலுக்கினான் "உணர்ச்சிகரமாக நன்றாகத்தான் சொல்லுகிறாய். ஆனால், உன் கூற்றுக்கு என்ன ஆதாரம் இருக்கிறது? மாறாக, நான் சொன்னதற்கு சாட்சிகள் நிறையவே இருக்கின்றன. நேரில் பார்த்தவர்கள், கேள்விப்பட்டு விசாரிக்க வந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். உன் சாட்சி என்ன? எப்படி நிரூபிப்பாய்?" என்று கேட்டான் தனசீலன்.

நடக்காததை எப்படி நிரூபிப்பது? ஒன்று நடந்தால், இப்படி நடந்தது என்று கண்ணால் பார்த்த, காதால் கேட்ட சாட்சிகளைக் கொண்டு வரலாம். இதனால் இப்படித்தான் நடந்திருக்கும் என்று ஊகத்தால் கூட உறுதிப்படுத்தலாம்.

ஆனால் நடக்காததை அது பற்றி அவளுக்கு எதுவுமே தெரியாததை, யாரைக் கொண்டு எப்படி நிரூபிப்பாள்?

அவள் திகைத்து நோக்கவும், அவன் சொன்னான் "இதோ பார், நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். என் வரையில் நடந்ததில் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்று நிரூபிக்கக் கூடியது. உன்னால் அது, அதாவது நீ சொல்வது உண்மை என்று நிரூபிக்க முடியுமா? முடியும் என்றால் மீண்டும் எங்கள் வீட்டுக்கு வா. அல்லது, அந்தப் பக்கமாகத் திரும்பிக் கூடப் பாராதே. அவ்வளவுதான், ப்ளீஸ்! மீறி வந்தால், உன் கதி என்ன ஆகும் என்று யாராலும் சொல்ல முடியாது! என்னாலும் கூட!"

பயமுறுத்தல், ஆனால் அவன் பொய்யாய் மிரட்டவில்லை. காரணம் அவனுடைய தாயாரின் உடல்நிலை. சரோஜா ஆன்ட்டியின் உடல் நிலை கெட்டால், அவன் சொன்னதைச் செய்தே தீருவான்.

ஆனால் இதுபற்றி ஒன்றுமே தெரியாதவள், அதிலும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று ஒன்றுமே ஊகிக்கக்கூட முடியாத போது எப்படி நிரூபிப்பாள்?

ஆனால், தான் குற்றமற்றவள் என்று அவளால் நிரூபிக்க முடியாவிட்டால், தனசீலனின் உறவு அவ்வளவுதான். அத்தோடு முடிந்தே போகும்!

திடுமென இன்னோர் எண்ணம் தோன்றி, அவளைக் கலங்கடித்தது.

அவளுடைய தம்பி? அவனுக்கு தனா செய்கிற உதவிகள்? அவையும் இன்றோடு நின்றுபோகுமா?

கண்ணனுக்கு ஏதோ ஒரு நல்லது நடப்பதையும் சொந்த வாழ்வு பற்றிய ஆசையால் அவள் கெடுத்து விட்டாளா?

அவன் இன்னமும் சொல்லிக் கொண்டிருந்தான் "அதனால் இதைத் தெளிவாக மனதில் வை. எதைச் சாக்கிட்டும் என்னைப் பார்க்கவோ, என்னுடன் பேசவோ முயற்சி பண்ணாதே. அதனால் என் வெறுப்புதான் அதிகரிக்கும். என்று புரிந்து கொள். அதாவது, என் நெஞ்சுமுட்ட இருக்கும் வெறுப்பு, இதற்கு மேலும் அதிகரிக்க கூடுமானால்!" என்று நக்கலாக அவன் முடித்த விதம், அவன் விரும்பியவாறே, அவளை வெகுவாக வருத்தியது.

ஆனால் பல்லைக் கடித்து சகிப்பது தவிர, அதில் அவள் செய்யக் கூடியது எதுவும் இல்லை.



"இறங்கிக்கொள்" என்ற அவனது அழுத்தமான குரல் ஏவவும், சௌமினி திகைத்தாள்.

அதற்குள்ளாகவா பூங்கா வந்துவிட்டது? வெளியே பார்த்தால் பூங்காவின் வாயிலேதான்.

இயந்திரம் போல சௌமினி இறங்கிக் கொள்ள கார் உடனே கிளம்பிச் சென்றது.



## அன்பு மனம் மாறியதேன் 10

ஆனால் எப்படி நிரூபிப்பது? எப்படி? எந்தப் பாவி இப்படிக் கொடுமை செய்தது? அவர்கள் இருவரையும் பிரிப்பதில் யாருக்கு என்ன லாபம்? என்ன சந்தோஷம்?

மனதில் வக்ரம் கொண்ட யாராவது, இளம் ஜோடியினரான அவர்களைப் பிரித்துக் கெக்கலி கொட்ட விரும்பினார்களா? அதற்கும் அவர்கள் அப்படி ஒன்றும் இணை பிரியாமல் ஒட்டிக் கொண்டே அலையவில்லையே!

அதிலும் இந்தக் குடியிருப்புக்கு வந்ததில் இருந்து, இருவரும் சந்தித்ததே மிகவும் குறைவு. அப்போதும், குறைகளும் குற்றப் பத்திரிகைகளும்தானே?

இதில் யாரேனும் பார்த்து வயிறு எரிய என்ன இருந்தது?

அப்படியானால் வேறு என்ன?

உணவு தூக்கம் கூடப் பிடிக்காமல் இரவு பகல் சௌமினிக்கு அதே யோசனை.

ஏன்? எப்படி? யார்? எதற்காக என்று யோசித்து யோசித்து தன் மூளையே குழம்பிவிடுமோ என்று கூட அவளுக்குத் தோன்றியது.

ஏனெனில், இந்தப் புதிரை விடுவிக்காமல், அவளுக்கு வாழ்க்கையே கிடையாது என்பதும், இரவு போய்ப் பகல் வருவது போல சர்வ நிச்சயம்!

கூடவே, தனசீலனது வெறுப்பும், கோபமும் தாக்க, அவளது எந்த வேலையும் சரிவர நடக்கவில்லை. எதையும் முழு மனதோடு செய்யவும், அவளால் இயலவில்லை.

தன் குழந்தைகள் புத்திசாலிகள் என்ற நம்பிக்கை சுந்தரிக்கு

உண்டு. அதிலும் சௌமினி பற்றி, அவளுக்குக் கடலளவு நம்பிக்கை. அவள் செய்வது எதையுமே, நொட்டு நொசுக்கு என்று நோண்டிக் குட்டை குழப்புவது இல்லை.

இன்றும் மகளின் புருவச் சுளிப்பின் பின்னே ஏதோ தீவிரமான யோசனை ஓடுவதை உணர்ந்து, ஒதுங்கி நின்று கவனித்தாள்.

கம்ப்யூட்டர் வகுப்பிலோ, அவள் பலருள் ஒருத்தி, அதிலும் சில காலமாகவே சற்று இறங்கி விட்டவள் என்றதால் பெரிதாக யாரும் பொருட்படுத்தவில்லை.

ஆனால் வேலையில் தொய்வு விழுந்தது, ராஜகெம்பீரனுக்கு ஆத்திரமூட்டியது.

உள்ளூர அவள் வருந்துவது, அவளது வேலைகளில் தெளிவாகத் தெரிந்தது. ராஜகெம்பீரன் அவளைத் திட்டிப் பார்த்தார். வேலையில் இருந்து விரட்டி விடுவேன் என்று மிரட்டியதிலும் சற்றும் பயன் இருக்கவில்லை.

சௌமினியோ, இன்னும் அதிகம் மனம் கலங்கினாளே தவிர, அவரது வேலை சரிவர நடப்பதாகவே இல்லை.

இவளை எப்படி வேலை செய்ய வைப்பது என்று யோசித்தவருக்கு, சௌமினி முன்பொரு தரம் இதேபோல தவித்தது நினைவு வந்தது.

இது தீர்க்கக்கூடிய பிரச்சினை!

ஒரே நினைவாக இருந்தவளிடம், ராஜகெம்பீரன் அன்று வேறு கேள்வி கேட்டார் "என்ன இப்போதும் எவனாவது வாலாட்டுகிறானா? யார் என்று சொல்லு வாலை ஒட்ட நறுக்கி விடுகிறேன்" என்றார் தேறுதலாக.

ஆனால், பற்றுவதற்குத் துரும்பு கூடக் கிடைக்காமல் தவித்திருந்த சௌமினிக்கு அவரது பேச்சில் ஏதோ உறுத்தியது.

ஒருவேளை...

ஒருவேளை 'அது' ராஜகெம்பீரனின் வேலையாக இருக்குமோ?

மற்றபடி, அந்த 'இப்போதும்' என்கிற வார்த்தை, அவருக்கு ஏன் வந்தது. இதற்கு முன்பும் இதுபோல நடந்திருந்ததால்தானே அந்த வார்த்தை சொல்லிக்கேட்க முடியும்?

ஒரு சின்ன வார்த்தை, அதை வைத்துக் கண்டுபிடிக்க முயற்சிப்பது, அணுவைக் கண்டுபிடித்து, அதைப் பிளந்து ஆராய்வது போலத்தான்.



ஆனால் 'எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்' என்று இருந்தவளுக்கு இந்த ஒரு வார்த்தை கூடப் பெரிதாகவே தோன்றியது.

"எப்படி சார் வெட்டுவீர்கள்?" என்று ஆவலாக, அவர் முகத்தைக் கூர்மையாக நோக்கிக் கேட்டாள்.

ஆனால் அவளது அகன்ற விழிகளில் இருந்த கவனம் அவரை எச்சரித்ததோ?

கையை நீட்டிப் பக்கத்தில் இருந்த பத்திரிகையை எடுத்து விரித்தபடி "என்ன சௌமினி, ஒரு பேச்சுக்கு உதவுவதாகச் சொன்னால் என்னையே கேள்வி கேட்கிறாயே!" என்று அசட்டையாக கேட்டவர் அதற்கு மேல் பேசாமல் பத்திரிகையில் ஆழ்ந்தார்.

சொத்தென்று ஓய்ந்த சௌமினி உடனே பார்வையை உயர்த்தி எழுத்தாளர் பத்திரிகையைப் படிப்பதைக் கவனத்துடன் ஆராய்ந்தாள்.

அவர் பத்திரிகையைக் கையில் எடுத்ததும், அதை மிகவும் கவனமாகப் படிக்கத் தொடங்கியதும் அவளை யோசிக்க வைத்தது.

ராஜகெம்பீரன் சார் பத்திரிகை படிப்பது, காலையிலேயே முதல் வேலையாக முடிந்துவிடும். ஐந்தரை மணிக்கு பத்திரிகை கைக்கு வருவது இல்லை என்று பத்திரிகை போடும் பையனை ராஜகெம்பீரன் வறுத்தெடுத்தது, மிகச் சமீபத்தில்தானே?

காலையில் எழுந்து பல் துலக்கி வந்ததுமே, அவருக்குப் பத்திரிகையும் காஃபியும் கையில் இருக்க வேண்டும்.

சூடான காஃபியை பக்கத்தில் வைத்துக்கொண்டு, அதையும் குடித்தபடி, அப்போதே பத்திரிகையை படித்து முடித்துவிட்டுத்தான் எழுந்திருப்பாராம்.

அந்த விடிகாலையில் மாமனாருக்கு காஃபி கலந்து கொடுப்பதற்காக எழ வேண்டி இருப்பதால் தன் அருமையான காலை தூக்கம் கெடுகிறது என்று வாசந்தி, தனிமையில் சௌமினியிடம் புலம்புவது உண்டு.

காலையில் படிக்காத எந்த செய்தியை, எழுத்தாளர் இவ்வளவு ஆர்வமாக இப்போது படிக்கிறார்.

அவரது கண்கள் செல்லும் வழியைக் கவனித்தால், அவர் எட்டுக் காலத்து முக்கியச் செய்தியில்தான் இருந்தார். இதைத்தானே

காலையில் முதல் செய்தியாக, முழுதாகப் படித்திருப்பார். இப்போது ஏன் திரும்பவும் படிக்கிறார்?

அல்லது படிக்கிற மாதிரி நடிப்பா? அதாவது அவளுக்காக மட்டும் நடிக்கிறார்.

சௌமினியின் மனம் பரபரப்புற்றது.

பேச்சின் போக்குப் பிடிக்காமல் அதை நிறுத்துவதற்காக ராஜகெம்பீரன் சார் பத்திரிகையை எடுத்திருக்கிறார்.

காரண காரியம் எல்லாம் சரியாகத்தான் வருகிறது. ஆனால், எல்லாமே ஆசை கொண்ட மனதின் கற்பனையாகவும் இருக்கலாம் என்று அவளது மூளை எச்சரிக்கவும் செய்தது.

ஏதோ காரணமாக, இன்று காலையில் பத்திரிகையைச் சரியாகப் படிக்காமலும் விட்டிருக்கலாமே!

ஆனால் தொடங்குவதற்கு எதுவுமே இல்லாமல் சோர்ந்து கிடந்தவளுக்கு, கிடைத்த இந்த ஒரு நூலையும் விட்டுவிட மனம் வரவில்லை.

எனவே எழுத்தாளரைச் சுட்டிக்காட்டும் விவரங்களை ஆராயலானாள்.

தீர ஆராய்ந்தால், உண்மை பொய் தெரிந்துவிடத்தானே போகிறது? நல்லவர் என்று ஆகிவிட்டால், அப்படியே விட்டுவிடப் போகிறாள். இப்படியும் இருக்குமோ என்று யோசித்துப் பார்ப்பதில் என்ன பிழை இருக்கிறது?

இந்த ஊகமே சரியானதாக இருக்கட்டும் என்று உள்ளூர வேண்டிக்கொண்டு சௌமினி யோசனையைத் தொடங்கினாள்.

விஷயம் நடந்தது சுமார் நாலு ஆண்டுகளுக்கு முன்னதாக, அன்று தனா அவளை, மூழ்குகிற கப்பலை விட்டு ஓடுகிற எலி என்று குற்றம் சாட்டினான்.

அதைத் தொடர்ந்து இன்னும் பல சாடல்கள். கடைசியாகப் பிரிவை இறுதி முடிவாக்கிவிட்டு போனானே அந்த நாள்!

வேலை ஓடாமல் அவள் தவித்ததும், அப்போது இன்னும் கொஞ்சம் நல்ல விதமாகப் பேசிப் பழகிய ராஜகெம்பீரன் சார் கனிவாக என்னவென்று கேட்க, அவரிடம் கொட்டித் தீர்த்ததும் அவளுக்கு நினைவு வந்தன.

அதன் பிறகுதானே, தனசீலன் குடும்பம் அவளை அடியோடு விலக்கியது?



ராஜகெம்பீரன் அப்போது, இன்னும் பரிவு நல்ல தன்மைதானே காட்டிக் கொண்டிருந்தார்!

வேலை நடக்காவிட்டால் எரிச்சல் படுவாரே தவிர, மற்றபடி, அவள் குறைப்படக் காரணம் இருந்தது இல்லையே.

அவர் எதற்கு அவள் புகார் கொடுத்ததாகப் போலீஸ் மூலம் தனசீலனை அவமானப்படுத்தி மிரட்டி விரட்ட வேண்டும்?

அவளிடம் இருந்த பரிவு காரணமாக, அவளை வருத்தப்படுத்தி விட்டானே என்ற கோபத்தில்... ஊகூம், அதற்காக இந்த அளவு போவது, ரொம்பவும் அதிகப்படி! தேவையற்ற கொடூரம்.

அவரும், அப்போதுமே மற்றவர்களுக்காக அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டார். தனக்காக என்றால், கொஞ்சம் கூடுதலாகப் பார்ப்பார், அவ்வளவே.

வேறே? வேறே எந்த இலக்கும் தெரியாமல் போகவே, சௌமினி எழுத்தாளரையே மையமாகக் கொண்டு மறுபடியும் யோசித்தாள்.

அன்று அவரிடம் என்னவெல்லாம் சொன்னாள்? அவளும் தனாவும் மணம் புரிவதாகத் திட்டமிட்டிருந்ததை கூட அவரிடம் மறைக்கவில்லை... என்று வரிசையாக நினைவுப்படுத்திக் கொண்டு வரும்போதே, சௌமினி சட்டென நிமிர்ந்தாள்.

எல்லாம் அவரது வேலை தடையின்றி நடப்பதற்காக இருந்தால்?

அன்று அவள் அவரிடம் புலம்பி, அதன் பிறகுதானே தனசீலனின் தொடர்பு அடியோடு விட்டுப் போனது?

அவள் தொடர்பு கொண்டால், அவன் கட் பண்ணத் தொடங்கியது. அன்றிலிருந்துதானே? அவன் மட்டுமல்ல, அந்தக் குடும்பமே அவளை வெறுத்து ஒதுக்கிவிட்டதும் அதன் பிறகுதான்!

அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. அந்த மாதிரியான போலீஸ் மிரட்டலை அனுபவிக்க நேர்ந்தால், பாம்பைக் கண்டது போல ஓடத்தான் தோன்றும்.

ஆனால் இன்னமும் இது பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரிந்து விடவில்லை. ராஜகெம்பீரனாக இருக்கக்கூடும் என்பது தவிர, அவர்தான் என்று நிச்சயமாக முடிவு பண்ண முடியாது.

முதலில் காவல்துறையில் அவருக்கு யார் இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். மற்றபடி, அவர் என்னதான் பெரிய எழுத்தாளராக இருந்தாலும் அவர் சொன்னதற்காக மட்டும் காவல் நிலையத்தில் ஒரு நல்ல இளைஞனை இப்படிக் கேவலமாக நடத்த மாட்டார்கள்.

போலீசில் இவருக்கு என்ன தொடர்பு என்று யோசித்தாள்.

ராஜகெம்பீரனிடம் வேலைக்கு சேர்ந்த புதிதில் காவல் அதிகாரிகள் சில பேர் அவரிடம் வந்து போவதை, சௌமினி பார்த்திருக்கிறாள். வழக்கமாக வருகிறவர் என்றால்... பெரிய மீசையுடன் ஆறுமுகம் என்று ஒருவர் இருந்தார்.

இப்படிப்பட்ட எழுத்தாளரிடம் வேலை செய்ய உனக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பார். கடைசியாக... "பெண்கள்தான் தைரியமாக இருக்க வேண்டும். தெருவில் போனால் கண்ட நாயும் குலைக்கத்தான் செய்யும். அதற்கெல்லாம் பயந்தால் வாழ முடியாது..."என்று அவளிடம்... அவர் ஏன் சொன்னார்?

அப்போது ராஜகெம்பீரன் சார் கூட, ஏதோ சொல்லி அவரை உள்ளே கூப்பிட்டுக் கொண்டாரே! அவளோடு அவர் பேசுவதைத் தடுக்கவோ?

சௌமினிக்கு மனதில் உறுதிப்பட்டுவிட்டது.

இந்தச் சதியைச் செய்தது ராஜகெம்பீரனே. சௌமினி செய்த குற்றம், தனாவோடான திருமணம் பற்றி அவரிடம் சொன்னது.

புத்தக வெளியீட்டாளர் பரசுராமன் சொன்னது மெய்யானால், சௌமினி செய்த வேலை எழுத்தாளருக்கு மிகவும் தேவை. இன்றியமையாதது!

அது தடைப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, தன்னிடம் அன்பு கொண்ட காவல் அதிகாரி மூலமாக, தனசீலனை மிரட்டி விரட்டி விட்டார்.

தன்னளவில் விஷயம் தெளிவான உடனே, அவளுக்கு ஒரே சந்தோஷம்.

அந்த உற்சாகத்தில் உடனேயே தனசீலனை அழைத்து, இப்படி இப்படி என்று விவரம் தெரிவித்தால் "அப்படியா?" என்றான் அவன் அசுவாரசியமாக.

அவள் திகைப்புடன் "நீங்கள் சொன்னதை நான் கண்டு பிடித்திருக்கிறேன், தனா! எப்படி என்ன நடந்தது என்பதை எல்லாமே!" என்றாள் மறுபடியும்.

ஒருவேளை அவள் கூறியதை அவன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்று அவள் யோசிக்கும்போதே, தனசீலன் பேசினான்.



முதல் வார்த்தையாக "இல்லை சௌமினி" என்றான்.

"இஇல்லையா?" என்று, அவள் மீண்டும் திகைத்தாள்.

"ஆமாம், நீ எதையும் முழுமையாக கண்டுபிடிக்கவில்லை. வெறுமனே ஊகித்திருக்கிறாய். இது ஊகமோ, அன்றி கற்பனையோ என்பது கூட நிச்சயமில்லை" என்றான் அவன் உணர்ச்சியற்ற குரலில்.

தலைகுப்புற விழுந்த உணர்வு அவளுக்கு.

"அஅப்படியானால், நீங்கள் என்னை நம்பவில்லையா?" என்று காற்றாகிப் போன குரலில் கேட்டாள் "நான் பொய்யாக இட்டுக் கட்டிச் சொல்வதாகவா நினைக்கிறீர்கள்?"

கண்ணீர் இதோ, இதோ என்று தயாராகிக் கொண்டிருக்க, அவன் மறுபடியும் பேசினான்.

"எப்படிநம்புவது?" என்று கேட்டான். "இத்தனை நாள் யோசித்தோ, அன்றி நீ சொல்வது போலக் கண்டுபிடித்தோ, நீ ஒரு கதையைச் சொன்னாய். இது உண்மை என்பதற்கு என்ன சான்று இருக்கிறது? சாரி சௌமினி. உன்னால் நாங்கள் நிறையப் பட்டுவிட்டோம். உன்னுடைய இந்தக் கதை உண்மை என்றால், அதற்கான சான்றோடு என்னைத் தொடர்பு கொள். மற்றபடி, என் நேரத்தை விரயமாக்க வேண்டாம்" என்றவன், அதற்கு மேல் அவளோடு பேசுவதே வீண் என்பது போல, அத்தோடு பேச்சைக் கட் பண்ணிவிட்டான்.

காற்றுப் போன பலூன் என்பார்களே, அதுபோல உற்சாகம் எல்லாம் வடிந்து, சற்று நேரம் ஓய்ந்துபோய் சௌமினி உட்கார்ந்திருந்தாள்.

அவள் எவ்வளவோ யோசித்துக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்தால், கதை, கற்பனை என்று சர்வ சாதாரணமாக ஒதுக்கி விட்டானே!

அதாவது எல்லாமே பொய், இட்டுக்கட்டி அவனை ஏமாற்றுகிறாள் என்கிறான். அவளை எவ்வளவு கேவலமாக எண்ணிவிட்டான்.!

அவளை இவ்வளவு மோசமாக நினைக்கிறவனுக்காக போராடி என்ன பயன்? அவளை நம்பக் கூடாது என்று தனா முடிவு பண்ணிவிட்ட பிறகு, அவளது முயற்சிகள் எல்லாமே அவனது மதிப்பில் குப்பைத் தொட்டிக்கு உரியவை.

எனவே, அவள் என்ன முயன்றாலும், அது பலன் தராது!

மனம் ஒடிந்து போய், உயிரோடு இருப்பதே வீண், எப்போது சாவு வரும்? அதுவாக வராவிட்டால் நாமாகத் தேடி போக வேண்டியதுதான் என்றெல்லாம் கிறுக்குத்தனமாக எண்ணிக் கண்ணீர் வடித்தவள், ஒருவாறு தன்னைத்தானே திடப்படுத்திக் கொண்டு மறுபடியும் யோசித்தாள்.

இப்போது தனசீலன் என்ன கேட்டான்? அவள் கண்டுபிடித்தற்கு ஒரு சான்று! அவ்வளவுதானே? உனக்கும் எனக்கும் தீர்ந்துவிட்டது என்று அடியோடு விரட்டவில்லையே!

குடும்பத்தோடு அவன் பட்ட வேதனைக்குப் பிறகு, அவள் சொல்வதையெல்லாம் அப்படியே அவன் நம்ப வேண்டும் என்று எதிர்பார்ப்பதுதான் தப்பு.

இப்போது அவன் நம்பும்படியாக ஒரு ருசுவைக் கண்டுபிடித்துக் காட்டிவிட்டால், அத்தோடு எல்லாம் சரியாகிப் போகும்!

இப்படி உருப்படியாகச் சிந்திக்காமல், சாவு அது இதென்று மடத்தனமாக யோசித்தாளே! தன்னை நினைத்தே, சௌமினிக்கு அவமானமாக இருந்தது.

இந்தப் புது வேகம் குறையுமுன், அந்தப் போலீஸ் அதிகாரி ஆறுமுகத்தை சௌமினி தேடத் தொடங்கினாள்.

ராஜகெம்பீரனுடைய விசிறியான அவர், அவருக்கே விரோதமாகச் சாட்சி சொல்வாரா என்று கவலை அவளுக்கு ஏற்படத்தான் செய்தது.

ஆனால், எல்லோருக்குள்ளும் நியாயம், நல்ல தன்மை இருக்கத்தானே செய்யும். ஒரு பெண்ணின் வாழ்வு அவர் சொல்லும் உண்மையில் அடங்கி இருக்கிறது என்று தெரிந்தால், அதற்காகவேனும் ஏதாவது செய்வார் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, சௌமினி செயலில் இறங்கினாள்.

அத்தோடு, சில ஆண்டுகளாக, ராஜகெம்பீரனின் வீட்டுக்கு அந்த அதிகாரி ஆறுமுகம் வரவும் இல்லை.

பரசுராமன் சார் சொன்னது போல, அவரும் எழுத்தாளருடைய விசிறிகள் கூட்டத்திலிருந்து விலகிவிட்டாரோ என்னவோ?

அப்படி இல்லாவிட்டாலும், பொதுவான நல்ல தன்மையினாலேயே, அவளது கோரிக்கைக்கு ஆறுமுகம் செவி சாய்ப்பார் என்று மந்திரம் போலத் தனக்குள் சொல்லிக் கொண்டாள் அவள். அத்தோடு ராஜகெம்பீரனுக்கு எதிராக நடக்கப் போவதும் கிடையாது.

உதவி செய்வார் நம்பிக்கையோடு அதிகாரியைப் பற்றி சௌமினி விசாரித்தால், அவர் வெளியூருக்கு மாற்றலாகிப் போயிருக்கிறார் என்றார்கள்.

எங்கே, என்ன என்று கேட்டால், அதைச் சொல்ல அந்தக் காவல் நிலையத்தில் மறுத்தார்கள்.

திகைத்து "ஏன் சார் சொல்ல மறுக்கிறீர்கள்?" என்று கேட்டாள் அவள். "எத்தனையோ பேரைப் பிடிக்கிறோம் கரம் வைத்து, ஏதாவது உயிருக்கு ஆபத்து ஆகி விடும்மா. அதனாலேயே இதுபோல விவரம் சொல்ல முடியாதும்மா" என்றார்கள்.

சரியான காரணத்தோடு கூடிய மறுப்பு! இதை எப்படி சமாளிப்பது?

சற்று நேரம் யோசித்தபோது, அவளுக்கு ஓர் ஐடியா வந்தது.

தெரிந்தவர்களுக்குக் கொடுக்குமாறு, எழுத்தாளர் வீட்டுக்கு வந்த அவருடைய உறவுக்காரர் விட்டுச் சென்றிருந்த திருமண அழைப்பு ஒன்றை எடுத்துக் கொண்டு சௌமினி அந்தக் காவல் நிலையம் சென்றாள்.

"ரொம்ப வேண்டியவர், இதை அனுப்ப வேணுமே" என்று அவள் நேரிலே போய்க் கேட்கவும், ஆறுமுகத்தின் முகவரி கிடைத்தது. திருநெல்வேலிப் பக்கம்.

எவ்வளவு தூரமாக இருந்தால் என்ன?

அவரை நேரிலே போய் பார்த்துவிட்டால், விஷயம் முடிந்தது!

விலாசத்தை வாங்கிக்கொண்டு வந்தவளுக்கு மகிழ்ச்சியை அடக்க முடியவில்லை.

தனசீலனை அழைத்து "நாலு ஆண்டுகளுக்கு முன்னதான அந்த நிகழ்வுக்குக் காரணமான அதிகாரியைக் கண்டுபிடித்துவிட்டேன், தனா. அவரிடம் போய், நடந்ததை உங்களிடம் சொல்லும்படி, கேட்கப் போகிறேன். நீங்கள் கேட்ட சான்று, இன்னும் சில தினங்களிலேயே கிடைத்துவிடும்" என்று ஆனந்த கீதம் பாடினாள்.

"அவர் வந்து சொல்லட்டும் அதன்பின் நம்புகிறேன்" என்று தனா உணர்ச்சியற்ற குரலில் பதிலிறுத்தது கூட, அவளது உற்சாகத்தைக் குறைக்கவில்லை.

போகட்டும். அவனுக்கு இது முக்கால் கிணறாகத் தோன்றுகிறதோ என்னவோ? முழுதும் தாண்டிய பிறகு

சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம் என்று எண்ணியிருப்பான்.

சும்மாச் சும்மா நச்சுப் பிச்சென்று சுந்தரி மக்களிடம் கேள்வி கேட்பது கிடையாது. ஆனால் வெளியூர் என்றதும், மகளிடம் கேள்வி கேட்டாள்.

சில நாட்களாக மகள் மிகவும் சோர்ந்திருப்பதை, போக வர ஓரக் கண்ணால் பார்த்தவள்தானே? உள்ளூர் என்றால், அவள் கேட்டிருக்கவே மாட்டாள்.

ஆனால், செல்லப் போவது வெளியூருக்கு..

ரொம்பவும் கேட்ட தாயிடம் "தனா வீட்டோடு உள்ள பிரச்சினையைத் தீர்க்க, ஒரு முயற்சியாகப் போகிறேன் அம்மா. அது பற்றித் திரும்ப வந்து விவரம் சொல்கிறேன்"என்று மட்டும் சொல்லிவிட்டு சௌமினி கிளம்பினாள்.

தாயிடம் கூறியது சின்னதொரு குறிப்புதான். நல்லதாக முடியும் என்ற சிறு நம்பிக்கை ஏற்படலாம். அன்றிப் பயனற்றுக் கெட்டதாக முடிந்தாலும், அந்த முடிவை ஏற்கவும் தாய் ஓரளவு தயாராகி விடுவாள். அவளுடைய அன்னை பிள்ளைகளிடம் 'ஞைஞை' பண்ணுகிறவள் அல்ல என்பதால், அதற்கு மேல் பிரச்சினை இராது.

ஆனால், இந்த முயற்சி தோற்கக் கூடும் என்ற சிறு சந்தேகம் கொள்ள கூட சௌமினிக்குப் பிடிக்கவில்லை. காரணமற்று, காரணமே தெரியாமல் எவ்வளவோ துன்பம் அனுபவித்தாயிற்று. இனி கட்டாயம் இந்த நிலை மாறும். மாறியே ஆக வேண்டும்.

ஏனெனில் இனித் தோற்க, அவளுக்குத் தெம்பில்லை!

காவல்துறை அதிகாரியைப் பார்க்கச் செல்லுகையில் சௌமினி தன்னை முன்னதாக அறிவித்துக் கொள்ளவில்லை. முனனேற்பாடும் செய்து கொள்ளவில்லை

எங்கே ராஜகெம்பீரன் சாரிடம் இவள் வருகிறாளே என்ன என்று காரணம் கேட்டுவிடுவாரோ என்று அவளுக்கு பயம்.

இப்போதும் கேட்கலாம்தான். ஆனால், தன் பிரச்சினையை முதலில் சொல்லி, அவர் மனதில் வேறு மாதிரியான அபிப்பிராயத்தை பதிய வைத்துவிட்டால், ஒரு சுப முடிவுக்கு உதவும் நல்லுணர்வோடு அவளுக்கு அவர் உதவி செய்யலாமே.

இதனால் எழுத்தாளருக்கோ, வேறு யாருக்குமோ எந்தப் பாதிப்பும் கிடையாது எனும்போது, அவர் மறுப்பதற்கு வாய்ப்பே இல்லை!



அதனால் வெற்றியும் நிச்சயம்.

இந்த நம்பிக்கையோடுதான் காவல் அதிகாரி ஆறுமுகத்தைச் சந்திக்க சௌமினி சென்றாள்.

அவளது நல்ல காலமாக, அவரும் வெளியே எங்கேயும் சென்றிராமல், காவல் நிலையத்திலேயே இருந்தார்.

எதிர்பாராமல் சௌமினியைப் பார்த்ததும் புன்னகையோடுதான் வரவேற்றார் "என்னம்மா, எப்படி இருக்கிறாய்? ஏது, திடீரென்று இந்தப் பக்கம்? கோயில், உறவினர் வீடு என்று வந்தாயா?" என்று அவளிடம் கேட்டுவிட்டு, அவளுக்கு ஒரு டீயும் கொண்டு வரச் சொன்னார்.

நல்ல தொடக்கம்தான்.

சின்னச் சின்ன விஷயங்களையே நல்ல சகுனங்களாக எண்ணி மகிழ்ந்தவளாக, "ஒரு சின்ன உதவி கேட்டு வந்தேன் சார்" என்றாள் அவள் பணிவான இனிய குரலில்.

"சொல்லும்மா. உனக்கு இல்லாததா? என்ன செய்ய வேண்டும், சொல்லு" என்று உடனே உதவ முன்வந்தார் அவர்.

நம்பிக்கையோடு அவள் தன் கோரிக்கையைத் தெரிவித்தால், அதிகாரி ஆளே மாறிவிட்டார்.



## அன்பு மனம் மாறியதேன் 11

சுளித்த புருவங்களும், உருட்டு விழிகளும், கடுத்த முகமுமாக, இவ்வளவு நேரம் சிரித்துப் பேசிய மனிதர் இவர்தானா என்று சந்தேகப்படும் அளவுக்கு மாற்றம்!

தோற்றத்தின் மாற்றத்துக்கு ஏற்றபடி குரலும் மாற, "என்னம்மா இது? ராஜா சார் செகரட்டரி என்று, அன்று உன் உயிரைக் காப்பாற்ற ஒரு வேலை செய்தால், இன்று நீயே வந்து, இப்படிக் கேட்கிறாயே, வெட்கமாக இல்லை?" என்று சீறினார் ஆறுமுகம்.

"உயிர்... உயிரா? என் உயிரா?" என்று அவள் தடுமாற,

"ஆமாம். உன் உயிரேதான். அவன் தொல்லை தாங்கவில்லை. செத்துவிடலாமா என்று இருக்கிறது என்று எழுத்தாளரிடம் கதறி அழுதாயாமே. அதனால் பரிதாப்பப்பட்டுத்தானே, அவர் யோசித்து,

ஒரு நல்ல வழி கண்டுபிடித்து, அந்த மாதிரி செய்யச் சொல்லிக் கேட்டார். நல்ல காரியம், கொழுப்பெடுத்த விடைப் பயல் ஒருவனுக்கு புத்தி புகட்டின மாதிரியும் ஆகும் என்று ஏரியா அதிகாரியிடம் சொல்லி அவனை மிரட்டி வைக்கும்படி நானும் சொன்னேன். விஷயம் நல்லபடியாக முடிந்தது. அவன் கொடுத்த துன்பமெல்லாம் மறந்து, நீயும் நிம்மதியாக இருப்பதாக சாரே சொன்னாரே!

"ஆனால் இன்று அவன்தான் வேண்டும் என்று நீயே வந்து நிற்கிறாய். நம் பெண்களே இப்படித்தான். அடியோடு வெறுத்த மாதிரி, புகார் சொல்வது, அதை நம்பி அந்தப் பெண்ணுக்கு சாதகமாக நாம் ஏதாவது செய்தால், என் ஆளை, நீ எப்படி மிரட்டலாம் என்று நம் மீதே பாய்வார்கள். வாசலில் உட்கார்ந்து தர்ணா செய்வார்கள். கொஞ்சம் வித்தியாசமாக அன்று நடந்ததில் உன் பங்கே கிடையாது என்று அவனிடம் வந்து சொல்லச் சொல்லுகிறாய்? அதாவது நானும் அப்போதைய ஏரியா இன்ஸ்பெக்டரும் சேர்ந்து, சும்மா தெருவில் போன உன் ஆசைக் காதலனை, நாங்களாகவே பிடித்து மிரட்டினோம் என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து, எங்களை நாங்களே அசிங்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறாய், அப்படித்தானே?

"ஆமாம், எங்களை... எங்கள் காவல்துறையை நீ என்ன என்று எண்ணிக் கொண்டாய்? நீ மாற்றி மாற்றி யோசிக்கிற மாதிரியெல்லாம் ஆடுகிற பொம்மைகள் என்றா?ராஜா சார் செகரட்டரி என்று மரியாதை கொடுத்தால் கேவலமாகக் கெடுத்துக் கொண்டாயே, போம்மா, போ. முதலில் இங்கிருந்து கிளம்பு!" என்று விரட்டினார்.

வாய்க்கு வாய் 'ராஜா சார், ராஜா சார்' என்கிறார். அவர் செய்த சதியைப் பற்றிச் சொன்னால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்வாரோ?

மனிதரின் இரக்கத்தைத் தூண்ட எண்ணி "சார் இந்த உதவியை நீங்கள் செய்யாவிட்டால் என் வாழ்க்கையே அழிந்து போகும் சார். ப்ளீஸ் சார்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

ஆனால் அவரோ, "இதே வார்த்தையைச் சொல்லி எழுத்தாளரிடம் நீ அழுததால்தான், அவன் மேல் நடவடிக்கை எடுக்கும் படி, அவர் என்னைக் கேட்டார். ஆமாம் நானும்தான் கேட்கிறேன். உன் வாழ்க்கை எத்தனை தரம் தான் அழியும், சொல்லு"



என்று நக்கல் செய்தார்.

"சா...ர்... இது நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை சார். இது எல்லாமே ராஜகெம்பீரன் சார் செய்த சதி, சார். நான் வேலையை விட்டு நின்று விடுவேனோ என்ற பயத்தில்..." என்று அவள் உண்மையைச் சொல்லத் தொடங்குமுன், அமர்ந்திருந்த நாற்காலியைப் பின்னே தள்ளிக்கொண்டு, ஆறுமுகம் சீறிக்கொண்டு எழுந்தார்.

"ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து என்பார்கள். கடைசியாக உனக்குப் படியளக்கும் எழுத்தாளரையே குற்றம் சொல்லத் துணிந்துவிட்டாயா? உன்னை விட்டால் அவருக்கு வேலை செய்ய ஆளே கிடைக்காது! பார்! சே! முதலில் இடத்தை காலி செய் ஓடு! இதற்குமேல், ஒரு வினாடி நீ இங்கே இருந்தாலும் நடப்பதே வேறாகிவிடும். உன் கழுத்தை பிடித்து..." என்று அவர் உறும, அவர் சொல்வதை நிறைவேற்ற இரண்டு காவலர்களும் முன் வரவே, வேறு வழியின்றி, சௌமினி கால்கள் தள்ளாட, அங்கிருந்து தோல்வியோடு வெளியேறினாள்.

படுதோல்வி!

இருந்தது, இந்த ஒரே வழி! அதுவும் அடைப்பட்டுப் போயிற்று. இனி, சந்தோஷ வாழ்க்கை என்பது, அவளுக்கு ஒருபோதும் கிடையாது!

போகட்டும், இவ்வளவு நாள் இருந்தது போல மிச்சமுள்ள காலத்தையும் கழிக்க வேண்டும். அவ்வளவுதானே என்று அலட்சியமாக எண்ண, இப்போது அவளால் முடியவில்லை.

ஏனெனில், அப்படித் தலையைச் சிலுப்பி ரோஷம் காட்ட, தப்பு தனசீலன் பக்கம் இருக்கவில்லை. அவள் பக்கம்தான் இருந்தது.

அவள் அறியாமலேயே! ஆனாலும், எழுத்தாளர் ராஜகெம்பீரன் சுயநலத்துக்காக எவ்வளவு பெரிய அனியாயம் செய்து விட்டார்!

அதை மட்டும் நிரூபிக்க முடிந்திருந்தால், எவ்வளவு அருமையான சொர்க்க வாழ்வு கிடைத்திருக்கும்! இன்று ஒன்றுமே இல்லாமல் வெறுமையாய்... அவள் இனி என்ன வாழ்வு வாழப் போகிறாள்!

போகிறது என்று விட முடியாமல் மனதோடு சேர்ந்து, சௌமினிக்கு உடம்பும் படுத்தியது. நெஞ்சை ஏதோ அடைத்தது. கண்கள் மங்கி கால்கள் தள்ளாடின.

இல்லை, இங்கே தன்னந்தனியாக விழுந்து வைக்கக்கூடாது.

வீட்டுக்கு அன்னையிடம் போய்விட வேண்டும்.

அவளுடைய தாய், தொட்டுத் தடவியோ அணைத்தோ செய்கைகள் மூலம் ஆதரவை வெளிக் காட்டுகிறவள் அல்ல. ஆனால், அவள் வாழ்வதே, அவள் பெற்ற இரு மக்களுக்காகவும்தான் என்று பிள்ளைகள் இருவருக்குமே நன்கு தெரியும்.

அந்தத் தாயின் மடியில் விழுந்து ஒரு மூச்சு அழ முடியுமானால், மூச்சையேனும் சரியாக விட முடியுமோ?

எப்படி ரயிலடிக்குச் சென்றாளோ? எப்படி டிக்கட் எடுத்தாளோ? எப்படி ரயிலில் ஏறினாளோ?

எதையும் அவள் யோசித்துச் செய்யவில்லை... ஆனால், சென்னை செல்லும் ரயிலில் சோர்ந்த விழிகளை இறுக மூடிக்கொண்டு சௌமினி அமர்ந்திருந்தாள்.

இதயத்தைக் கசக்கிப் பிழிந்த துயரத்துடன் சௌமினி இப்படி தவித்தபடி சென்னைக்குத் திரும்ப, அன்று சுந்தரியுடைய இன்னொரு மகவும் பெரும் சிக்கலில் மாட்டித் தவிக்கும்படி ஆயிற்று.

சௌமினி ஊரில் இல்லை என்பது, கண்ணனுக்கு கட்டவிழ்த்த கன்று போன்ற உற்சாகத்தைத் தந்தது.

ஏனெனில், அவள் சொல்லித்தான் அந்தக் கட்டைக்குரல் ஃபோன் தடியன் தன்னை மிரட்டி கொண்டிருக்கிறான் என்று, அவனுக்கு நிச்சயம். இப்போது ஊரில் இல்லை என்றால், கோள் மூட்டிக் கொடுக்க ஆள் யார் இருக்கிறார்கள்?

அவன் ஒழுங்காகப் படித்ததாலோ என்னவோ சில நாட்களாக, ஃபோன் ஆள் பிரச்சினை பண்ணவில்லை.

அப்படியே அவன் ஃபோன் செய்து கேட்டாலும் "ஆமாம் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன்" என்று பொய் சொன்னால், இல்லை என்ற காட்டிக் கொடுக்க இந்த வீட்டு எட்டப்பிதான் ஊரிலேயே இல்லையே!

சௌமினி வீட்டில் இல்லாததை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று, கண்ணன் முடிவு செய்தான்.

முதலிலேயே தெரிந்திருந்தால், நண்பர்களோடு சேர்ந்து இரண்டு இரவுகள் ஆட்டம் போட்டிருக்கலாம். பரவாயில்லை. ஒரு நாளாவது கிடைத்ததே, அதையேனும் முழுதாக அனுபவித்து மகிழ வேண்டும் என்று திட்டமிட்டவன், தாயிடம் போய் நின்றான்.

அன்று நட்ட நடு இரவில், மகன் எங்கிருக்கிறான் என்று



தெரியாமல், குடும்பப் பெண்கள் இருவருமாக நடுத்தெருவில் நின்று தவித்ததாகத் தாயார் சொன்னது, அவனை பாதித்திருந்தது. இதுவே, அன்னையிடம் சொல்லிவிட்டுப் போனால் பிரச்சினை இல்லையே!

எனவே, "அம்மா, நாங்கள் சினேகிதர்கள் எல்லோரும் சேர்ந்து, 'குரூப் ஸ்டடி' பண்ணப் போகிறோம். ஒருவருக்கொருவர் கலந்து பேசிப் படிக்கும்போது எல்லா சந்தேகங்களும் தீர்ந்துவிடும். நூறு சதவீதம் நிச்சயம். அதனால், இரவு முழுதும் அங்கேயே இருந்து விடுகிறேன். காணோமே என்று தேடாதீர்கள்" என்றான் முசட்டுக் குரலில்.

இரவு முழுவதும் என்றதுமே பெற்றவளின் நெஞ்சில் அபாய மணி அடித்தது.

அன்று பட்ட துன்பம் ஒருபுறம், தம்பிக்கு சகவாசம் சரியில்லை என்று மகள் பலமுறை வருத்தப்பட்டது ஒருபுறமாக அவளை கலங்கடித்தன.

தாய் தயங்கவும், மகனுக்கு ஆத்திரம் வந்தது. "என்ன? அந்த எட்டப்பி, என் விரோதி உபதேசம் உங்களுக்கும் ஏறிவிட்டதா? நான் படிக்கப் போவதை தடுக்கப் போகிறீர்களா? நான் நல்ல மதிப்பெண் வாங்குவது உங்களுக்கும் பிடிக்கவில்லையா? நான் வகுப்பில் ஃபெயில் ஆனால்தான் அவளுக்கு நிம்மதியா?" என்று படபடப்பாய்ப் பொரிந்து கொட்டினான்

மகளின் மனதை அறிந்த சுந்தரி உள்ளூர மிகவும் வருந்தினாள்.

ஆனால், அது பற்றி எடுத்துச் சொன்னால் மகனது வெறுப்பு இன்னும் பெருகும் என்று உணர்ந்து, "ஏன் கண்ணா இப்படிப் பேசுகிறாய்? ஓர் ஆத்திரம் அவசரம் என்றால் உன்னோடு எப்படித் தொடர்பு கொள்வது என்று யோசித்தேன்" என்றாள் அன்னை.

"அதுதான் என் செல் இருக்கிறதே!"

"அன்றும்தான் இருந்தது. எப்படியோ ஸ்விட்ச் ஆஃப் ஆகிவிடவில்லையா? நீயே, வேறு யாரிடமும் பேசிக் கொண்டும் இருக்கலாம். எதற்கும், நீ போகிற இடத்து எண்ணைக் கொடு" என்றாள் சுந்தரி.

"நீங்கள் என்னை நம்பவில்லை!" என்றான் பிள்ளை குரலை உயர்த்தி.

"ஏன் தம்பி தப்பாகவே யோசிக்கிறாய்? உன்னைக் கலவரப்

படுத்தக் கூடாது என்று நினைத்தேன். அம்மா உடம்பு முன்போல இல்லை. எப்போதேனும் கொஞ்சம் மூச்சு வாங்குகிறது. அக்கா வீட்டில் இருந்தால் பரவாயில்லை. அவள் பார்த்துக் கொள்ளுவாள். ஏதேனும் என்றால், உன்னிடமாவது சொல்ல முடிய வேண்டும் அல்லவா? அதுதான் லான்ட்லைன் மாதிரி ஏதாவது கேட்டேன்" என்று அன்னை சொன்ன விளக்கத்தில் பையன் சற்று அரண்டு போனான்.

"அம்மா உங்களுக்கு என்ன உடம்புக்கு? டாக்டரிடம் போனீர்களா? என்ன சொல்கிறார்?" என்று கவலையும் பயமுமாக, வேகத்துடன் கேட்டான்.

பாவமாகிவிட்டது பெற்றவளுக்கு "சே, பெரிதாக ஒன்றும் இல்லைம்மா. மூச்சு விடுவதில், எப்போதேனும் கொஞ்சம் பிரச்சினை வரும். அமைதியாக இருந்தாலே சரியாகிவிடும். எதற்கும் என்று ஓர் எச்சரிக்கை காரணமாகத்தான் உன்னிடம் தொடர்பு எண் கேட்டேன்" என்றாள் சுந்தரி இயல்பாக.

இரு மனமாகக் கண்ணன் சற்று நேரம் யோசித்தான்.

ரொம்பக் கவலைப்படும் படியாகத் தாயாருக்கு ஒன்றும் இல்லை. அப்படி இருந்திருந்தால், அக்கா வெளியூர் சென்றிருக்க மாட்டாள்.

அப்படியிருக்க, ஒன்றும் இல்லாததற்காக, நண்பர்களோடு குதூகலிப்பதை ஏன் விடவேண்டும்? இன்று விட்டால், இனி என்றேனும் இந்த வாய்ப்பு கிடைப்பதே அரிது. கிடைக்காமலே கூடப் போய்விடலாம்!

யோசித்துவிட்டு, ஒரு காகிதத்தில், ஓர் எண்ணை எழுதி அன்னையிடம் கொடுத்தான்.

"பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள், அம்மா. இது மிகவும் பெரிய இடத்து ஃபோன் நம்பர். ரொம்ப அவசியம் இல்லாமல் கூப்பிடவே கூப்பிடாதீர்கள். பெரிய பணக்காரரின் வீடு. எல்லோரும் சேர்ந்து படிக்க பெரிய ஹால் வேண்டும் என்று அங்கே போகிறோம். ஆனால் உடம்பு என்னமும் பண்ணினால் மட்டும் உடனே கூப்பிட்டு விடுங்கள். என்ன? சரிதானா? மறக்காதீர்கள். ஃபோன் நம்பர் பத்திரம். அப்போது... நான் கிளம்பட்டுமா?" என்று சற்று நேரம் தயங்கிவிட்டு, ஒரு முடிவுக்கு வந்தவன் போல "பத்திரம் அம்மா" என்று சுந்தரியை எச்சரித்துவிட்டு, வேகமாகக் கிளம்பிச் சென்றான் பையன்.



மகனை வழியனுப்பிக் கதவைப் பூட்டிக்கொண்டு வந்த சுந்தரிக்கு லேசாக சிரிப்பு வந்தது. உள்ளே இவ்வளவு பாசத்தை வைத்துக் கொண்டு சிடுசிடுவென்று என்ன பேச்சு பேசுகிறான்!

அடுத்து, தகவல் தரும் எண்ணை அழைத்து, மகன் கொடுத்த நம்பரை கொடுத்து முகவரி கேட்டாள். பெயர் பெற்ற மனிதருடையதுதான். கண்ணன் அங்கேதான் இருக்கிறான் என்றால் பயமில்லை!

நிம்மதி அடைந்தவளாக, சுந்தரி மகளைப் பற்றி யோசிக்கலானாள்.

அவளும் கெட்டிக்காரியே, எண்ணிப் போன காரியத்தை எப்படியும் சாதித்துக் கொண்டு வருவாள்.

அவளுடைய தந்தைக்கு பிறகு, அந்தக் குடும்பம் பற்றி, அவள் பேசியதே இல்லை. இப்போது சொல்லியிருக்கிறாள் என்றால்...

துணிந்து இனிய கற்பனைகளில் ஆழ்ந்தவள் அப்படியே தூங்கியிருக்க வேண்டும். செல்ஃபோனின் 'ரிங்டோன்' ஒலியில்தான் சுந்தரி விழித்திருக்க வேண்டும்.

ஹால் கடிகாரம் மணி பன்னிரண்டைக் காட்டியது.

இந்த நேரத்தில் யார் என்று உள்ளூர லேசான உதறலோடு செல்லை எடுத்தால் அழைத்தது காவல்துறை! அவர்கள் சொன்ன விவரத்தைக் கேட்டு அவளது நெஞ்சு பதறியது.

கண்ணனின் செல்லில் இருந்து, அவனுடைய பள்ளி ஆசிரியைக்கு ஆபாச வீடியோ ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்மணி கொதித்துப் போய் போலீசில் புகார் கொடுத்து விட்டார். அந்தச் செல்ஃபோன் யாருடையது என்று உடனே கண்டு பிடித்துவிட்டார்கள். ஆனால் அவன் கிடைக்கவில்லை. இப்போது அவன் எங்கே இருக்கிறான்? அவனை உடனே விசாரிக்க வேண்டும்.

விசாரிக்க வேண்டும் என்றால் பொருள் புரியாத முட்டாள் அல்ல சுந்தரி.

பையனும் படிக்கப் போகவில்லை.

சகவாசம் சரியில்லை என்று பெண் சொன்னாளே, அந்த நண்பர்களுடன் சேர்ந்து புத்திகெட்டு ஏதோ பண்ணியிருக்கிறான்.

ஆனாலும், ஆபாச வீடியோவோடு மகனைச் சேர்த்து நினைக்க முடியாமல், அந்த தாய் மனம் கலங்கியது 'பன்றியுடன் சேர்ந்த கன்றா'க மற்றவர்களோடு சேர்ந்து ஏதேனும் மடத்தனம்

செய்திருப்பானா?

எப்படியும் அந்த வீடியோ சென்றிருப்பது, கண்ணனின் செல்லில் இருந்து, எனவே குற்றவாளியாக மாட்டியிருப்பது அவன்தான். அகப்பட்டுக் கொண்டால், அவனைத் தனியே விட்டு, இந்த மாதிரி நண்பர்கள் கல் விழுந்த காக்கை கூட்டமாகப் பறந்து விடுவார்கள்!

தன்னந்தனியே காவல் நிலையத்தில் மகன்.... சுந்தரியால் நினைக்கக்கூட முடிய்வில்லை. அவன் தாங்க மாட்டான் உடைந்து போவான்.

"என்னம்மா பதிலைக் காணோம்? அவன் எங்கே? வீட்டில்தான் இருக்கிறானா? உள்ளே வந்து தேடும்படியாக பண்ணாதீர்கள். அவனாக வந்துவிட்டால் பிரச்சினை இர்ாது நாங்களாகத் தேடிப் பிடிக்க நேர்ந்தால், மரியாதை வேறு மாதிரி இருக்கும்! சொல்லுங்கள் அவன் எங்கே?" என்று அதட்டியது போலீஸ் குரல்.

"அதுதான் சார் யோசித்துக் கொண்டிருந்தேன். யாரோ நண்பனோடு சேர்ந்து படிக்கப் போனான். எங்கே என்று தெரியாதே..." என்றாள் அன்னை சமாளித்து.

"சீக்கிரமாக அந்த நண்பனைத் தேடிக் கண்டுபிடியுங்கள். பத்து நிமிஷத்தில் மறுபடியும் கூப்பிடுகிறேன்" என்றார் அதிகாரி அமர்த்தலாக.

மகனை எச்சரிக்க எண்ணி அவனை அழைக்கப் போன சுந்தரி சட்டென சுதாரித்தாள். இந்த செல் வழிப் பேச்சை அவர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

எதிர்ப்பக்கம் சற்றுத் தள்ளி உள்ள பிசிஓவில் பேசலாமா என்று யோசித்தபடி எட்டிப் பார்த்தால் எதிர்ச்சாரியில் வாட்டசாட்டமாக இரண்டு பேர் நிற்பது தெரிந்தது. காவல்துறையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். மற்றபடி, யார் என்ன விஷயம் என்று கேட்டு, இந்தப் பக்கத்துக் குடியிருப்புகளுடைய செக்யூரிட்டி ஆட்களே விரட்டியிருப்பார்கள்.

கண்ணனை எப்படி எச்சரிப்பது? வீட்டுக்கு வந்துவிடாதே என்று கூடச் சொல்ல வேண்டும் போலத் தெரிகிறதே!

சௌமினி இங்கே இருந்தால், யோசித்து ஏதாவது செய்வாள், இப்போது.

நெஞ்சப் படபடப்பை அடக்கியபடி யோசித்தாள். பக்கத்து ஃப்ளாட்டில் கல்லில் தோசை மாவு ஊற்றும் ஓசை கேட்டது.



"அந்த வீட்டுப் பெண் பிபிஓவில் வேலை செய்கிறவள். வேலை முடிந்து பன்னிரண்டு மணிக்கு மேல்தான் வருவாள். அவளுக்காகத்தான் தோசை தயாராகிறது.

ஓடிப் போய் பின்புற வராந்தா வழியே "லதாக்கா!" என்று கூப்பிட்டாள்.

"என்ன சுந்தரி?" என்று வந்தவளிடம் "செல் சார்ஜ் போய்விட்டது அக்கா. பையன் பசங்களோடு சேர்ந்து படிக்கப் போயிருக்கிறான். கொண்டுபோன டீயை மறக்காமல் குடிக்கச் சொல்ல வேணும். உங்கள் செல்ஃபோனைக் கொஞ்சம் தருகிறீர்களா?" என்று கேட்டாள்.

செல்லைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு "பேசிவிட்டுக் கூப்பிடு. நான் தோசையைப் பார்க்கப் போகிறேன்." என்று மீண்டும் உள்ளே போய்விட்டாள்.

நல்லதாயிற்று என்று அவசர அவசரமாக கண்ணன் கொடுத்த 'லான்ட் லைன்' எண்ணை சுந்தரி கூப்பிட்டாள்.

கண்ணனுடன் பேச வேண்டும் என்றதும், சில வினாடிகளில் அவன் வந்தான்.

"அம்மா, உடம்புக்கு என்ன?" என்று பதறியவன், அதொன்றுமில்லை என்றதும் "பின்னே ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று ஆத்திரப்பட்டான்.

நேரத்தை வீணாக்க விரும்பாமல், அழுத்தமான குரலில், வேகமாக பேசினாள். "இதோ பார் கண்ணா, குறுக்கே பேசாமல் நான் சொல்வதை மட்டும் கேள். உன் செல்லை 'ஸ்விட்ச் ஆஃப்'இல் வைத்திருக்கிறாய் என்று நினைக்கிறேன். அப்படியே இருக்கட்டும். அதன் மூலமாய் ஆபாச வீடியோ உன் பள்ளி ஆசிரியைக்குப் போயிருக்கிறது..."

"ஐயோ அம்மா, நானில்லை"

"குறுக்கே பேசாமல் கேள். விஷயம் போலீஸ் வரை போய்விட்டது. வாசலில் போலீஸ் நிற்பதால் வீட்டுக்கு வராதே. செல்லிலும் பேசாதே. என் செல்லிலும் தொடர்பு கொள்ளாதே. நீ வந்தாலோ, தொடர்பு கொண்டாலோ காவல் நிலையத்துக்குக் கூட்டி வரச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் வராதே... ஐயோடா, அக்காவும் ஊரில் இல்லையே... அவள் வரும் வரையேனும்... லதா ஆன்ட்டி வருகிறார்கள் அவர்களிடம் செல்லைக் கொடுக்க வேண்டும். என்

செல்லில் சார்ஜ் இல்லை என்று அவர்கள் செல்லில்... ரொம்பத் தேவைப்பட்டால் மட்டும், நீயும் அதிலேயே பேசு பைடாம்மா" என்று பேச்சை முடித்து, பக்கத்து வீட்டுக்காரப் பெண்மணியிடம் நன்றி சொல்லி செல்லைக் கொடுத்துவிட்டுத் தன் வீட்டினுள் சென்ற சுந்தரி, கைகால் நடுக்கத்தைக் கட்டுப்படுத்த மிகவும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று.

கண்ணனின் நிலையோ, இன்னமும் பரிதாபம்.

இந்த நண்பர்களைப் பெரிதாக கருதி, அவர்களோடு பழகுவதைத் தடுத்த உடன் பிறந்தவளை விரோதியாகவே நடத்தினான்.

உயர்வாக நினைத்த இந்த நண்பர்களோ, அவனை சமூக குற்றவாளியாக்கி போலீஸ் அவனைத் தேடும் அளவுக்குக் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள்.

இவர்கள் வைத்திருக்கிறார்கள் என்று தமக்கையிடம் பிடிவாதம் பிடித்து வாங்கிய செல்ஃபோன் டைம்பாம் மாதிரித் தோற்றமளித்தது.

சௌமினி இங்கே இருந்தாலாவது, யாரிடமாவது ஏதாவது உதவி கேட்டு அவனைக் காப்பாற்றக்கூடும். ஆனால், அவள் ஊரிலேயே இல்லை!

அப்படியானால் போலீஸ் லாக்கப்பில் மாட்டி, அடி உதை வாங்கிக் கேவலப்பட போகிறானா? வேறு வழி?

பத்திரிகைகளில், டீவி சேனல்களில் நாறப் போகிறான். குடியிருப்பை விட்டு வெளியேற்றவும் சொல்லலாம். அவமானம் தாங்காமல் அவனுடைய குடும்பமே அழியப் போகிறது.

அவர்களுக்கு என்ன நடந்தாலும் யாருக்கு என்ன அக்கறை இருக்கப் போகிறது?

அக்கறை கொண்டவர் இருக்கிறாரே! படிபடி என்றபோது கட்டைக் குரல் தடியன் என்று கோபப்பட்டானே! நல்லதற்குச் சொன்னார் என்று இப்போதல்லவா புரிகிறது.

இன்னும் முதலில் இங்கிருந்து வீட்டுக்கு விரட்டியவர்!

அவன் இவன் என்றது மாறி, மனம் தானாக அவர் என்று மரியாதை கொடுத்தது.

தனக்காக யாரேனும், ஏதேனும் செய்வது என்றால், அவர் மட்டுமே செய்யக்கூடும்!



செல்லைத் தொடாமல், அந்த லான்ட் லைனிலேயே தன் காப்பாளனைக் கூப்பிட்டான்.

வெகு நேரம் தூக்கமில்லாமல் தனசீலன் அப்போதுதான் அயர்ந்து உறங்கத் தொடங்கியிருந்தான்.

ஆனால் தொடர்ந்து செல் கிணுகிணுக்கவே, புரண்டு படுத்து, கையை நீட்டி செல்ஃபோனை எடுக்கும்போதே, அவனது உறக்கம் பெருமளவு கலைந்துவிட்டது.

இந்த எண் மிகவும் வேண்டிய வெகு சிலருக்குத்தான் தெரியும், யாராக இருக்கும்?

அழைத்தது கண்ணன் என்று தெரிந்ததும் "மணி என்ன தெரியுமா?" என்று முதலில் கோபத்தைத்தான் அவன் காட்டினான்.

ஆனால் உடனேயே மாறி "என்ன பிரச்சினை சொல்லு" என்று அமர்ந்த குரலில் விசாரித்தான்.

சின்னவன் பேசப் பேசக் குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு அவன் பேசினான்.

"நான் சொல்வதை நன்கு கவனித்து அதன்படி செய். இப்போதைக்கு போலீஸ் கண்ணில் பட்டுவிடாதே. செல்லையும் உன்னுடன் வைத்திராதே. அதை அந்தப் பக்கம் ஏதாவது குப்பைத் தொட்டியில் யாரும் அறியாமல் போட்டுவிட்டு, அங்கிருந்து எவ்வளவு தூரம் முடியுமோ, அவ்வளவு தூரம் போய்விடு. ஆட்டோ வேண்டாம். முடிந்தவரை வேகமாக நடந்தே போ. யாராவது கேட்டால் ரொம்ப நேரம் படித்தது தலையெல்லாம் சூடாகிவிட்டது. குளிர்காற்று முகத்தில் பட நடக்கிறேன் என்று நம்பும்படியாக சொல்லு. புத்தகம் ஏதாவது கையில் இருந்தால் ரொம்ப நல்லது. இருக்கிறதா?"

"இஇருக்கிறது. அம்மாவுக்காக... போக்குக்காட்ட எடுத்து வந்தேன்" என்றான் கண்ணன் குன்றிய குரலில்.

"எப்படியோ? புத்தகம் கையில் இருப்பது நல்லது. வைத்துக்கொள். அந்த அரசியல்வாதியின் வீடு என்றால், நீ இருக்கும் இடம் டி.நகர் அங்கிருந்து அசோக் பில்லர் போ. அங்கே நான் தருகிற விலாசத்தில் மாடிக்குப் போய், அங்கே மறைவாக இரு" என்று முகவரியும், செல்லும் வழியும் தெரிவித்தான்.

"அங்கே என்னை உள்ளே விடுவார்களா?"

"அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். காலையில் உன்

அம்மாவை, அவர்கள் சொன்னபடி பக்கத்து வீட்டுச் செல்லில் தொடர்புகொள். காவல் நிலையத்தில் காப்பாற்ற ஆள் இருக்கிறது என்று முதலில் தெரிவித்துவிடு. பிறகு, ஆன்ட்டியின் சொந்த செல்லில் பேசுவதாகவும், போலீஸ் உத்திரவு பற்றி அப்போது கூறும்படியும் சொல்லு. சொல்லிவிட்டு, அது போலவே செய். உன் அம்மா போலீஸ் கூறியதை சொன்னதும், எந்த காவல்நிலையம் என்று கேட்டு, அங்கே போவதாகவும் கூறிவிடு..."

"சா...ர்" என்று அஞ்சினான் ப்பயன்.

"பயப்படாதே. அங்கே உனக்கு எதுவும் நேராமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்... ஆனால்" என்று நிறுத்தினான் தனசீலன்.

"ஆ்ஆனால் என் என்ன சார்?" என்று மறுபடியும் பயந்தான் கண்ணன்.

"இப்போது நான் காப்பாற்றுவதற்கு என்ன பிரதி செய்வாய்? இந்த வழிக்கு இனிப் போக மாட்டேன் என்று அம்மா அக்காமீது சத்தியம் செய்வாயா?" என்று கறாக் குரலில் கேட்டான் காப்பாற்ற முன்வந்தவன்.

"கட்டாயம், சார். ப்ப்ராமிஸ்" என்று அழுதான், சின்னவன்.

"ஆபாசப் படத்தை.... அதையும் ஒரு டீச்சருக்கு அனுப்புவதா? நினைக்கவே எனக்கு கூசுதே! சினேகிதர்கள் சரியில்லை என்று அக்கா சொன்னபோது அவளைத் போய்த் திட்டினேன்.. இன்னும்..."

"இருக்கட்டும் எல்லாம் தனியே இருந்து பிறகு யோசி. இப்போது நேரத்தை வீணாக்காமல் அங்கிருந்து ஓசைப்படாமல் கிளம்பு. காலையில் ஒன்பது மணிக்கு வந்து உன்னை கூட்டிப் போகிறேன். பத்திரம், வேண்டாத யார் கண்ணிலும் பட்டுவிடாமல் ஜாக்கிரதையாகப் போ" என்ற எச்சரிக்கையோடு பேச்சை முடித்தான் அவன்.

அவன் சொன்னது போலவே அணுபிசகாமல் கண்ணன் செய்தான். செல்ஃபோனை அரசியல்வாதி பையன் வீட்டுப் பக்கம் இருந்த குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, ஓட்டம் என்று சொல்ல முடியாதபடி ஆனால் வெகு வேகமாக நடந்து, ஃபோன் குரல் சொன்ன வீட்டுக்குப் போய் சேரும்வரை அவனது இதயம் தொண்டையில் இருந்துதான் துடித்துக் கொண்டிருந்தது, அவ்வளவு பயம்!

கதவை ஒருதரம் தட்டி "கண்ணன் வந்திருக்கிறேன்" என்றதுமே



கதவு திறந்து, அவன் உள்ளே சென்றதும் மறுபடி சாத்தித் தாளிடப்பட்டது.

விடி விளக்கின் ஒளியில் சின்ன சோஃபாவும் அதில் ஒரு தலையணையும் பக்கத்தில் ஒரு நாற்காலி மேல் ஒரு தண்ணீர் பாட்டிலும் இருப்பது தெரிந்தது.

ஒரு கதவைச் சுட்டிக்காட்டி, "பாத்ரூம்" என்றதோடு, அடுத்த கதவைத் திறந்து உள்ளே போய்ச் சாத்திக் கொண்டாள். கதவைத் திறந்துவிட்ட நடுத்தர வயதுப் பெண்மணி.

ஆனால் இதுவே எவ்வளவு பெரிய உதவி! ஏதேதோ எண்ணி வருந்தியவன் எப்போது தூங்கினானோ!

அடித்துப் போட்ட மாதிரி உறங்கியவன் விழித்து எழுந்தபோது, தண்ணீர் பாட்டில் அருகே ரொட்டியும் ஜாமும் இருக்க, அந்தப் பெண்மணி வெளியே சென்றுவிட்டிருந்தாள்.

அறையில் மாட்டியிருந்த கடிகாரத்தில் மணியைப் பார்த்தவன் விழுந்தடித்து ஓடிப்போய், கையாலேயே பல் துலக்கி முகம் கழுவி, நலுங்கியிருந்த துணிமணிகளை இழுத்துவிட்டு, இயன்றவரை நல்லபடியாகத் தயாராகி ஃபோன் கட்டளைப்படி அனைத்தையும் செய்து முடித்தபோது, மணி ஒன்பதாகி இருந்தது. வாயில் கதவும் திறந்தது.

திறந்த கதவின் வழியே உள்ளே வந்தவனைப் பார்த்ததும், கண்ணனின் கண்கள் தெறித்து விழுந்து விடும் போல வியந்து "அஅண்ணா நீநீங்களா.... நீங்களா என்னைக் காப் காப்..." என்று வாய் குழறித் தடுமாறினான்.

"நானேதான் ஆனால், ரொம்பவும் அதிசயப்படாதே. நாம் இப்போது காவல்நிலையத்துக்குச் செல்ல வேண்டும். இரவெல்லாம் பக்கத்தில் இருந்து பாடம் சொல்லிக் கொடுத்தவனோடு இன்னும் கொஞ்சம் இயல்பாக பழக வேண்டும். அங்கே பல கண்கள் உன்னை.. நம்மை சந்தேகத்தோடு பார்க்கும், நினைவிருக்கட்டும்" என்று எச்சரித்தான் தனசீலன்.

"ஆங்... உம்..ம்., சரி அண்ணா. ஆனால் நான் நினைத்தது போல அக்காதானே உங்களை கூப்பிட்டு என்னை மிரட்டச் சொன்னது? நல்லதற்குத்தான் என்று இப்போது புரிகிறது. என்றாலும் அப்போது... ஆனால், என் ஊகம் சரிதானே?" என்று கேட்டான் சின்னவன்.

"இல்லை" என்றான் தனசீலன். "முதலில் அம்மாவும் அவளும்

நடு இரவில் பயமும் கவலையுமாகத் தெருவில் நின்றதைப் பார்த்து நானே உதவினேன். ஆனால், உன் அக்கா கெட்டிக்காரி அல்லவா? கொஞ்ச நாளில் கண்டுபிடித்து விட்டாள். சரி, இப்போது இந்தப் பேச்சு வேண்டாம். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். கையில் என்ன புத்தகம் வைத்திருக்கிறாய்? கொடு. எனக்கும் தெரிந்ததுதானா என்று பார்க்க வேண்டும்" என்று புத்தகத்தை வாங்கிப் பார்த்துவிட்டு, "நல்லவேளை" என்றான்.

காவல் நிலையத்தில் நடந்தது, கிட்டத்தட்டத் தனசீலன் எண்ணியதேதான்.

தன் விசிட்டிங் கார்டைக் கொடுத்துவிட்டு, அதன்பின் "இரவு முழுதும் பாடம் படிப்பதற்காகக் கண்ணன் என்னுடன் இருந்தான்" என்று அவன் கூறியதற்கு மதிப்பு இருந்தது.

அப்போதும் "இந்த பையன் ஏன் சார், உங்களிடம் படிக்க வர வேண்டும்? நீங்கள் என்ன டியூஷன் எடுக்கிறவரா?" என்று ஒருத்தர் கேட்கத்தான் செய்தார்.

ஆனால் "கூடுவாஞ்சேரி தாண்டி, அடுத்தடுத்த வீடுகளில் பத்து ஆண்டுகள் சேர்ந்து வளர்ந்திருக்கிறோம். புரியவில்லை என்று கேட்டால், நான் கற்றுக் கொடுக்க மாட்டேனா? இரு குடும்பங்களுக்கும், அவ்வளவு சினேகிதம் சார்! தம்பி மாதிரி வளர்ந்த பக்கத்து விட்டுப் பையன் பாடம் புரியவில்லை என்று கேட்டால், நீங்கள் சொல்லித்தர மாட்டீர்களா?" என்று தனா கேட்கவும், அந்தப் பேச்சு நின்றது.

அதற்குள் கண்ணனின் செல்லை ட்ரேஸ் பண்ணி, அரசியல்வாதி வீட்டுப் பக்கத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் கிடந்ததைக் கண்டெடுத்துக் கொண்டு வந்தார்கள்.

கண்ணன் உள்ளூர நடுங்க, அதிகாரி செல்லை வாங்கி மேஜை மேல் வைத்தார்.

"எல்லாம் இருக்கட்டும். இந்த செல்ஃபோனைப் பாருங்கள். இதிலிருந்து தப்பான..." என்று அதிகாரி சொல்லிக் கொண்டிருக்கும்போதே "ஏய் கண்ணா, இது உன்னதுதானா பார். விலை உயர்ந்த செல்... நேற்றிலிருந்து காணோம் என்று மூக்கால் அழுதாயே! அதுவேதானா? பார்த்துச் சொல்லு" என்றான் தனசீலன் வியப்பும் மகிழ்ச்சியுமாக.

புரிந்து கொண்டு "ஹைய்யோ! ஆமாம் அண்ணா. நேற்று



மாலையில் வீட்டுக்குப் போன போதே பையில் இல்லை. வீட்டில் தேடியும் கிடைக்கவில்லை. எங்கே சார் இருந்தது?" என்று அப்பாவியாக வினவினான் கண்ணன்.

தனசீலனும் கேள்வியாக நோக்குகையில் இவர்களிடம் கேள்வி கேட்ட அதிகாரியின் காதில் ஒருவர் கிசுகிசுத்தார்.

செல்வாக்கு மிகுந்த அரசியல்வாதியுடைய மகன் பற்றி, அரசல் புரசலாகப் பேச்சு கிளம்பியிருந்தது. தகப்பனாரும் கொஞ்சம் ஒரு மாதிரிதான். இதைப் பெரிது படுத்தாமல் விட்டுவிடலாமே என்று தனசீலன் எதிர்பார்த்த யோசனைதான் சொல்லப் பட்டிருக்க வேண்டும்.

திருட்டுச் செல்லில் தன் பெயர் காட்ட விரும்பாத யாரோ கோழை செய்தது என்று, பிரச்சினை முடிந்தது. கிட்டத்தட்ட அது உண்மையும்தானே? கண்ணன் அறியாமல், அவனது செல் மூலம் செய்யப்பட்ட குற்றம்.

கண்ணனை வீட்டுக்குக் கூட்டிப் போய் விட்ட தனசீலனைப் பார்த்ததும், "தனா தனா, நீயாம்மா?" என்ற சுந்தரியின் விழிகளில் அருவியாய் நீர் பெருகியது.

"உங்கள் யாரையும் காணாமல், இவரும் போய், என்ன பாடு பட்டோம் தெரியுமா? ஆனால் இப்போது எல்லாம் சரியாகி விட்டதாம்மா? அதற்காகத்தானே சௌமி திருநெல்லிவேலிக்குப் போகிறேன் என்றாள். அங்கே போய் வந்தால், உன் வீட்டோடு உள்ள பிரச்சினை எல்லாம் நன்றாகிவிடும் என்றாள். நன்றாகி விட்டதுதானே? நாலு வருஷமாகத் தவம் கிடக்கிறாளப்பா. என் பெண், அவள் அப்பா போனது நீங்கள் யாரும் கண்டுகொள்ளவே இல்லை என்று ரொம்பவும் மனம் ஒடிந்து போய்..." என்றவளை இடையிட்டு, "ஆன்ட்டி இப்போது அந்தக் கதை எதற்கு?" என்றான் தனசீலன்.

பெரியவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்த கண்ணன் "அம்மா அப்படியானால் தனா அண்ணாவும், அக்காவும் வந்து.. வந்து இரண்டு பேருக்கும் லவ்வா?" என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

தாயார் ஆறுதலாகப் பார்க்க "இதெல்லாம் உன்னைப் போல பச்சாக்கள் பேசக்கூடாது" என்றான் தனசீலன்.

"ஆன்ட்டீ, உங்கள் ஸ்பெஷல் காஃபி ஒரு கப் கிடைக்குமா?" என்று சுந்தரியிடம் கேட்டான்.

"ஐயோ என் புத்தியைப் பாரேன். இத்தனை வருஷம் கழித்து வந்த பிள்ளையை ஒன்றும் கொடாமல் நிற்க வைத்துப் பேசிக் கொண்டு உட்காரப்பா. இதோ காஃபி போட்டு எடுத்து வருகிறேன்" என்று அவள் பின்புறம் சென்றாள்.

கண்ணனிடம் திரும்பி "உன் அறையைப் பார்க்க வேண்டும். பார்க்கலாம்தானே?" என்று கேலி போலக் கேட்டான்.

லேசாக முகம் கன்ற "தப்பாக ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமா, அண்ணா? வாருங்கள். வந்து பாருங்கள். ஒரே ஒரு தரம் பீர் குடிக்க இருந்தேன். அதற்குள் நீங்கள் கூப்பிட்டு மிரட்டினீர்களா? வந்துவிட்டேன். அதற்கே என்னை அமுல்பேபி என்பார்கள். அந்த அளவுக்கு நான் நான் அவர்களைப் பெரிதாக நினைத்து... நினைத்து பிரமிப்பாய் இருந்ததே தவிர, மற்றபடி ஒன்றும் கிடையாது..." என்றபடி தனசீலனைத் தன் அறைக்குக் கூட்டிப் போனான் சின்னவன்.

காஃபி தயாரித்துக் கொண்டிருக்கும்போது வாயில் கதவு திறக்கும் சத்தம் கேட்க "யார்? சௌமியா?"என்று வினவியவாறு, சுந்தரி எட்டிப் பார்த்தாள்.

ஓய்ந்து நின்ற மகளைப் பார்த்து "என்னம்மா?" என்று சுந்தரி முன்னே வர, அடிபட்ட கன்றாய், கைகளில் இருந்த பைகளை வீசிவிட்டு, "அம்மா!"என்று கதறலுடன் சௌமினி தாயிடம் ஓடினாள்.

தாயின் தோள் வளைவில் முகத்தை புதைத்து "ஐயோ அம்மா, நான் என்ன செய்யட்டும்? போன காரியம் அடியோடு தோற்று விட்டதே. ஒன்றும் செய்ய முடியாது என்றுவிட்டாரே. தனா கேட்ட ருசு கிடைக்கவில்லையே! இனிமேல் தனா... தனாவைப் பார்க்கக்கூட முடியாதும்மா.. அந்த ஆறுமுகம் சொன்னால் நம்புவதாகச் சொன்னாரே. அவர்... அவர் சொல்லவே... முடியாது என்று விட்டாரம்மா. இனிமேல் தனா என்னை நம்பவே மாட்டாரே அவர் வீட்டுப் பக்கம் கூட வரக் கூடாது என்று... அம்மா வாழ்க்கை முழுதும் அவரைப் பார்க்கக் கூட முடியாமல்... நான் என்ன செய்வேன்? எப்படி வாழ்வேன்..." என்று பொங்கிப் பொங்கி அழுத மகளை அணைத்துத் தட்டி கொடுத்தபடி "இல்லை கண்ணு. அழாதே. தனாத் தம்பி இங்கேதான் இருக்கிறது. அழாமல் திரும்பிப் பார்" என்றாள் அன்னை.



தாயின் பேச்சை அவள் உணர்ந்தால்தானே?

தோற்று வந்ததையே சொல்லிச் சொல்லி அழுதாள்.

"விட்டுவிடுங்கள் ஆன்ட்டி, அவளுக்குப் பிடிவாதம் அதிகம்." என்றான் அரவம் கேட்டு வெளியே வந்து அனைத்தையும் பார்த்த தனசீலன்.

செவியற்றவள் போல தொடர்ந்து அழுதவள் திடுமென அந்தக் குரல் உறைக்க, விலுக்கென நிமிர்ந்தாள்.

நிஜமாகவே தனசீலன்தான். அவன் எப்படி இங்கே வந்தான் என்பது உறைக்கவில்லை. மாறாக, கேட்ட சான்றுதான் அப்போதும் அவளது மனதைக் குடைந்தது.

"தனா, ராஜகெம்பீரன் சாருடைய விசிறி அந்த அதிகாரி. வாய் வார்த்தையாகக் கூட, நடந்ததை ஒப்புக் கொள்ளவே முடியாது என்றுவிட்டாரே. நீங்கள் கேட்ட சான்றுக்கு வழியே இல்லையே! கிகிடைக்கவே கிடைக்காதே!" என்றாள் கண்ணீர் வழிய.

மகள் அழுவது பொறுக்காமல் "தம்பீ..." என்றாள் சுந்தரி.

அவளிடம் லேசாக முறுவலித்து "ஆன்டீ. உங்கள் மகள் திருநெல்வேலிக்குக் கிளம்பிப் போனதுமே, நான் என் பெற்றோரிடம் ஒரு மாதிரி எல்லாம் சொல்லி, திருமணத்துக்கு அவர்களிடம் சம்மதமும் பெற்று வைத்திருக்கிறேன். இவள் வந்ததும் கூட்டிப் போக நினைத்தால், இவளானால் கண்ணீர் வெள்ளத்தில் நம்மை மூழ்கடித்துத்தான் தீருவது என்று பிடிவாதம் பிடிக்கிறாள். இவளை எப்படி சமாளிப்பது? இந்த அழுத முகத்தோடு கரகரவென்று இழுத்துப் போய் காரில் ஏற்ற முடியுமா? எப்படியாவது கொஞ்சி கெஞ்சி கொஞ்சம் சீக்கிரமாகக் குளித்து தயாராகிக் கிளம்பச் சொல்லுங்கள் ஆன்ட்டி!" என்றான் தனசீலன்.

வியப்பால் விழிகள் வட்டமாக விரிய "தனா...!" என்றாள் அவள்.

"பாருங்கள் ஆன்ட்டி, இன்னமும் கண்களை சாசராக விரிக்கிறாளே தவிர, ஆள் அசையவே காணோம். முடிந்த அளவு விரைவாக ஒரு திருமணத்தை நடத்துவது என்றால் மளமளவென்று எத்தனை வேலைகள் செய்தாக வேண்டும்? கல்யாணப் பெண்இப்படி அசைய மாட்டேன் என்று மக்கு மாதிரி நின்றால், நான் யாருக்குத் தாலி கட்டுவது?" என்று மீண்டும் சுந்தரியிடமே குறைப்பட்டான் தனசீலன்.

இவன்தான் அவளுடைய சீலன்! தன்னைப் பெரிதாகக் காட்டி,

பரிதாபப்பட்டு அவளை ஏற்கிற மாதிரி எதுவும் பேசாமல், கேலி கிண்டலில் மனதைக் காட்டுகிறவன்!

மயக்கத்தோடு பார்த்திருந்த சௌமினி சிலைக்கு சட்டென உயிர் வந்தது "யாருக்கா? என்னைத் தவிர வேறு யாருக்கு நீங்கள் தாலியைக் கட்ட முடியும்? அம்மா, நான் குளிக்கப் போகிறேன். ஒரு சேலை... இல்லை, அது கட்டக் கொஞ்சம் தாமதமாகும். ஒரு சல்வார் செட் எடுத்து வையுங்கள். ஐந்தே நிமிஷம், ரெடியாகி வருகிறேனா இல்லையா, பாருங்கள்" என்று சவால்விட்டு அறைக்குள் மறைந்தாள் சௌமினி.

அவளது வேகத்தைப் பார்த்து மற்ற மூவரும் வாய் விட்டு நகைத்தனர்!

**சுபம்**

---

விவேக் பப்ளிகேஷன்ஸ் சார்பில் வெளியிடுபவரும், ஆசிரியரும், எஸ்பி. ராமு, 6/84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. அச்சிட்டவர் எஸ்.பி. மெய்யப்பன், எஸ்.பி.எம். பைன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 005. ஆசிரியர் எஸ்பி. ராமு, தொலைபேசி : 2844 0617, ஃபேக்ஸ்: 2844 0617



